பக்கங்கள்:27 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 05 ஞாயிற்றுக்கிழமை 21.11.2021 கதிர் 16

**இது ரகசியம் அல்ல!**

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 2001 - 2006 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடந்த அமைதிப் பேச்சு முயற்சிகளின் போது இடைநடுவில் நோர்வே அனுசரணைப் பணி வகித்தது. நோர்வேயின்

பக்கம்02

# சீன உரத்தை இறக்க முடிவு

## கடைசியில் அடிபணிந்தது அரசு

(ந.லோகதயாளன்)

கொழும்பு, நவம்பர் 21

தீங்கு விளைவிக்கும் பக்டீரியா இருப்பதால் ஏற்க மாட்டோம் என நிராகரித்த சீன சேதன உரத்தை கடைசியாக உரிய கப்பல் தாமதக் கட்டணச் செலவுகளுடன் இறக்கி, ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை அரசு இணங்கியிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

2

## ‘ஒரே நாடு – ஒரே சட்டம்’ கூட்டம்; ஊடகங்களுக்கு அனுமதி மறுப்பு

(வவுனியா நிருபர்)

ஒரே நாடு, ஒரே சட்டத்தின் செயலணித் தலைவர் ஞானசார தேரர் வடக்கில் முதலாவதாக நடத்திய கூட்டத்தில் செய்தி சேகரிக்க ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் முதலாவது கூட்டம் வவுனியா மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று பிற்பகல் தொடக்கம் மாலை வரை நடைபெற்றது.

‘ஒரே நாடு, ஒரே சட்டம் செயலணியின் சட்டம் தொடர்பான கருத்தறியும் கூட்டம் ஞானசார தேரர் தலைமையிலான செயலணியின் பங்கு பற்றுதலுடன் நடைபெற்றது.

2

## 998 கிலோ ஜெலற்றீன் குச்சிகள் பேசாலையில் நேற்று சிக்கின!

(ந.லோகதயாளன்)

இந்தியாவில் இருந்து கடத்திவரப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படும் 998 கிலோ ஜெலற்றீன் குச்சிகள் மன்னாரில் நேற்று கைப்பற்றப்பட்டுள்ளன.

மன்னார், பேசாலைப் பகுதியில் கடற்படையினரும் பொலிஸாரும் இணைந்து நடத்திய தேடுதலின்போது

2



## மன்னாரில் மர்மப்பொருள்





(ந.லோகதயாளன்)

மன்னார் - சௌத்பார் இராணுவ முகாமுக்குப் பின் பகுதியிலுள்ள கடற்கரைப் பகுதியில் நேற்று மர்மப்பொருள் ஒன்று கரையொதுங்கியதால்

2

## மேலும் 22 பேர் மரணம்

இலங்கையில் மேலும் 22 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசதகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய

2

## மத்திய வங்கியின் ஆளுநர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்



(இ.கலையமுதன்)

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நேற்று யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளுக்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டார்.

இலங்கை மத்திய வங்கியின் சௌபாக்கியா கடன்

2

## நாம் வாழுமிடங்களிலும் எம் இதயங்களிலும் தீபமேற்றி ஆத்மாக்களை நினைவு கூர்வோம்

### தமிழரசுத் தலைவர் மாவை செய்தி



இறந்து எம்மைவிட்டுப்பிரிந்த ஆத்மாக்களை நினைவுகூரும் முகமாக அமைதியாக எம் வாழுமிடங்களில், நம் இதயங்களில் நினைவுகூர்ந்து விளக்கேற்றி ஆத்ம கடன் நிறைவேற்றுமாறு இலங்கை தமிழரசுகட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பாக அவரது ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை அரசு இறந்தவர்களின் ஆத்மாக்களை நினைவு கூருவதைத்தடைசெய்வதுபோர்க்களத்தைவிட தமிழ்பேசும் மக்கள் நெஞ்சில் ரணகளத்தை எரிய விடுவதாகவே இருக்கிறது. மனிதகுலத்தின்

23

## விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் தாயகம் திரும்புவதில் நெருக்கடி

(ந.லோகதயாளன்)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் 23 பேரும் தாய கம் திரும்புவதில் தொடர்ந்தும் நெருக்கடி நிலவுகின்றது எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஒக்டோபர் மாதம் 14ஆம் திகதி பருத்தித்துறை கடற்பரப்புக்குள் ஊடுருவிய வேளை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 23 பேரும் தொடர்ந்தும் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில்

23

## நேற்று 725 பேருக்கு கொரோனா உறுதி

இலங்கையில் நேற்று 725 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப் பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 55 ஆயிரத்து 929 ஆக எகிறியுள்ளது.

இவர்களில் 15 ஆயிரத்து 468 பேர் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 442 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 26 ஆயிரத்து 353 ஆக அதிகரித்துள்ளது.

## மீனவர்களைச் சந்திக்க இராமேஸ்வரம் இன்று விரைகின்றார் இந்தியத் தூதுவர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.21

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடலுக்குள் எல்லை தாண்டும் பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே இன்று கொழும்பில் இருந்து இராமேஸ்வரம் செல்கிறார். இன்று மாலை அங்குள்ள மீனவர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்திக்கும் அவர், இன்று இரவே அங்கிருந்து கொழும்பு திரும்புவார் என எதிர் பார்க்கப்படுகின்றது.

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி, இலங்கைக் கடற்பரப்பிற்குள் உள் நுழைந்து, மீன் பிடிப்பதனால் இலங்கை மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும், அதனால் இந்திய மீனவர்களிற்கு ஏற்படக்கூடிய சட்ட ரீதியிலான நெருக்கடிகள் குறித்தும் அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற

2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தரப்பில் பிரதான அனுசரணைப் பணியை மூவர் மாறி மாறி வகித்தனர். எரிக் சொல்ஹெய்ம், விடார் ஹெல்கிஸன், ஹன்ஸன் போவர் ஆகியோரே அவர்கள்.

அனுசரணைப் பணிக்காக நோர்வேயிலிருந்து இலங்கைக்குப் புறப்படும் அனுசரணைப் பொறுப்பாளர்கள் பெரும்பாலும் லண்டன் வழியாகவே கொழும்புப் பயணத்தை மேற்கொள்வர்.

எரிக் சொல்ஹெய்ம் போன்றோர் அப்படி பயணிக்கும் போது லண்டன் ஹித்ரோ விமான நிலையத்தில் ஒரு பத்துப் பன்னிரண்டு மணி நேரம் தரிப்பது போல விமானப் பயணங்களை ஒழுங்குபண்ணுவர். அச்சமயம் விமான நிலையத்தில் இருந்து நியூமோல்டனில் இருக்கும் மதியுரைஞர் பாலசிங்கம் வீட்டிற்குச் சென்று பாலா தம்பதியரோடு மூன்று, நான்கு மணி நேரம் செலவிடுவர். கொழும்புப் பயணம் முடித்து நோர்வே திரும்பும் போது மீண்டும் வழியில் பாலசிங்கம் வீட்டு ‘விசிட்’ கட்டாயம் இருக்கும். பாலா – சொல்ஹெய்ம் நட்புறவு பற்றி சுவையான, ஆழமான தகவல்கள் உண்டு. பிறிதொரு சமயத்தில் அவற்றைப் பகிர்வேன்.

சொல்ஹெய்மோ, ஹெல்கிஸனோ அல்லது போவரோ, கொழும்பு, வன்னி ‘விசிட்’டுகளை முடித்துக் கொண்டு லண்டன் வழியாக ஒஸ்லோ திரும்ப முன்னர், இடையில் ஒரு பயணம் – இடைவழியில் – நிச்சயம் இருக்கும். அது புதுடில்லிப் பயணம்.

லண்டனிலும், கொழும்பிலும், வன்னியிலும் அமைதி முயற்சிகள் தொடர்பாகத் தாம் (நோர்வேத் தரப்பு) எடுத்த முயற்சிகள் குறித்து இந்தியாவுக்கு விளக்கமளிப்பது அதன் நோக்கமாகும். இது தவறாமல் – ஒழுங்காக – நடக்கும் ஏற்பாடு. பெரும்பாலும் இந்தியத் தரப்பில் அப்போது தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக இருந்த எம்.கே.நாராயணனுக்கு அமைதி முயற்சிகளின் செல்நெறி குறித்து அவ்வப்போது விளக்கமளிக்கப்படும். இந்த விடயங்களில் புதுடில்லியை இருட்டில் வைத்திருந்தால் அமைதி முயற்சிகளுக்கு அது பாதிப்பாகிவிடும் என்பது அனுசரணைத் தரப்பான நோர்வேயின் எண்ணம். ஆகவே நோர்வேயின் எத்தனங்கள் குறித்து ஒழுங்குமுறை விவரங்களுடன் முழுத் தகவல்களும் இந்தியாவுக்குப் பரிமாறப்பட்டன.

இந்த விடயத்தை நான் இப்போது குறிப்பிடுவதற்கு ஒரு காரணம் உண்டு.

இப்போது அமெரிக்காவில் (சனியும், ஞாயிறும் கனடாவில்) நிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு – உலகத் தமிழர் பேரவை பிரதிநிதிகளும், நோர்வே அனுசரணையாளர்கள் போல அமெரிக்க ஊடாட்ட நடவடிக்கைகள், வொஷிங்டன் சந்திப்பு போன்றவை பற்றிய முழு விடயங்களையும் இந்தியாவுக்கு உரிய முறையில் பகிர்ந்து வருகின்றனர் எனத் தெரிகின்றது.

இப்போதைய அமெரிக்கத் தொடர்பாடல்கள், இந்தியாவை இருட்டில் வைத்து முன்னெடுக்கப்படவில்லை – இந்தியாவுக்கு முழு அளவிலான தகவல் வழங்கும் விதத்திலேயே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதில் கூட்டமைப்புத் தரப்பு – சம்பந்தன், சுமந்திரன் தரப்பு – மிகக் கவனமாக இருப்பதாகத் தெரிகின்றது.

முதல் இரண்டு நாளும் அமெரிக்காவில் இடம்பெற்ற தமது சந்திப்புகள் பற்றிய விடயங்கள், விவரங்களை, அமெரிக்காவுக்கான இந்தியத் தூதுவர் தரஞ்ஜித் சிங் சந்துவை இரவு விருந்துடனான சந்திப்பில் பங்குபற்றி விளக்கினார் கூட்டமைப்புப் பிரதிநிதி சுமந்திரன்.

அதற்குப் பின்னர், கடந்த வெள்ளிக்கிழமை வரை நியூயோர்க்கில் நடந்த உரையாடல்கள், பேச்சுகள், ஆராய்வுகள் பற்றிய தகவலை அங்கு ஐ.நாவுக்கான இந்தியத் தூதுவர் திருமூர்த்தியைச் சந்தித்து விளக்கியுள்ளார் சுமந்திரன்.

அமெரிக்காவை நம்பி இந்தியாவைக் கைவிடுவது ‘அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட கதை’ மாதிரியாகி விடும் என்பது கூட்டமைப்புக்கு நன்கு தெரியும்; புரியும். அதனால்தான் இந்த ஏற்பாடு.

★ ★ ★

தென்னிலங்கையில் பெரிதும் மதிக்கப்படும் கல்விமான்களில் ஒருவர் பேராசிரியர், கலாநிதி வண. அகலக்கட சிறிசுமண தேரர். கொழும்புப் பல்கலைக் கழகத்தின் சிங்களத் துறையில் பேராசிரியராகப் பணியாற்றுபவர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பதவிக் காலத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு தினத்தில் அநுராதபுரத்தில் மிக உயரமான தாது கோபுரம் திறந்து வைக்கப்பட்ட நிகழ்வை ஒட்டி அழைக்கப்பட்ட இரண்டாயிரம் விருந்தினர்களில் அவரும் ஒருவர். அவர் அந்த நிகழ்வில் பங்குபற்றவில்லை. மாறாக அதையொட்டி ஒரு கருத்து வெளியிட்டிருக்கின்றார். அது நோக்கற்பாலது.

“யுத்தம் பேரழிவுகளுடன்தான் முடிந்தது. அந்த வெற்றியைக் கொண்டாடுவதற்கு பௌத்த சமயத்துக்கு ஒரு புதிய தாதுகோபுரத்தை கட்டி அர்ப்பணிப்பது என்பது பொருத்தமேயற்றது. யுத்தத்தையும் பேரழிவுகளையும் ஏற்படுத்தும் ஒரு விடயத்தை பௌத்த தர்மத்துடன் இணைப்பது மிகத் தவறாகும். யுத்தத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்களாவர். அவர்களின் உணர்வை நோகடிக்கும் விதத்தில், யுத்தத்தின் வெற்றிக்கு இப்படி பௌத்தத்தின் பெயரால் தாதுகோபுரம் கட்டி சமயத்துக்கு அர்ப்பணிப்பது மேலும் ஈனத்தனமான வேலை” – என்ற சாரப்பட அவர் கருத்து வெளியிட்டிருக்கின்றார் எனத் தென்னிலங்கைச் செய்திகள் தெரிவித்தன.

சிங்களத் தேரர்கள் மத்தியிலும் இத்துணை மேன்மையான துறவிகள் இருக்கவே செய்கின்றனர்.

– மின்னல் –

## ‘ஒரே நாடு - ஒரே சட்டம்’...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது அழைப்பு விடுக்கப்பட்ட சமூக மட்ட உறுப்பினர்களிடம் மட்டும் ஒரே நாடு, ஒரே சட்டம் தொடர்பான கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் கேட்டறியப்பட்டன.

குறித்த கலந்துரையாடலில் செய்தி சேகரிப்பதற்குச் சென்ற வவுனியா ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. (100)

## மத்திய வங்கியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திட்டத்தின் கீழ் பயனடைந்த அச்சுவேலி கைத்தொழில் பேட்டை, வசாவிளான் இயற்கை உர தோட்டம் உள்ளிட்ட சிலவற்றைப் பார்வையிட்டதுடன் பயனாளிகளுடனும் கலந்துரையாடினார்.

இன்று காலை 8 மணிக்கு தனியார் விடுதி ஒன்றில் நடைபெறவுள்ள இலங்கை மத்திய வங்கியின் விசேட கலந்துரையாடலில் பங்கேற்பதற்காக யாழ்ப்பாணம் வருகை தந்த மத்திய வங்கி ஆளுநரது விஜயம் முக்கியத்துவமானதாகப் பார்க்கப்படுகின்றது.

மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் பொறுப்பேற்ற பின்னர் யாழ்ப்பாணத்துக்கான அவரது முதலாவது விஜயம் இதுவாகும்.

## மன்னாரில் மர்மப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது.

இந்த மர்மப்பொருள் தொடர்பாக அப்பகுதி கடற்படையினர் மன்னார் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினருக்குத் தகவல் வழங்கிய நிலையில் உடனடியாக அப்பகுதிக்குப் பொலிஸார் மற்றும் அதிரடிப் படையினர் வருகை தந்தனர்.

மர்மப்பொருளானது பல்வேறு மின் இணைப்புகளுடன் காணப்பட்டதால் விசேட அதிரடிப்படையினர் குறித்த மர்மப் பொதியை மீட்டு சோதனை செய்தனர்.

எனினும், குறித்த மர்மப் பொதியில் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய எவ்வித பொருள்களும் இல்லை எனத் தெரியவந்துள்ளது.

இந்த மர்மப்பொருள் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சீன உரத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒன்பது மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இந்த உரத்துக்கு, அதை உரிய காலத்தில் இறக்காமல், கடலில் அலைய விட்ட தாமதத்துக்கான கட்டணமும் சேர்த்து மேலதிகமாக 35 மில்லியன் அமெரிக்க டொலரும் செலுத்தி, அதனை இலங்கை இறக்குவதற்கு இணங்கியிருப்பதாகத் கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

சீன – இலங்கை நட்புறவில் வீண் குழப்பங்களைத் தவிர்ப்பதற்காக இந்த முடிவை அரசு எடுத்திருப்பதாக அரச உயர் வட்டாரம் ஒன்றை மேற்கோள்காட்டி செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது.

கேள்விப்பத்திர நடைமுறைக்கு அமைய இலங்கை இந்த சேதன உரத்துக்கு சீன நிறுவனம் ஒன்றுக்கு விநியோகக் கட்டளை வழங்கியிருந்தது.

கப்பலில் அனுப்பட்ட உரம் இலங்கைக்கு வந்து கொண்டிருந்த சமயத்தில், அதன் மாதிரிகளை பகுப்பாய்வு செய்த இலங்கை தேசிய தாவரங்கள் தனிமைப்படுத்தல் அமைப்பு, இந்த உரத்தில் தீங்கு விளைவிக்கும் பக்டீரியாக்கள் உள்ளன என்று தெரிவித்தது.

இரண்டு தடவைகள் மேற்கொள்ளப்பட்ட சோதனைச் சான்றிதழ்கள் அப்படி வந்தமையால், அந்த உரத்தை ஏற்க முடியாது என இலங்கை பெரிய ‘பிகு’ பண்ணியது.

எனினும், திடீரென இலங்கை அதிகார பீடம் சீன வற்புறுத்தலுக்கு அடி பணிந்து, மண்டியிட்டு, உரிய தாமதக் கட்டணங்களுடன் அதனை இறக்குமதி செய்ய இணங்கியிருப்பதாகச் செய்திகள் வெளிவந்திருக்கின்றமை பல மட்டங்களிலும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விடயம் நீதிமன்றம் வரைச் சென்றிருப்பதும் –

இந்த உரத்துக்கான கொடுப்பனவு எதனையும் வழங்கக் கூடாது என சம்பந்தப்பட்ட மக்கள் வங்கிக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு வழங்கியிருப்பதும் –

உரத்துக்கான கொடுப்பனவை வழங்கத் தவறியமைக்காக இலங்கையின் மக்கள் வங்கியை சீனா கறுப்புப் பட்டியலில் சேர்த்திருப்பதும் – தெரிந்தவையே.

## மீனவர்களைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இந்தியத் தூதுவரை நேரில் சந்தித்து கலந்துரையாடியமையோடு, இலங்கை மீனவர் சங்கப் பிரதிநிதிகளையும் தம்முடன் அழைத்துச் சென்று இந்தியத் தூதுவருக்கு நேரில் விளக்கமளித்திருந்தார் என்பது தெரிந்ததே.

இந்தப் பேச்சுக்களின் அடிப்படையில், தமிழக மீனவர்கள் எல்லை தாண்டும் விடயத்தினால் உருவாகும் நெருக்கடிகள், அதனால் எழும் விடயங்கள் தொடர்பில் நேரில் தமிழக மீனவர்களிற்கு எடுத்துக் கூறும் வகையில் கொழும்புக்கான இந்தியத் தூதுவர் இன்று இராமேஸ்வரத்திற்குப் பயணித்து, அங்கே மாலை 4 மணிக்கு தனியார் விடுதி ஒன்றில் மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார். இன்று காலையில் அவர் இலங்கையில் இருந்து பயணித்து, இரவு மீண்டும் இலங்கை திரும்பவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேநேரம் இராமேஸ்வரம் பகுதி மீனவ அமைப்பின் பிரதிநிதிகளை இரு தினங்களுக்கு முன்னர் தமிழகக் கடலோரப் பொலிஸார் சந்தித்து, இது தொடர்பில் எச்சரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## மேலும் 22 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 108 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட 22 சாவுகளில் 9 பெண்களும் 13 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 998 கிலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சந்தேகத்துக்கிடமான இருவர் கைது செய்யப்பட்டதோடு அவர்களிடம் இருந்தே இந்த 98 கிலோ ஜெலற்றின் குச்சிகளும் மீட்கப்பட்டுள்ளன.

இதேநேரம் கைதுசெய்யப்பட்ட இருவரும் மன்னாரைச் சேர்ந்தவர்கள் என்பதோடு சந்தேகநபர்கள் சான்றுப் பொருட்களுடன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
21
—
03
—
1938



மறைவு
19
—
11
—
2021

## முருகேசம்பிள்ளை விசுவநாதன்

(ஓய்வுபெற்ற கொள்வனவு உத்தியோகத்தர்,
ப.நோ.கூ சங்கம், காரைநகர்)

காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும், கருங்காலியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசம்பிள்ளை விசுவநாதன் அவர்கள் 19.11.2021ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசம்பிள்ளை – வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா – தங்கம்மா தம்பதிகளின் மருமகனும், மேனகையின் அன்புக் கணவரும், கிருஷ்ணவேணி (பிரதேச செயலகம் – காரைநகர்), குகநேசன் (கோட்டக்கல்வி அலுவலகம் – காரைநகர்), பாலேந்திரன் (இலங்கை வங்கி – மன்னார்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருலோகேஸ்வரன் (பிரதேச செயலகம் – காரைநகர்) அவர்களின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரரும், காந்திமதியின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (21.11.2021) காலை 8.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீலங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கருங்காலி, காரைநகர்.**
**0775748617, 0778741813**

**தகவல்:-**
**குடும்பத்தினர்**

# சரத் பொன்சேகாவிடம் அடி வாங்க நேரிடும்!

## ஆளும் தரப்பினரை எச்சரித்த குமார வெல்கம

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிடம் கவனமாக இருக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.


நாடாளுமன்றத்தில் வரவு–செலவுத் திட்டத்தின் இரண்டாம் முறை வாசிப்பின் மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் சரத் பொன்சேகாவை சிறையில் அடைத்தமைக்கான பலாபலன்களை அதனைச் செய்த தரப்பினர் எதிர்காலத்தில் அனுபவிக்க நேரிடும்.

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து போட்டியிட்டார் என்ற காரணத்துக்காகவே சரத் பொன்சேகா சிறையில் அடைக்கப்பட்டார். இது முற்றிலும் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை.

தனது எதிர்கால அரசியல் பயணத்தில் சரத் பொன்சேகா எந்த இடத்திற்கு சென்று நிற்க போகிறாரோ தெரியவில்லை. அப்படியான இடத்திற்கு வரும் சந்தர்ப்பத்தில் சரத் பொன்சேகாவுக்கு எதிராக அரசியல் பழிவாங்கலை மேற்கொண்ட ஆளும் கட்சியினர் துரத்தி, துரத்தி மேற்கொள்ளும் தாக்குதல்களை எதிர்கொள்ள நேரிடும் எனவும் குமார வெல்கம குறிப்பிட்டுள்ளார்.





மாங்கல்யா
லக்ஷ்மி நாராயணா
திருமண சேவை
இல:- 266 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
077 197 1667
077 316 4796

மணமகன் விவரம்

பிறந்த திகதி - 16.09.1987 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - மிருகசீரிடம் 4
கி.பா - 6 செவ் / சூரி 3 இல்
தகைமை - H.N.D.A தொழில் - D.O அரசசேவை
எதிர்பார்ப்பு - படித்த அரசசேவை மணமகள்

பிறந்த திகதி -11.10.1989 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - சதயம்
கி.பா - 17 செவ் / சூரி 5 இல்
தகைமை - Q.S தொழில் -சேவையர் கொம்பனி
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகள்

பிறந்த திகதி - 24.04.1991 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - பூரம்
கி.பா - 3 செவ் - 11 இல்
தகைமை - E.Engineer தொழில் - Company work
எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள்

பிறந்த திகதி - 14.01.1984 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - கார்த்திகை
கி.பா - 30 செவ் -5 இல்
தகைமை - BA, MA தொழில் - D.O அரசசேவை
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகள்

பிறந்த திகதி - 24.09.1988 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - பரணி
கி.பா - 19 செவ் 10 இல்
தகைமை - G.C.E A/L தொழில் -.UK, PR
எதிர்பார்ப்பு - படித்த மணமகள் - UK செல்ல விரும்புபவர்

பிறந்த திகதி - 20.03.1986 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - புனர்பூசம்
கி.பா - 51 செவ் - 7 இல்
தகைமை - MBA (UK) தொழில் - UK, PR
எதிர்பார்ப்பு - UK செல்ல விரும்புபவர்

பிறந்த திகதி - 13.11.1975 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - பூரட்டாதி 3
கி.பா - 12 செவ் - 2 இல்
தகைமை - G.C.E A/L தொழில் - அலுவலக உதவியாளர்.
எதிர்பார்ப்பு - அரச சேவை தனியார் மணமகள்

பிறந்த திகதி -24.05.1981 மதம் - இந்து
ஜாதி - V பகுதி நட்சத்திரம் - உத்தராடம் 3
கி.பா - 25 செவ் - 5இல்
தகைமை - B.Sc தொழில் - UK, PR
எதிர்பார்ப்பு - பட்டதாரி UK அல்லது இலங்கை மணமகள்

மணமகள் விவரம்

பிறந்த திகதி - 03.09.1992 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - விசாகம் 4
கி.பா - 20 செவ் 12 இல்
தகைமை - MBBS தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor மணமகன்

பிறந்த திகதி - 01.04.1988 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - உத்தரம் 3
கி.பா - 15 செவ் 9 இல்
தகைமை - B.Com தொழில் - D.O அரசசேவை
எதிர்பார்ப்பு - அரசசேவை (யாழ்) மணமகன்

பிறந்த திகதி - 14.04.1991 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - ரேவதி
கி.பா - 17 செவ் - 3 இல்
தகைமை - Bsc தொழில் - D.O
எதிர்பார்ப்பு - UK, Canada பட்டதாரி மணமகன்

பிறந்த திகதி - 24.11.1994 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - ஆயிலியம்
கி.பா - 70 செவ்- 4 இல்
தகைமை - Eng., H.N.D.A தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - அரசசேவை மணமகன்

பிறந்த திகதி - 19.04.1995 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - கேட்டை 5'7"
கி.பா - 16 செவ் - 3இல்
தகைமை -(BA.Hons) தொழில் - Bank Officer
எதிர்பார்ப்பு - அரச சேவை கொழும்பு வேலை மணமகன்

பிறந்த திகதி - 01.01.1994 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - மகம்
கி.பா - 56 செவ் /சூரி. 7இல்
தகைமை - HNDA. தொழில் - அரச சேவை
எதிர்பார்ப்பு - அரசசேவை மணமகன்

பிறந்த திகதி - 01.01.1994 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - மகம்
கி.பா - 19 செவ் /சூரி. 6 இல்
தகைமை - HNDA தொழில் - அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன்

பிறந்த திகதி - 16.04.1991 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - பரணி
கி.பா - 22 செவ் - 2 இல்
தகைமை - MBBS தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor or Eng மணமகன்

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்திறூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

காலைக்கதிர்
தொலைபேசி
021 222 3000


# சகோதரியை துஷ்பிரயோகம் செய்த 14 வயது சிறுவன்

## சீர்திருத்தப் பள்ளியில் சேர்ப்பு

தனது ஐந்து வயது உறவுமுறை சகோதரியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ள 14 வயது சிறுவனை சிறுவர் சீர்திருத்த பள்ளியில் தடுத்து வைக்க குளியாப்பிட்டிய நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இணையவழி ஊடாக கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும் தமது பிள்ளைகள் தொடர்பில் விழிப்பாகச் செயற்பட்டு, அவர்களது நடத்தைகள் தொடர்பில் அவதானமாக இருக்காத பெற்றோர்கள் இவ்வாறான சம்பவங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும் என இந்த உத்தரவைப் பிறப்பித்து குளியாப்பிட்டிய நீதிவான் ஜனனி எஸ். விஜேதுங்க திறந்த மன்றில் சுட்டிக்காட்டினார். கடந்த 15 ஆம் திகதி பொலிஸாரால், இந்த சிறுவனிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட பின்னர் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டிருந்தார். இதன்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளின் போது இந்த சிறுவன் தெரிவித்துள்ளவை வருமாறு:–

'தனக்கு பாடசாலையின் சாதாரண தர மாணவர்கள் ஊடாக யூடியூப் மற்றும் வயது வந்தவர்களுக்கு மட்டும் பார்க்க முடியுமான இணையத்தளங்களை பார்க்க முதலில் சந்தர்ப்பம் கிடைத்தது., அந்த பழக்கம் இணையவழி கல்வி நடவடிக்கை இடையே மேலும் வாய்ப்பாக அமைந்தது.' எனத் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் சிறுவர் சீர்திருத்த பள்ளியின் சீர்திருத்த அதிகாரியிடம், தான் வீடியோ காட்சிகளில் பார்த்தவற்றை 5 வயது உறவுமுறை சகோதரியிடம் செயற்படுத்தி பார்த்தேன் எனத் தெரிவித்துள்ளார். பொலிஸ் விசாரணைகளின் பிரகாரம், கடந்த மாதம் குடும்பத் தகராறு ஒன்றைமையப்படுத்தி இந்த 14 வயது சிறுவனும் அவனது இளைய சகோதரரும் தனது தாயின் அண்ணன் வீட்டில் தங்கியிருந்துள்ளனர்.

இக்காலப்பகுதியிலேயே இந்த துஷ்பிரயோக சம்பவம் பதிவாகியுள்ளதாக பொலிஸார் வெளிப்படுத்திக் கொண்டுள்ளனர். துஷ்பிரயோகத்துக்கு உள்ளான சிறுமி குளியாப்பிட்டிய வைத்தியசாலையில் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.



# கிளிநொச்சி – கிருஷ்ணபுரத்தில் உள்ளூர் துப்பாக்கிகள் மீட்பு

கிளிநொச்சி - கிருஷ்ணபுரம் பகுதியில் உள்ளூர் துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே குறித்த இடியன் துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிருஸ்ணபுரம் பகுதியிலுள்ள விளையாட்டு மைதானத்துக்கு அருகிலுள்ள பாலத்தின் உட்பகுதியிலிருந்தே இந்தத் துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட துப்பாக்கி கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப் படைக்கப்பட்டுள்ளதாகவும், சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# 6 நாள்களுக்குள் சமையல் எரிவாயு தட்டுப்பாடு நீங்கும் என்று அறிவிப்பு

கொழும்பு, நவ. 21

நாட்டில் எதிர்வரும் 6 நாள்களுக்குள் சமையல் எரிவாயுக்கான தட்டுப்பாடு நீங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

லிட்ரோ நிறுவனத்தின் விற்பனை மற்றும் சந்தை பிரிவின் பணிப்பாளர் ஜானக்க பத்திர னவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் மற்றும் மத்திய வங்கி என்பனவற்றின் தலையீட்டுடன், அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள்களுக்கு ஒருமுறை எரிவாயு கப்பல் நாட்டை வந்தடைகிறது. எதிர்காலத்திலும் இந்த நிலைமை நீடிக்கும்.

எனவே, சமையல் எரிவாயு கிடைப்பதில் தற்போது எவ்வித குறைப்பாடும் இல்லையெனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## அமெரிக்கப் பேச்சு எதற்காக?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சட்ட நிபுணர்கள் குழு அமெரிக்கா சென்றுள்ளது. அங்கு அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் (இராஜாங்க அமைச்சின்) உயர்நிலை அதிகாரிகளோடு கூட்டமைப்பின் குழு கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளது. இந்த கலந்துரையாடலில் உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகளையும் அமெரிக்கா இணைத்துக் கொண்டுள்ளது.

இந்தப் பேச்சுக்கள் குறித்து சில தப்பபிப்பிராயங்கள், தவறான கற்பிதங்கள் நிலவுகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

ஏதோ இலங்கைத் தமிழர்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து அமெரிக்கா பேசுகின்றது என்பது போலவும், அதற்கான அங்கீகாரம் கூட்டமைப்புக்கு இந்த அழைப்பு மூலம் வழங்கப்பட்டிருக்கின்றது என்பது போலவும் கூட அர்த்தங்கள் கற்பிக்கப்படுகின்றன. அப்படி ஏதும் இல்லை என்பதுதான் உண்மை நிலைவரம்.

அடுத்த பத்தாண்டுகளுக்கு இலங்கை தொடர்பாகத் தான் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கையை தனது நிலைப்பாட்டை அமெரிக்கா வகுக்க விரும்புகின்றது. அதற்கான கலந்துரையாடலே இது. இப்படி கலந்துரையாடுவது ஒன்றும் புதிய புதுமையான விடயமல்ல. பத்தாண்டுகளுக்கு முன்னரும் இது நடந்தது. 2011 ஒக்டோபரில் இதேபோல சம்பந்தன், சுமந்திரன், மாவை, சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகிய அப்போதைய கூட்டமைப்பின் நான்கு தலைவர்களும் வொஷிங்டன் போய் நின்று நான்கு நாள்கள் தங்கி இதுபோல மரதன் சந்திப்புகளில் ஈடுபட்டனர். பலருடனும் பேசினர். 2011 ஒக்ரோபரில் ஆரம்பமான இந்தக் கலந்துரையாடலின் பெறுபேறாக இலங்கை தொடர்பான அப்போதைய தனது புதிய கொள்கைப் போக்கை 2012 பெப்ரவரியில்தான் அமெரிக்கா உத்தியோகபூர்வமாக வெளியிட்டது.

2011 செப்டெம்பரில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிராக தான் முன்வைத்த பிரேரணையை முன் நகர்த்த முடியாமல் கனடா கைவிட்ட நிலையில், 2012 பெப்ரவரிக்குப் பின்னர் அத்தகைய பிரேரணையை வெற்றிகரமான தீர்மானமாக மாற்றும் முயற்சியை அமெரிக்கா பொறுப்பெடுத்து மேற்கொண்டது. இலங்கை தொடர்பாக அப்போது வகுக்கப்பட்ட புதிய கொள்கை மாற்றத்தின் அடிப்படையில்தான் இது முன்னெடுக்கப்பட்டது.

இப்போது மீண்டும் ஒரு கொள்கை மறுபரிசீலனை வொஷிங்டனில். அவ்வளவுதான்.

இதுவரை ஜெனிவாவில் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி வந்த அமெரிக்கா, இலங்கையில் அரசியல் தீர்வு பற்றிய விடயத்தையும் கடைசியாக நிறைவேற்றிய தீர்மானம் மூலம் வலியுறுத்தியுள்ளது. இலங்கை தொடர்பான தனது புதிய கொள்கை வகுப்பில் இனிமேல், பொறுப்புக்கூறலோடு அரசியல் தீர்வையும் வலியுறுத்தும் கொள்கை நிலைப்பாடு ஒன்றுக்கு அமெரிக்கா வருவதற்கான முன்னாயத்த ஆராய்வுகளுக்காகவே கூட்டமைப்புக் குழுவை அமெரிக்கா அழைத்துள்ளது பத்தாண்டுகளுக்கு முன்னர் அழைத்த மாதிரி.

அரசியல் தீர்வு பற்றிய விடயத்தையும் இலங்கை தொடர்பான தனது கொள்கை நிலைப்பாட்டில் உறுதியாக சேர்த்துக் கொள்ள அமெரிக்கா விரும்புவதாலேயே அது பற்றிய ஆராய்வுகள் மற்றும் முன்னோடி சந்திப்புகளுக்கு தமது கூட்டமைப்பின் சார்பில் சட்ட நிபுணர்களை அனுப்பி இருக்கின்றார் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன்.

இந்த ஆராய்வுகள், உசாவல்களின் தொடர்ச்சியாக அமெரிக்கா இராஜாங்க அமைச்சு அதன் கட்டமைப்புக்குள்ளும் பல்வேறு கலந்துரையாடல்களைத் தொடர்ந்து மேற்கொள்ள இருக்கின்றது. அதன் முடிவு வர மேலும் இரண்டொரு மாதங்கள் செல்லலாம். ஆனாலும் நிச்சயம் அடுத்த மார்ச் மாதத்தில் ஜெனிவா அமர்வுக்கு முன் அது வெளியாகும் என எதிர்பார்க்கலாம். இலங்கை தொடர்பில் தீர்க்கமான சில முடிவுகளை அமெரிக்கா எடுப்பதற்கு இப்போதைய ஆராய்வுகள், கலந்துரையாடல்கள், சந்திப்புகள் உதவும் என்பது நிச்சயம்.

# இவருக்கு காற்சட்டை அணிய கற்றுக்கொடுத்தது ஜே.வி.பி.

## அரச அமைச்சரை போட்டுத் தாக்கிய பொன்சேகா



அரசாங்கத்தில் இருக்கும் கூலிக்கு குரைக்கும் அமைச்சரின் கழுத்து தற்போது உடைந்து விழுந்து, சட்டைப் பைக்குள் கிடப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியினரை ஆக்கப்பூர்வமாக இருக்குமாறு கூறும் அந்த அமைச்சர் கடந்த காலத்தில் மக்கள் விடுதலை முன்னணியில் இருந்தவர் எனவும் பொன்சேகா கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணி ஆக்கப்பூர்வமானதாக இல்லை என அந்த அமைச்சர் கூறியிருந்தமைக்கு பதிலளிக்கும் வகையிலேயே சரத் பொன்சேகா இதனை கூறியதுடன் அந்த அமைச்சரின் பெயரை குறிப்பிடவில்லை.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள சரத் பொன்சேகா :-

அந்த அமைச்சர் ஆக்கபூர்வமானவர் என்பதன் காரணமாகவே இரண்டு கடவுச்சீட்டுகளை பெற்றுக் கொண்டிருந்தார். இரண்டு பிறப்பத்தாட்சிப் பத்திரங்கள். ஒன்றில் அவர் மூத்தவர், மற்றொன்றில் அவரது மனைவி மூத்தவர் எனவும் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார். அப்போது ஆளும் கட்சியின் தரப்பினர் இருந்து குறுக்கீடுகள் வந்த போது பொன்சேகா இவ்வாறு பதிலளித்துள்ளார்.

'பைத்தியகாரன் அமரும். இவற்றை கேளும், பிச்சைக்கார தனமாக கதையை கூறிய உங்களது தரப்பின் நபர் குறித்து கூறும் போது வலிக்கின்றதா?. பைத்தியகாரன் போல் உளறாது உட்கார்ந்து கேளுங்கள்.

இவற்றை கூறும் போது இவர்களுக்கு குழப்பம் ஏற்படுகிறது. சோற்று பொதிக்காக அரசியல் செய்பவர்கள் குழம்புகின்றனர்.

மக்கள் விடுதலை முன்னணியில் இருக்கும் இளைஞர்கள் கஷ்டப்பட்டு அந்த நபரை அரசியலுக்கு கொண்டு வந்து, ஓர் அரசியல் பாத்திரமாக உருவாக்கினர். காற்சட்டை அணிவது எப்படி என்பதை அந்த நபர் மக்கள் விடுதலை முன்னணியிடமே கற்றுக்கொண்டார். அப்படி வந்த நபர், ராஜபக்ஷ அணியின் லஞ்சம் மற்றும் பணத்தை கண்டதும் அவர்களின் அணிக்கு தாவினார். பொய்யாக தற்போது அரசாங்கத்தை விமர்சித்தாலும் வரவு செலவுத் திட்டத்தின் வாக்கெடுப்பின் போது, அவர் மற்றும் அவரது அணியினர் வாலை மடக் கிக்கொண்டு அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பார்கள். - எனவும் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா, அமைச்சர் விமல் வீரவன்ஸ தொடர்பாக மறைமுக நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார்.

# கொழும்பு கட்டடமொன்றில் நேற்று வெடிப்புச் சம்பவம்!



கொழும்பு, கறுவாத் தோட்டம் பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள கட்டடமொன்றில் நேற்று(சனிக்கிழமை) காலை வெடிப்புச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

சர்வதேச உணவு உற்பத்தி நிறுவனத்துக்குச் சொந்தமான ஹோட்டல் ஒன்றிலேயே இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஹோட்டலில் இருந்து வெளியான வாயு கசிவால் இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். இதன்போது ஏற்பட்டுள்ள தீயை கட்டுப்படுத்துவதற்காக கொழும்பு மாநகர சபையின் தீயணைப்பு படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், உயிரிழப்புகளோ, மரணங்களோ இது வரையில் பதிவாகவில்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வெடிப்புச் சம்பவத்துக்கான காரணத்தை முறையாக உறுதிப்படுத்துவதற்காக கொழும்பு இரசாயனப் பகுப்பாய்வு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2021

"மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வறட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப்பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை"

- ஜோன் மூர்
(அமெரிக்க இயற்கையியலாளர்)



# எழில் கதிர்





## மேக் அப் போடாமல் இயற்கை அழகு பெறும் வழிகள்

பளிச் என்ற தோற்றத்தை தான் அனைவரும் விரும்புகிறார்கள். அழகாய் இருக்கிறோம் என்னும் எண்ணமே அளவுக்கதிகமான தன்னம்பிக்கையை கொடுத்துவிடும். தோற்றத்தின் அழகை அதிகரிக்க அழகு நிலையங்களை மட்டுமே நம்பியிராமல் இயற்கை முறையிலும் அழகை காக்க முயற்சிக்க வேண்டும்.

அழகு சாதனப் பொருள்களால் அழகை கூட்டி காண்பிக்க முடியும். அவை எல்லாமே தற்காலிகமானவையே. ஆனால் சிறுவயதில் இருந்தே அழகை இயற்கையாக பெறுவதற்கு குறிப்பாக சருமத்தை பாதுகாப்பதற்கு செய்ய வேண்டிய விடயங்களிலும் கவனம் செலுத்த வேண்டும். இவற்றை சரியான முறையில் பின்பற்றும் போதே வயது கூடினாலும் இயற்கை அழகோடு மிளிர தொடங்குவீர்கள். அப்படி என்ன செய்யவேண்டும் என்பதை தெரிந்துகொள்வோம்.

### தண்ணீர்

ஆரோக்கியம் மற்றும் அழகு இரண்டின் தொடக்கமும் இதில் தான் தொடங்குகிறது. ஏனெனில் மனித உடல் 70% தண்ணீரை கொண்டுதான் இயங்குகிறது. இவை பற்றாக்குறை இல்லாமல் இருந்தாலே உடல் சுறுசுறுப்பாக இருக்கும். உடலில் இருக்கும் நச்சுக்கள் அவ்வப்போது வெளியேறினாலே உடல் சுத்தமாகும். சுத்தத்தில் சருமம் பளிச்சென்று இருக்கும்.

இயற்கை முறையில் அழகுபடுத்த இதைவிட சிறந்த வழிமுறை எதுவுமே இல்லை என்று சொல்லுமளவுக்கு தண்ணீர் பயன்படும். அதைத்தான் இன்று சரும பராமரிப்பு மருத்துவர்களும், அழகு கலை நிபுணர்களும் வலியுறுத்துகிறார்கள்.

### தூக்கம்

இதுவும் உடலுக்கு மிகவும் முக்கியமானதுதான். ஆழ்ந்த தூக்கம் ஆரோக்கியத்துக்கு எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவு முக்கியம் அழகுக்கும். தினமும் 7 மணி நேரம் முதல் 8 மணி நேர தூக்கம் அவசியம். தூக்கம் குறைந்தால் முதலில் கண்களில் பாதிப்பு தொடங்கும். பிறகு கருவளையம், கண்களை சுற்றி கறுப்பு உண்டாகும். அப்போதாவது விழித்துகொள்ள வேண்டும் இல்லையெனில் அதைத் தொடர்ந்து முகச் சுருக்கம், வயதான தோற்றம் எல்லாம் வரிசைக்கட்டி நிற்கும்.

### பழச்சாறுகள்

தண்ணீர் என்னும் திரவ ஆகாரம் தான் உடலுக்கு தேவை என்கிறீர்களா? சருமத்தின் மினுமினுப்பை கொடுப்பதற்கு ஊட்டச்சத்து வேண்டுமே. அதை எளிதாக பெறுவதற்கு உதவுவது பழச்சாறுகள் தான். எப்போதெல்லாம் முடியுமோ அப்போதெல்லாம் தேநீர் போன்ற பானங்களை தவிர்த்து பழச்சாறுகளுக்கு மாறுங்கள். உடலில் இருக்கும் கழிவுகளை வெளியேற்ற உதவுவதால் சருமம் இயற்கையாகவே மினுமினுப்பை கொள்ளும். குறிப்பாக விற்றமின் சி நிறைந்த பழங்களை எடுத்துக்கொள்வது நல்லது.

### உடல் சுத்தம்

சருமத்தை சுத்தமாக வைத்துக் கொள்வதும் முக்கியம். வெளியில் செல்லும் போது படியும் தூசி, அழுக்கு போன்றவை உச்சி முதல் கால்கள் வரை படிந்துவிடும். அவ்வப்போது அதை நீக்காவிட்டால் சருமத்தில் தலையில் தங்கி பிரச்சினைகளை உண்டாக்கும். தினமும் இரண்டுவேளை குளியல் எப்போதும் உங்களை அழகாக வைத் திருக்கும்.

அரிசி கழுவிய நீர் தரும் அமோக அழகினை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம்.

அதே நேரம் அதிக நறுமணமிக்க அடர்ந்த நிற சோப்பு கட்டிகளை பயன்படுத்தவேண்டாம். சோப்பை அதிகமாகப் பயன்படுத்தவும் வேண்டாம். வாரம் இருமுறையாவது கூந்தலை சுத்தம் செய்வது அவசியம்.

### பளிச் புன்னகை

அழகு முகத்துக்கு கூடுதல் அழகு தருவது பளிச் என்ற புன்னகைதான். டென்ஷனாக இருக்கிறேன் என்று எப்போதும் முகத்தை கடு கடுவென்று வைத்திருந்தால் சருமத்தில் சுருக்கம் எளிதாக விழுந்துவிடும் என்கிறார்கள். புன்னகைக்கும் போது மனதுக்கும் ஆறுதல் கிடைக்கிறது. சோர்வுநீங்கிய முகம் எப்போதும் சருமத்துக்கு புத்துணர்ச்சி கொடுக்கும். புன்னகை அழகாய் இருக்க பற்களையும் பளிச்சென்று வைத்து கொள்வதும் முக்கியம் என்பதையும் மறக்க வேண்டாம்.

### இயற்கை அழகு பொருள்

வாரம் ஒருமுறையாவது முகம், கழுத்து பகுதிக்கு வீட்டிலிருக்கும் பொருள்களை பயன்படுத்துங்கள். தயிர், பால் ,பாலேடு வெண்ணெய், மஞ்சள் தூள். எலுமிச்சை. பீட்ரூட், கரட், பப்பாளி, கற்றாழை, பன்னீர், கோதுமை தவிடு, பாசிப்பருப்பு மாவு இப்படி இன்னும் அதிக பொருள்கள் பயன்படுத்துவது குறித்து தெரிந்துவைத்திருப்பீர்கள்.

அதை எல்லாமே சுழற்சி முறையில் அவ்வப்போது பயன்படுத்துங்கள். எதுவுமே சருமத்துக்கு ஒவ்வாமையை உண்டாக்காது என்றாலும் ஏதேனும் அப்படியான பிரச்சினைகளை கொண்டிருந்தால் அதை தவிர்த்து விடுங்கள்.

### அழுக்கில்லாமல் வைக்க

சருமத்தில் இருக்கும் இறந்த செல்களை அவ்வப்போது வெளியேற்றிவிட்டால் புதிய செல்கள் உருவாகி முகத்தை புத்துணர்ச்சியாக வைத்திருக்கும். அவ்வப்போது



இதை நீக்கிவிடவேண்டும். மாதமிருமுறை அல்லது ஒருமுறை ஸ்க்ரப் போன்று இருக்கும் பொருள்களை (சர்க்கரை, ஓட்ஸ் பொடி, கோதுமை தவிடு, ரவை) கொண்டு ஸ்க்ரப் செய்தால் சருமத்துவாரங்களில் இருக்கும் அழுக்குகள் நீங்கிவிடும். கையோடு துளைகளை மூடிக்கொள்ள ஐஸ் க்யூப் பயன்படுத்துவது நல்லது. இதைத் தொடர்ந்து செய்து வந்தால் முகத்தில் பருக்கள், கரும்புள்ளிகள், சுருக்கங்கள் எதுவுமே வராமல் பாதுகாக்கலாம்.

### அதிக மேக் அப்

மேக் அப் பொருள்கள் பயன்படுத்துவதை தவிர்க்க முடியாது. ஆனால் உங்கள் சருமத்துக்கேற்ற பொருள்களை பயன்படுத்துங்கள். முதலில் உங்கள் சரும பராமரிப்பு நிபுணர்களிடம் ஆலோசித்து உங்களுக்கான அழகு பொருள்களை பயன்படுத்துங்கள்.

எதைப் பயன்படுத்தினாலும் இரவு நேரங்களில் அதை கலைத்து முகத்தை சுத்தமான நீரில் கழுவி பிறகு தூங்க செல்லுங்கள். எதையும் பயன்படுத்த விரும்பாத வர்கள் சருமத்துக்கு சன்ஸ்கீரின், மாய்சுரைசர் மட்டும் பயன்படுத்துவதை கடைப்பிடியுங்கள். இவை சருமத்தை பாதுகாக்கும் பொருள் என்பதால் நிச்சயம் கடைப்பிடியுங்கள். குறிப்பாக அனைத்து சருமத்துக்கும் ஏற்றது இது.

மேற்கண்ட குறிப்புகள் அனைவருக்கும் அனைத்து வயதினருக்குமே. இதுவரை இல்லையென்றாலும் இப்போது இதை பின்பற்றுங்கள். குறைந்தது ஒரு மாதத்தில் நல்ல ரிசல்ட் நீங்களே உணர்வீர்கள்.



## நரைமுடி பிரச்சினை

நரைமுடி பிரச்சினை என்பது எல்லா வயதினருக்கும் பொதுவான பிரச்சினையாக மாறிவிட்டது. இது எரிச்சலையும் மன உளைச்சலையும் உண்டாக்கும். முடி நரைக்கப்படுவதில் வயது மற்றும் மரபியல் முக்கிய பங்கு வகித்தாலும் புகைப்பிடித்தல், ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறை மற்றும் உணவு முறையும் காரணங்களாகின்றன.

முடியை முன்கூட்டியே வெண்மையாக்குவதில் இவையெல்லாம் முக்கிய பங்கு வகிக்கிறது. உணவு மூலமே நரைமுடியை தவிர்க்க செய்துவிடலாம். நரைமுடியை தவிர்க்க விரும்பினால் இந்த ஐந்து உணவுகளை நீங்கள் தவிர்க்க வேண்டும். என்னென்ன என்பதைப் பார்க்கலாம்.

### வெள்ளை சீனி

சீனி அவ்வளவு ஆபத்தானது. சீனி தலைமுடியை நரைக்க செய்யும். இனிப்புகள், நொறுக்குத்தீனிகள் மற்றும் குளிர்பானங்கள் என எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்துள்ளது சீனி .

ஆரோக்கியமான முடி வளர்ச்சிக்கு விற்றமின் ஈ அவசியம். சீனி உடலில் விற்றமின் ஈ அளவை குறைக்கும். முடி, பற்கள் மற்றும் எலும்புகளின் கட்டமைப்பிற்கு தேவையான புரதத்தை உடலில் உறிஞ்சுவதில் சீனி தலையிடுகிறது. அதனால் சீனியை தவிர்ப்பதன் மூலம் முடியையும் ஆரோக்கியத்தையும் பாதுகாத்து கொள்ளலாம்.

### உப்பு

நிபுணர்களின் கூற்றுப்படி உப்பை மிதமாக எடுத்து கொள்ள வேண்டும். நாள் ஒன்றுக்கு 2,300 மில்லி கிராம் மேல் சோடியம் எடுத்துகொள்வது உடலுக்கு ஆரோக்கியமற்றது. தீங்கு விளைவிக்கும். உடலில் திரவங்களின் சரியான சமநிலையை உறுதிப்படுத்த சோடியம் முக்கியமானது.

உப்பு அதிகமாக எடுத்துகொள்வது நரை முடி, உயர் இரத்த அழுத்தம் மற்றும் நாள்பட்ட சிறுநீரக நோய் போன்றவற்றை உண்டாக்கலாம். உணவில் உப்பைக் குறைப்பதோடு உப்பு நிறைந்த நொறுக்குத் தீனிகளையும் தவிர்க்க வேண்டும்.

### மென் பானங்கள்

சீனியைத் தவிர குளிர்பானங்களில் செயற்கை இனிப்புகள் மற்றும் வண்ணங்களும் ஏற்றப்படுகின்றன. அதில் அதிக அளவு சீனி இருப்பதால் உடலில் கொழுப்பாக மாற்றும். இது பற்களில் சிதைவு உண்டாக்கும். நரை முடிக்கு குளிர்பானங்களும் முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.

### விலங்கு புரதம்

இறைச்சி வடிவில் விலங்கு புரதத்தை உட்கொள்வது முன்கூட்டிய இளநரைக்கு வழிவகுக்கும். உடலுக்கு புரதம் தேவை என்றாலும் செரிமான அமைப்பு சில விலங்கு புரதங்களை ஜீரணிக்க முடியாது. மேலும் இது நேரடியாக யூரிக் அமிலமாக மாற்றப்படுகின்றன. யூரிக் அமிலத்தின் அதிகப்படியான உற்பத்தியும் நரை முடியை உண்டாக்கும்.

### செயற்கை நிறம் மற்றும் இனிப்புகள்

செயற்கை இனிப்புகள் உருவாக்கப்பட்டவை. இவை இயற்கைக்கு மாறானவை. இன்று ஆர்ட்டிபிஷியல் கலர்ஸ் மற்றும் ஸ்வீட் இளைஞர்களுக்கு மிகவும் பிடித்த உணவுப்பொருளாக மாறிவருகிறது. ஆனால் இவை உடலுக்கு எவ்விதமான வலுவையும் தராது.

இது ஒவ்வாமை, ஒற்றைத்தலைவலி போன்ற கடுமையான உடல்நல பிரச்சினைகளை ஏற்படுத்தும். இது முன்கூட்டியே முடி நரைக்கவும் காரணமாகும். இந்த ஐந்து உணவுகளும் நரை முடியை உண்டாக்குவதோடு உடல் ஆரோக்கியத்துக்கும் தீங்கு விளைவிக்கும்.

# விருந்துக்கதிர்



விருந்துக்கதிர்



## மழைக்காலத்தில் மிளகு சீரக தக்காளி சூப்

மழைக்காலம் என்றாலே சற்று வெதுவெதுப்பாகவும், சூடாகவும் எதையாவது சாப்பிட வேண்டும் என்ற ஆசை இருக்கும். நமது குளிரைப் போக்குவதற்காக நினைத்த உடனே சட்டென்று செய்யக் கூடிய உணவுகளை செய்து சாப்பிட விருப்பமாக இருக்கும்.

அவ்வாறு சளிப் பிடித்திருந்தாலும், அதிக அளவு குளிர் இருந்தாலும் நமது உடலின் உஷ்ண நிலையை சரி செய்வதற்கு இந்த தக்காளி சூப்பை செய்து குடிக்கலாம். இதில் சேர்க்கப்படும் மசாலாப் பொருள்கள் அனைத்தும் சளியை போக்குவதற்கும் நிவாரணமாக அமைகிறது.

இதனை வெறும் வயிற்றில் குடிப்பதுடன் மட்டுமல்லாமல் சோற்றுடன் சேர்த்தும் ரசம் மாதிரி கலந்து சாப்பிடலாம்.

வாருங்கள் இதனை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை தெரிந்து கொள்வோம்.

**தேவையான பொருள்கள்:**

தக்காளி - 150 கிராம்
பச்சை மிளகாய் - 1
மிளகு - ஒரு தேக்கரண்டி
சீரகம் - ஒரு தேக்கரண்டி
மல்லி - ஒரு தேக்கரண்டி
துவரம் பருப்பு - ஒரு தேக்கரண்டி
தனி மிளகாய்த்தூள் - முக்கால் தேக்கரண்டி
மஞ்சள்தூள் - அரை தேக்கரண்டி
உப்பு - தேவையான அளவு
பூண்டு - 10 பல்
எண்ணெய் - ஒரு தேக்கரண்டி
நெய் - அரை தேக்கரண்டி
கடுகு - அரை தேக்கரண்டி
பெருங்காயத் தூள் - கால் தேக்கரண்டி
கறிவேப்பிலை - ஒரு கொத்து
கொத்தமல்லித்தழை - ஒரு கொத்து.

**செய்முறை:**

முதலில் ஒரு மிக்ஸியில் ஒரு பச்சை மிளகாய், மிளகு, சீரகம், மல்லி, துவரம் பருப்பு, மிளகாய்த் தூள், மஞ்சள் தூள், உரித்த பூண்டு, கறிவேப்பிலை அனைத்தையும் சேர்த்து கொஞ்சம் கொரகொரப்பாக அரைத்துக் கொள்ள வேண்டும்.

பின்னர் தக்காளியை தண்ணீரில் சுத்தமாக கழுவிக் கொண்டு, ஒரு பாத்திரத்தில் தக்காளிகளை கைகளால் நன்றாக பிழிந்து ஒன்றும் பாதியுமாக கரைத்துக் கொள்ள வேண்டும்.

பின்னர் இதனுடன் உப்பு, பெருங்காயத்தூள் சேர்த்து நன்றாக கலந்து கொள்ள வேண்டும். பின்னர் அடுப்பை பற்ற வைத்து அதன் மீது ஒரு கடாயை வைத்து பொடி செய்து வைத்துள்ள மசாலாக்களையும் மற்றும் அரைத்து வைத்துள்ள தக்காளியையும் ஒன்றாக சேர்த்து அதனுடன் ஒரு கொத்து கறிவேப்பிலை மற்றும் கொத்தமல்லி தழை சேர்த்து நன்றாக கொதிக்க விட வேண்டும்.

இவை ஒரு கொதி வர ஆரம்பித்ததும் அடுப்பை அனைத்துவிட வேண்டும். பிறகு ஒரு வடிகட்டியை பயன்படுத்தி இவற்றில் இருக்கும் தண்ணீரை மட்டும் தனியாக வடிகட்டி எடுத்துக்கொள்ள வேண்டும்.

பின்னர் ஒரு தாளிப்பு கரண்டியை அடுப்பின் மீது வைத்து ஒரு தேக்கரண்டி எண்ணெய் மற்றும் அரை தேக்கரண்டி நெய் சேர்க்க வேண்டும். இவை நன்றாக சூடானதும் அரை தேக்கரண்டி கடுகு சேர்த்து தாளிக்க வேண்டும். பின்னர் இந்த தாளிப்பை செய்து வைத்துள்ள சூப்பில் கலந்து கொள்ள வேண்டும் அவ்வளவுதான் சுவையான தக்காளி சூப் தயாராகிவிட்டது.

## வாழைக்காய் குழம்பு



ஒருசில குழம்பு வகைகள் வீட்டில் உள்ள அனைவருக்கும் மிகவும் பிடித்தமான சுவையில் இருக்கும். ஆனால் அவற்றை விசேஷமாக என்றாவது ஒரு நாள் தான் செய்வார்கள். அவ்வாறு கறிக்குழம்பு சுவையில் இருக்கும் இந்த வாழைக்காய் குழம்பையும் எப்போதாவது ஒரு முறை தான் செய்து கொடுப்பார்கள். கறி குழம்பு சாப்பிட வேண்டும் என்று தோன்றினால் உடனே வாழைக்காயை வைத்து இந்த குழம்பைச் செய்திடலாம். இந்த குழம்பு செய்முறை அனைத்தும் கறி குழம்பு வைப்பது போன்றே இருக்கும்.

**தேவையான பொருள்கள்:**

வாழைக்காய் - 2
சின்ன வெங்காயம் - 15
பூண்டு - 7 பல்
இஞ்சி சிறிய துண்டு - 2
எண்ணெய் - 5 தேக்கரண்டி
தேங்காய் - ஒரு பாதி
சோம்பு - அரை தேக்கரண்டி
கடுகு - அரை தேக்கரண்டி
மஞ்சள் தூள் - அரை தேக்கரண்டி
சீரக தூள் - அரை தேக்கரண்டி
கரம் மசாலா - ஒரு தேக்கரண்டி
மல்லி தூள் - ஒரு தேக்கரண்டி
தனி மிளகாய் தூள் - ஒரு தேக்கரண்டி
உப்பு - தேவையான அளவு
கருவேப்பிலை - ஒரு கொத்து
கொத்தமல்லி தழை - ஒரு கொத்து.

**செய்முறை:**

முதலில் அடுப்பை பற்ற வைத்து, அதன் மீது ஒரு கடாயை வைத்து, ஒரு தேக்கரண்டி எண்ணெயை ஊற்றவேண்டும். எண்ணெய் காய்ந்ததும் அதில் சின்ன வெங்காயம் மற்றும் பூண்டை தோலுரித்து சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பின் இவற்றுடன் இஞ்சியை சேர்த்து நன்றாக வதக்கிக் கொள்ள வேண்டும். பின்னர் இவற்றை நன்றாக ஆற வைத்து மிக்ஸி ஜாரில் சேர்த்து கழிபதத்திற்கு அரைத்துக் கொள்ள வேண்டும்.

அவ்வாறு பாதி தேங்காயையும் துருவி மிக்ஸியில் சேர்த்து பசையாக அரைத்துக் கொள்ள வேண்டும். அதன்பிறகு வாழைக்காய்களை தோல் சீவிக் கொண்டு, வட்ட வடிவில் அரிந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

பிறகு தக்காளியை மிக்ஸி ஜாரில் சேர்த்து பசையாக அரைத்துக் கொள்ள வேண்டும். வெங்காயம் வதக்கிய அதே கடாயில் இரண்டு தேக்கரண்டி எண்ணெய் சேர்த்து அரைத்து வைத்துள்ள வாழைக்காய்களை இரண்டு புறமும் சிவந்து வரும் வரை வறுத்துக் கொள்ள வேண்டும்.

பின்னர் மீண்டும் கடாயில் 2 தேக்கரண்டி எண்ணெய் ஊற்றி கடுகு, சோம்பு சேர்த்து தாளிக்க வேண்டும். பின்னர் அரைத்து வைத்துள்ள வெங்காய பசையை சேர்த்து நன்றாக வதக்கிக் கொள்ள வேண்டும். வறுத்து வைத்துள்ள வாழைக்காயை சேர்த்து நன்றாக வதக்கி விட்டு, அரைத்து வைத்துள்ள தக்காளி சாறையும் சேர்த்து நன்றாக வதக்கிக் கொள்ள வேண்டும். பின்னர் மஞ்சள்தூள், மல்லித்தூள், சீரகத்தூள், கரம் மசாலாத்தூள், மிளகாய்த்தூள் மற்றும் உப்பு சேர்த்து இவற்றுடன் ஒன்றரை கப் தண்ணீர் சேர்த்து நன்றாக கொதிக்க விட வேண்டும். பிறகு அரைத்து வைத்துள்ள தேங்காய் விழுதையும் சேர்த்து இறுதியாக கருவேப்பிலை மற்றும் கொத்தமல்லி தழை தூவி சிறிது நேரம் கொதிக்க விட்டு அடுப்பை அனைத்து விட வேண்டும். சுவையான வாழைக்காய் கறி தயார்.





# மருத்துவக் கதிர்



## குடல் புண்களுக்கு குணம் தரும் வெந்தயக் கீரை



சாதாரணமாகச் சமையலில் பயன்படுத்தப்படும் வெந்தயத்தின் தழைதான் வெந்தயக்கீரை எனப்படுகிறது. இது சத்து நிறைந்த கீரை. வெந்தயம் விதைகளின் மூலம் பயிரிடப்படுகிறது.

வெந்தயக்கீரையில் விற்றமின் ஏ சத்தும், சுண்ணாம்புச்சத்தும் இருப்பதால் இதைச் சாப்பிடும் போது மாரடைப்பு, கண்பார்வை குறைபாடு, வாதம், சொறி சிரங்கு, இரத்தசோகை ஆகியவை குணமடையவும், பசியைப் போக்கவும் பயன்படுகிறது. குடல் புண்களும் குணமாகின்றன.

வெந்தயக் கீரையில் விற்றமின்களும், தாது உப்புகளும் அதிக அளவில் இருக்கின்றன. சொறி, சிரங்கை நீக்குகிறது. பார்வைக்கோளாறுகளைச் சரி செய்கின்றது. வெந்தயக் கீரையைத் தொடர்ந்து சாப்பிட்டால் காசநோயும் குணமாவதாகக் கூறுகின்றனர். இந்தக் கீரை வயிற்று நோய்களையும் குணப்படுத்துகின்றது.

வெந்தயக் கீரையை வேக வைத்து அதனுடன் தேன் கலந்து கடைந்து உண்டால் மலம் சுத்தமாகும். உடல் சுத்தமாகும். குடல் புண்களும் குணமாகின்றன. மலம் கழிக்கும்போது ஏற்படும் உளைச்சலையும் எரிச்சலையும் வெந்தயக்கீரை குணப்படுத்துகின்றது.

மூலநோய், குடல் புண் போன்ற நோய்களுக்கும் இந்தக் கீரை சிறந்த மருந்தாகத் திகழ்கிறது. வெந்தயக் கீரையை அரைத்துச் சூடு செய்து வீக்கங்கள் மீது பூசினால் வீக்கம் குறையும். இவ்வாறு செய்வதால் தீப்புண்களும் குணமாகும்.

இந்தக் கீரையைத் தொடர்ந்து 40 நாள்களுக்குச் சாப்பிட்டு வந்தால் நீரிழிவு கட்டுப்படும். எனவே, நீரிழிவு உள்ளவர்கள் வெந்தயக் கீரையைத் தொடர்ந்து சாப்பிடுவது நல்லது. வெந்தயக் கீரை ஜீரண சக்தியை அதிகரித்து, பசியைத் தூண்டுகிறது. சிறுநீர் உறுப்புகளை சுத்தம் செய்கிறது. மூளை நரம்புகளைப் பலப்படுத்துகிறது. வயிற்றுக் கட்டி, உடல் வீக்கம், சீதபேதி, குத்திருமல், வயிற்று வலி ஆகியவற்றைக் குணப்படுத்துகிறது.

வெள்ளைப் பூசணிக்காய் சாம்பாரில் வெந்தயக் கீரையைச் சேர்த்துச் சாப்பிட்டால் பெருத்த உடல் இளைக்கும். வயதுக்கு வரும் பெண்கள் இதைச்சாப்பிட்டால் இரத்த விருத்தியுண்டாகும்.

## மருந்தாகும் உணவுகள்

கீழ்க்காணும் உணவு பழக்கவழக்கங்களை கடைப்பிடிப்பதால் நமது உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

1. நீங்கள், தினமும் ஐந்து விதமான பழங்களையும், சில காய்கறிகளையும் உணவாக எடுத்துக் கொள்பவரா..? ஆம் என்றால் ஆரோக்கியமும் அழகும் எப்போதும் உங்க பக்கம்தான்

2. மனநலக் கோளாறு மற்றும் மூளை நரம்புகளில் பாதிப்பு உள்ளவர்களின் தினசரி உணவில் தர்பூசணி துண்டுகள் அவசியம். மன அழுத்தம், பயம் போன்ற பாதிப்புகளை தகர்க்கும் விற்றமின் B- 6 தர்பூசணியில் அதிகம்.

3. பூண்டு சாப்பிட்டீர்களென்றால் உங்கள் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி வெகுவாக அதிகரிக்கும். வெள்ளை அணுக்கள் அதிகம் உற்பத்தியாவதோடு, கேன்சர் செல்கள் உருவாகாமலும் தடுக்கும்.

4. சிவப்பணு உற்பத்திக்கு புடலங்காய், பீட்ரூட், முருங்கைக்கீரை, அவரை, பச்சைநிறக் காய்கள், உளுந்து, துவரை, கம்பு, சோளம்,

5. சுண்டைக்காயை உணவில் சேர்த்தால், நாக்குப்பூச்சித் தொல்லை, வயிற்றுப்பூச்சித் தொல்லை தூர ஓடி விடும்.

6. வெங்காயம், பூண்டு, சிறுகீரை, வேப்பிலை, மிளகு, மஞ்சள், சீரகம், கருப்பட்டி, வெல்லம், சுண்டைக்காய் வற்றல், செவ்விளநீர், அரைக்கீரை, எலுமிச்சைபோன்றவை உடலில் உள்ள நச்சுத்தன்மை நீக்கும் உணவுகள்.

7. பொன்னாங்கண்ணிக் கீரையைத் துவட்டல் செய்து சாப்பிட்டு வந்தால், மூல நோய் தணியும். இந்தக் கீரையின் தைலத்தை தலைக்குத் தேய்த்துக் குளித்து வந்தால், கண் நோய்கள் நெருங்காது.



## வீட்டில் செய்யக்கூடிய எளிய மருத்துவக் குறிப்புகள்

இரவில் மூக்கடைப்புக்கு மின் விசிறியின் நேர் கீழே படுக்க வேண்டாம். சற்று உயரமான தலையணை பயன்படுத்தவும். மல்லாந்து படுக்கும்போது மூக்கடைப்பு அதிகமாகும். பக்கவாட்டில் படுக்கவும். காலையில் பல் தேய்க்கும்போது நாக்கு வழித்து விட்டு மூன்று முறை மூக்கைச் சிந்தவும். சுவாசப் பாதையைச் சுத்தப்படுத்த நமது முன்னோர் காட்டிய வழி இது.

வெண்டிக்காயை உணவில் அடிக்கடி சேர்த்து வந்தால் நரம்புகள் வலிமை பெறும். மூளையின் இயக்கத்தைச் செம்மைப்படுத்துவதுடன் நல்ல ஞாபக சக்தியையும் உண்டாக்கும்.

வேர்க்கொம்பு , மிளகு, திப்பிலி, தாமரை இதழ், வெல்லம் சேர்த்து தண்ணீரில் விட்டுக் கொதிக்க வைத்து வடிகட்டி இரவில் ஒரு டம்ளர் சாப்பிடுவதால் மாரடைப்பைத் தடுக்கலாம்.

வெள்ளைப் பூசணிக்காயை பூந்துருவலாக துருவி, உப்பு சேர்த்து இஞ்சி, பச்சை மிளகாய், கொத்தமல்லி, கருவேப்பிலை, கடுகு, தாளித்து தயிரில் கலந்து தயிர்ப் பச்சடியாக சாப்பிட்டால் மிகவும் ருசியாக இருக்கும். பூசணிக்காய் ரத்தக்கொதிப்பு, கொலஸ்ட்ரால் தலைசுற்றல் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும்.

கை சுளுக்கு உள்ளவர்கள் நீரில் மிளகுத் தூளும், கற்பூரத்தையும் போட்டுக் கொதிக்க வைத்து அந்தத் தண்ணீரைத் துணியில் நனைத்துச் சுளுக்கு உள்ள இடத்தின் மீது போடுங்கள். அல்லது டர்ப்பன்டைன் எண்ணெயைத் தடவினாலும் சுளுக்கு விட்டு விடும்.

அறுகம்புல் சாறை மோருடன் குடித்தால் நீரிழிவு குறையும். உலர் திராட்சைப் பழத்தை வெது வெதுப்பான தண்ணீரில் அரை மணி நேரம் ஊறவைத்து காலையில் அருந்தினால் மாதவிடாய்க் கோளாறுகள், இதய நோய் தீரும்.

புடலங்காயின் இலைச்சாறு, காலையில் குழந்தைகளுக்குத் தருவதால் கக்குவான், இருமல் குணமாகும். மலச்சிக்கல் நீங்கும். புடலங்காயை சமைத்து உண்பதால் தேவையில்லாத உடல் பருமன் குறையலாம்.

கரட் சாறும் சிறிது தேனும் பருகி வந்தால் கர்ப்பிணிப் பெண்களுக்கு வாந்தி மட்டுப்படும். எலுமிச்சை பழச் சாற்றில் ரசம் செய்து சாப்பிட்டால் உஷ்ணம் குறையும். கடுகை அரைத்து வலியுள்ள பகுதியில் போட்டால் வலி குறைந்து விடும்.

நுரையீரல் சம்பந்தமான நோய்கள் குணமாக வெற்றிலைச் சாற்றில் இஞ்சி சாற்றை சேர்த்து குடித்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும். எள், எள்ளில் இருந்து வரும் நல்லெண்ணெய்யைக் கொடுக்க உடல் இளைந்துக் காணப்படுபவர்கள் தேறி, உடல் எடை அதிகரிக்கும்.



## சித்த மருத்துவ ஆரோக்கிய குறிப்புகள்

1) பொன்மேனி தரும் குப்பைமேனி

குப்பை மேனி இலையையும் உப்பையும் சேர்த்து அரைத்து சொறி, சிரங்குகளுக்குத் தேய்த்து வர குணமாகும்.

2) தேளை விரட்டும் குடியோட்டிப்பூண்டு

பிரம்மதண்டின் பச்சை வேரைச் சிதைத்து தேள்கடி வாயில் வைத்துக் கட்ட நஞ்சு நீங்கும்.

3) வயிற்றுவலி போக்கும் நறுவிலி

நறுவிலிப்பட்டையை இடித்துச் சாறு பிழிந்து, தேங்காய்ப் பாலில் கலக்கி குடிக்க கடினமான வயிற்றுவலி போகும்.

4) காற்று சுத்திகரிப்பான் - சர்க்கரை

சர்க்கரையை நாள்பட்ட நோயாளிகளின் படுக்கை அறையில் புகைக்க சுத்தக்காற்று உண்டாகி அறை சுத்தப்படும்.

5) தலைப்பாரம் நீக்கும் கிராம்பு

கிராம்பை நீர்விட்டு மை போல அரைத்து நெற்றியிலும் மூக்குத் தண்டின் மீதும் பற்றிட தலைப்பாரம் நீரேற்றம் குணமாகும்.

6) காயத்துக்கு காட்டாமணக்கு

காயம்பட்டு, இரத்தம் வெளிப்பட்ட இடத்தில் காட்டாமைக்கு பாலைப் பூச குருதி நிற்கும். காயமும் ஆறும்.

7) உப்பலுக்கு உப்பிலாங்கொடி

As was expected, the 20-time Major winner Roger Federer will not compete at the next year's Australian Open. The 40-year-old experienced the third knee surgery within a year and a half a couple of months ago, and he can not rush anything on his recovery process.

Roger wants to get back at 100% and fight for the notable titles again in the rest of his career, hoping to return to the court the following summer after Wimbledon. Federer played 19 matches in the last two seasons, struggling with a knee injury and undergoing three surgeries to prolong his career.

Roger played on a high level in 2019, finishing third in the standings behind Nadal and Djokovic and preparing another strong run in 2020 with the Australian Open semi-final. As it turned out, that was Roger's last tournament for the next 13 months, struggling with a knee injury and undergoing surgeries in February and May.

Last October, Federer returned to the practice court and was ready to compete again eight months ago in Doha. The veteran entered five tournaments in 2021, picking his schedule wisely and winning nine out of 13 matches. The Swiss advanced into the Wimbledon quarter-final as the oldest player in the Open era, winning four encounters before suffering a massive loss to Hubert Hurkacz and undergoing third knee surgery.

Starting another rehabilitation at 40, Federer is eager to compete in the second part of 2022 and fight for the trophies. Roger Federer will skip the upcoming Australian Open. Thus, the Swiss maestro will skip the Australian Open for the second straight year, and we still remember his thrilling run from January 2020.

In the third round, Federer prevailed over John Millman in the decider's match tie break, winning the last six points from 8-4 down to cross the finish line first. Roger saved seven match points in a thriller against Tennys Sandgren to find himself in the semi-final, where he lost to Novak Djokovic 7-6, 6-4, 6-3 in two hours and 18 minutes.

"I would be shocked if I were to play the next year's Wimbledon. Australia is not an option, and it never was. That comes as no surprise. Even before the operation, we knew I would need several months away from the court.

I wanted to wait for the first major test before making a public statement, and the results were very encouraging. I have started a lengthy rehabilitation process, putting all my heart and soul into it," he said.

## *The Ride4Ceylon*





The Ride4Ceylon began in Colombo Green on Wednesday 17/11/2021 and has reached Manipay on saturday 20/11/2021

The Ride4Ceylon Team have had a busy year. Their fourth and most successful annual Ride and a Covid-19 Rapid Relief Food Aid Programme for 2020 has been completed and now their sights are set on 2021, for which the theme is 'Hope Beyond Cancer'.

Since its inception in 2017, Ride4Ceylon has made its presence felt island-wide. An annually sponsored cycle ride from Colombo to Jaffna, it attracts local and international cyclists, who raise funds for Sri Lanka's landmark Green Memorial Hospital in Manipay. To date the Ride has raised around £200,000 in funds, equipment and materials, resulting in routine and specialist medical services, in-patient facilities, clinical staff, nurses' training, a new ambulance and the development of a Paediatric Ward.

In 2021, the Ride was focus on raising funds to redevelop the Hospital's historic Mission House into a ground-breaking cancer care and research facility, Hope Beyond Cancer (HBC). The idea for a cancer unit flowed from the tragic death of Rochelle, wife of Rider Stanmore Anandarajah, in 2017. "Sri Lanka already has good cancer diagnosis and treatment facilities, but sadly, for some patients, cancer treatment doesn't work," explained Ride4Ceylon Trustee Dr. Jayantha Arnold. "That's where HBC steps in, primarily as a palliative care provider."

In clinical terms, HBC will have 24/7 onsite medical support which will be a new feature for a palliative care service. Services will include nutritional support and physiotherapy. Palliative care will offer pain relief and oxygen, alongside counselling services.


Last year, 35% of sponsorship monies were designated to HBC, enabling work to start this November. "That's the really exciting part," enthuses fellow Trustee, Arni Arnold, "to be able to rally funds for a cause, realise that money and build further next year". Indeed, in 2021, 60% of monies raised will support HBC.

The ripple effects of Ride4Ceylon extend through the health system. Not only has it provided sports equipment to support community health, but the Trustees personally donated funds towards the establishment of Peradeniya Teaching Hospital's new Orthopaedic High Dependency Unit, in recognition of a Peradeniya Consultant's invaluable advice towards the Green Memorial project.

"We've been really energised by the commitment of our network and that inspires us to grow," recounts David Rasiah, who co-organises the Ride with others. "The dedication of our Chief Ride Organiser Nishantha Abeywardena and Ride Captain Kumar Kalyanakumar alone is immense."

"But ultimately, our success comes down to our cause. People see what we're trying to achieve and it strikes a chord". In many ways, Hope Beyond Cancer captures the heart of Ride4Ceylon: restoring our past to meet today's needs and building for tomorrow. Forget the Tour de France; we have a Tour de Force.

# கலைக் கதிர்



## கலைப் பரம்பரையில் உதித்த கலாஜோதி சுஜந்தினி யுவராஜா



மூதூர் சம்பூர் கிராமத்தைப் பூர்வீகமாகக் கொண்ட செல்லக்குட்டி ஐயா ஜானகிதேவி தம்பதியினருக்கு மூத்த மகளாகப் பிறந்தவர் கவிஞர் சுஜந்தினி யுவ ராஜா. பெற்றோர்கள் இருவரும் கலைத்துறையில் சிறந்து விளங்கி மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்ற வர்கள். அவர்களது வழித்தோன்றலில் சுஜந்தினியும் ஓர் எழுத்தாளராக, கலைஞராக திகழ்ந்து தேசியம் முழுவதும் அறியப்பட்டவராக விளங்குகின்றார்.

பாடசாலை அதிபராக தனது கல்விப் பணியை முன் னெடுத்துச் செல்லும் இவர், சிறந்த ஆளுமையும் நிரு வாகத் திறனும் உள்ளவராகக் காணப்படுவதால் கல் வியலாளர்கள் மத்தியில் இவருக்கென்று ஒரு தனியிட மும் மரியாதையும் இருக்கிறது.

இலக்கியத்தின்பால் ஈர்ப்புக் கொண்டு பல்வேறு படைப்புகள், ஆக்கங்களை வெளியிட்டு வாசகர்கள் மத்தியில் பிரபல்யத்துடன் விளங்கும் இவர், சம்பூர் பிரதேசத்தின் முதலாவது பெண் எழுத்தாளர் என்ற பெருமையினையும் தனதாக்கிக் கொண்டுள்ளார்.

பல்துறை ஆளுமைமிக்க 'சம்பூரணி' சுஜந்தினி யுவராஜாவின் படைப்பாக்கங்கள் மண் வாசனை, தமிழ் உணர்வு மற்றும் புதுமை என்பவைகள் நிறைந் ததாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

தொட்டவைகளைத் துலங்கச் செய்யும் ஆற்றலும் ஆளுமையும் அமையப்பெற்ற சுஜந்தினி அன்புள்ளம் கொண்டவராக, அடுத்தவரை மதிக்கத் தெரிந்தவராக, இன, குல வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டவராகத் திகழ்வது அவரில் நிறைந்திருக்கும் சிறப்பம்சமும் விசேட குணாதிசயமுமாகும்.

கல்வி கற்கும் காலத்திலிருந்தே கட்டுரை, பேச்சு, விளையாட்டு, நடனம், பாடல், கவிதை, வில்லுப்பாட்டு, சிறுகதைப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்றுள்ள இவருக்கு 500 இற்கு மேற்பட்ட சான்றிதழ்கள், 9 விருதுகள் கலை இலக்கியப் பணிக்காக கிடைக்கப் பெற்றுள்ளன.

மேலும் பல கவியரங்குகளிலும் பங்குபற்றியுள் ளார். பாடசாலைக் காலங்களில் பெற்ற சான்றிதழ்கள், விருதுகள் என்பன 2006 ஆம் ஆண்டு இடப்பெயர் வின் போது அழிவுக்குள்ளாகி விட்டதாக மிகுந்த வருத் தத்துடன் கூறும் இவர், அதன் பின்னரான ஆவணங்க ளைப் பத்திரப்படுத்தியுள்ளார்.

**ஆசிரியர் தினம் (கவிதை- வலய மட்டம் இரண்டாம் இடம்)**

**பிரதேச இலக்கிய விழா (கவிதை - இரண்டாம் இடம்)**

**பாடலாக்க போட்டி விருது (முதலாமிடம் - பிரதேச கலை இலக்கிய விழா)**

**புகைப்பட போட்டி, நுட்ப விருது**

**யாழ் நூலக கவிதை விருது (இலக்கியப் பூந்தோட்டம் - பிரான்ஸ் மனித உரிமைகள் சங்கம்)**

**கவியருவி விருது (தேடல் கலை இலக்கிய அமைப்பு)**

**நட்சத்திரக் கவி விருது (இந்தியா)**

**மண் மணக் கவிஞர் விருது (இந்தியா)**

**பைந்தமிழ் பா மணி விருது (மகளிர் தினம், இலக்கி யத் துறை, இலங்கை)**

**கவி மின்னல் விருது (இந்தியா)**

**மண்மணக் கவிஞர் விருது - இந்தியா**

**கவிச் சூரியன் விருது (இந்தியா)**

போன்ற பல்வேறு விருதுகளுக்கு கவிஞர் சுஜந் தினி உரிமையாளராக விளங்குகின்றார்.

இவரது ஆக்கங்கள் தினகரன், வாரமலர், தமிழன், மெட்டோ நியூஸ் போன்ற பத்திரிகைகளில் வெளிவந் துள்ளன.

**சஞ்சிகைகள் :-**

**கொட்டியாரம் (அனாமிகா வெளியீடு - லண்டன்)**

**யாழ் நூலக எரிப்பு (மனித உரிமைகள் சங்கம் - பிரான்ஸ்)**

**கார்த்திகை சஞ்சிகை**

**நீங்களும் எழுதலாம் சஞ்சிகை**

**தேடல் கலை இலக்கிய சஞ்சிகை**

**உதயம் சஞ்சிகை**

**மணி விழா மலர் - கல்வி வலயம் திருகோணமலை**

**தரளம் சாகித்ய விழா மலர் - திருகோணமலை**

**நித்திலம் சஞ்சிகை - மாகாணக் கல்வித் திணைக்களம்**

**நுட்பம் விழா மலர் - மட்டக்களப்பு**

ஆகிய சஞ்சிகைகளிலும் இவர் எழுதியுள்ளார்.

இவர் எழுதிய முதலாவது நூல் 'சேவலின் விடியல்' இரண்டாவது நூல் வெளியீட்டுக்குத் தயாராகவுள்ளது

பல போட்டி நிகழ்வுகளுக்கு நடுவராகப் கடமை யாற்றி பலரினதும் பாராட்டுக்களைப் பெற்றுக் கொண் டுள்ள கவிஞர் சுஜந்தினி உலகத் தமிழர் கலை மற்றும் பண்பாட்டுப் பேரவை இலங்கைக் கிளையின் நிருவாக உறுப்பினராகவும் உள்ளார். பல இணைய வழிக் குழும நிருவாகத்திலும் உறுப்பினராக இருந்து சிறப் பாக இலக்கியப் பணி செய்து வரும் 'சம்பூரணி' சுஜந் தினி யுவராஜாவை நாமும் வாழ்த்தி அவரது பணி களை வரவேற்போம்.

- கலாபூஷணம் பீ.ரீ. அஸீஸ்



## சூன்யத்தின் பெருவெளியில் ஒரு சிறு துளி

திருக்கோவில் கவியுவன்

இருளடர்ந்து வரும் அந்திப்பொழுதொன்றில்
ஏதேனும் ஒரு ஆற்றின் பரப்பை பார்க்கையிலே
மனது பிசையும் உணர்வை உதற முடியவில்லை
என்னால் எப்போதுமே
மனதின் விசாலங்களை
சூன்யம் சூழும்போதெல்லாம்
பெருமணல் பரப்பிக்கிடக்கும்
அந்தி நேரத்து ஆற்றோரத்தை
தனியாய் அலைந்து திரிய
மனது விளைகின்றது
முன்பனிக்காலமொன்றில்
குளிர் சுருட்டும் உடலோடு
தோழனொருவனின் நெஞ்சினில் சாய்ந்தபடி
நிலவை வெறித்த
ஆற்றோர தில்லை மர வாழ்வை
எப்படி நான் மறந்து போனேன்
மெலிதான அரவத்திலும்
துணுக்குற்று விழித்தெழுவதும்
பின் நீளும் இரவுகளை
கதை மொழிந்து கடத்துவதும்.
ஆட்காட்டியின் கேவலிலே
அனைத்தும் அடங்குவதும்
சோவெனப் பெய்யும் மழையில்
விறைத்து நடுங்குவதும்
எப்படி மறந்தேன் என் தில்லை மர வாழ்வை?
ஆழப்படுக்கையினில்
அளவற்ற அற்புதங்களைப்
பொதித்திருக்கும்
கோரைக்களப்பாறு அமைதியாய்
தூங்கும் நடு நிசி நேரத்திலே
துள்ளியெழும் கயல் மீனில்
நிலவு தெறிக்க உண்டாகும்
வெள்ளி வளைவுகளை ரசித்த
தருணங்களை எப்படி நான் மறந்து போனேன்?
அந்த இரவுகள் அச்சங்களில் முடிந்தது
அந்த இரவுகள் அழுகைகளில் முடிந்தது
அந்த இரவுகள் மரணங்களோடு முடிந்தது
அந்த இரவுகள் காதலின் துயரோடு முடிந்தது
ஆனாலும் யாவற்றையும் மீறி
அந்த இரவுகள் நம்பிக்கையோடு முடிந்தது
எப்படி மறந்தேன் என் தில்லைமர இரவுகளை?

## வாய் வீச்சு வீரரம்மா

தசாப்தங்கள் கரைந்திடினும்
திசைக்கொரு திருவோடாய்
தன்மானம் விற்ற பெருமை
திமிரோடு நாமுரைப்போம்

விலைபோன வீறாப்பும்
வலி மறந்த மாறாப்பும்
மூழ்கிப்போன முதுசங்களாய்
மீளாத்துயில் கொள்கின்றது


நானுமோர் வீரனென்று
மார் தட்டும் கூட்டங்களுக்கு
நாட்டிலிப்போ பஞ்சமில்லை
மீண்டு வரவும் தஞ்சமில்லை

தன்மானம் என்பதெல்லாம்
தீக்கிரையாகிப் போச்சு
துண்டிலிலே சுருட்டுவதெல்லாம்
தலைவர்களின் இலட்சியமாச்சு

- கனக.தீபகாந்தன் -



# கலைக் கதிர்



**அமரர் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களின் நினைவுடன் அவரது ஆக்கம் ஒன்று**

## தமிழர் வாழ்வில் சுத்தம் பேணல்

'பக்திக்கடுத்தது பரிசுத்தம்' என்பது பழமொழி – தன் பொருள் பக்திக்கு அடுத்தது என்றால் பக்திக்குப் பின் என்பதல்ல பக்திக்கு வேண்டியது பரிசுத்தம் என்பதாகும். பரிசுத்தம் உள்ளடத்தில் தான் பக்திநிலை பெற வேண்டும். அதனால்தான் வழிபடும் இடமான கோயிலைச் சுத்தமாக வைத்திருக்கின்றோம். வீடுகூடக் கோயில்போல இருக்க வேண்டும் என்பார்கள்.

கோயிலுக்குப் போகும்போது நீராடித் தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து செல்ல வேண்டும் என்பது விதி – இதில் முழுக்க முழுக்கச் சுத்தம் பேணுவதே முதன்மையாகிறது – சுத்தமான நிலையில்தான் மனதில் பக்தி உண்டாகும் என்பதைச் சொல்லாமலே தெரியும்.

பூசைச் சாமான்களைக் கழுவிக் கொண்டுபோய் பயன் படுத்தும் வழக்கம் – பூக்களைக் கூடக் கழுவிக் கொடுத்தல் – கோயிலின் உள்ளே செல்லும்போது கால்கை கழுவிச் செல்லுதல் – வாய் கொப்பளித்துவிட்டுச் செல்லுதல் என்பதெல்லாம் சுத்தம் பேணுதலின் அடிப்படைப் பழக்கங்களே.

கோயில் கூட்டுதல், கழுவுதல், மெழுகுதல் எல்லாம் சரியை வழிபாடுகளாகவே கைக்கொள்ளப்படுகின்றன. இதனை அப்பர் சுவாமிகள்

**நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா**
**நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்**
**புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்**
**பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி**

வணங்க வேண்டும் என்கின்றார். புலர்வதன் முன் என்றால் அதிகாலையில் என்பது பொருள். அலகிடுதல் என்றால் கூட்டுதல், மெழுகிடுதல் என்றால் கழுவுதல், பூமாலை புனைந்தேத்தி என்றால் பூக்களைப் பறித்துத் தூய்மைப் படுத்தி மாலை தொடுத்துக் கொடுத்து வணங்குதல்.

பூசையில் பயன்படுத்தப்படும் பன்னீர், சந்தனம், ஊதுபத்தி, சாம்பிராணி முதலான நறுமணப் பொருள்கள் எல்லாம் சுத்தம் பேணுதலையே அடிப்படையாகக் கொண்டன. பலர் கூடும் இடத்தில் பலருடைய மூச்சுக் காற்று, வியர்வை என்பன மூலம் வரும் அழுக்குகளை, துர்நாற்றங்களை எல்லாம் தூய்மைப்படுத்தி மக்களின் மனங்களைக் குதூகலப்படுத்தி பக்தி உணர்வை உண்டாக்கப் பூசைப் பொருள்களின் நறுமணம் உபகாரமாக அமையும்.?

பூசைக்கு முன் கோயிலைச் சுத்தமாக்குவது போலப் பூசைக்குப் பின்னும் சுத்தமாக்கும் வழக்கமும் இதற்கானதே. சுத்தமான இடத்தில்தான் சுகம் இருக்கும் என்பதே இதன் பொருள் ஆகும்.

கோயிலுக்குள்ளே போனதும் ஒருவித நறுமணம் எம் மனதைக் கவர்ந்து குதூகலப்படுத்தும், கோயிலுக்குள்ளே ஆண்கள் உடல் முழுவதும் நிலத்தில் படும்படி அட்டாங்க நமஸ்காரம் செய்வதும், பிரதிஷ்டை செய்து வீதியில் உருண்டு வணங்குவதும் கோயிலின் தூய்மையால்தான் செய்ய முடிகிறது. பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்வதும் அடிஅழித்து வணங்குவதும் கூட கோயில் சுத்தத்தில்தான் தங்கியுள்ளது.

கோயில் சுற்றுப்புறம் எல்லாம் சுத்தமாய் இருத்தலால்தான் கோயில் கிணற்று நீர் சுத்தமாய் இருக்கிறது. பக்கத்து வளவுகளுக்குள் இருக்கும் கிணறுகள் உவர்ப்பாயிருந்தாலும் கோயிற்கிணறுகள் தூய நீராயிருப்பதும் – கோயில் கிணற்று நீர் தீர்த்தமாகித் தீராநோய் தீர்க்கும் மருந்தாக இருப்பதற்கும் காரணம் தூய்மையே. உடல் உளத்தூய்மையுடன் தூய பக்தியுடன் கடவுளை வணங்குவதால் கடவுளுக்கு வார்த்த தீர்த்தமும், படைத்த பிரசாதமுமே உடல் உளப் பிணி தீர்க்கும் மருந்தாக மாறிவிடுகின்றன.

எனவே கொரோனாவை விரட்டுவதற்கும், தூய்மை பேணுதலும், மன அமைதி பேணுதலும், பயம் இன்மையும் இன்றியமையாதனவாகின்றன.

வீட்டிலிருந்து புறப்படும்போதும், வெளியில் செல்லும் இடங்களிலும் கைகழுவ வேண்டும் என்பது சுத்தம் பேண வேண்டும் என்பதேயாகும். நம் முன்னோர் வாழ்வுமுறையை நினைந்து நாமும் வாழ்வோமானால் கொரோனா என்ற பேச்சுக்கே இடமில்லை.

**கலாபூஷணம், சைவப்புலவர்**
**சு. செல்லத்துரை**

# சகுனம் சரியில்லை!



கார்த்திகைத் தீபம்

எங்கும் கலங்கரை விளக்கம் போல் காட்சியளிக்கும் தீபங்களின் வெளிச்சம்.

இரவு என்ன சீக்கிரமாக வந்துவிட்டதோ..? என்று புளியமரத்தில் இருந்த ஆண் குரங்கு தன் காதலியிடம் பேசிக்கொண்டு இருந்தது.

ஆகா, ஆகா.. என்ன அழகு... மின்மினிப் பூச்சிகள் போல் ஒளிர்கின்றன.. என்று மறுமொழி கூறியது பெண்குரங்கு.

அங்கு பார்த்தாயா? ஒரு கருவண்டு தன் காதலியிடம், அந்த ஒளியைக் கொண்டு வருகிறேன் என்று சென்று, ஒழிந்து போனது. இது அல்லவா காதல்? என்றது ஆண் குரங்கு.



ம்.ம்.ம்.. அங்க நல்ல உத்துப்பாரு.... தன் காதலன் கருகியதைக் கண்டு தானும் உடன்கட்டை ஏறியது பெண் வண்டு... இதுதான் காதல்... குர்....குர் என்று பெண்குரங்கு கத்தியது.

மனிதருக்குக் குரங்குகள் பேசுவது எப்படிப் புரியும்? அது, குர்... குர்... குர்.. என்று அல்லவா கேட்கும்...? குரங்குகள் பாசை அது அல்லவா? அவை குர்.... குர்... என்றுதான் பேசும்!

மனிதர்களுக்கு எவையெல்லாம் பிரச்சினைகளாக இருக்கின்றனவோ, அவையெல்லாம் சகுனம் சரியில்லை என்று கூறப்பட்டுவிடும்.

டேய் குணா, அந்தப் பட்டாச எடுத்திட்டு வா.... பொழுது இறங்குற நேரத்துல இந்தக் குரங்குங்க குர்ருனு.. குர்ருனு.. கத்திகிட்டு இருக்குது

அணுகுண்டை எடுத்து வந்து பற்றவைத்தான்.

'ச்ரி.. ச்ரி' என்று திரியில் தீப்பற்றியது.

பாவம் ஆண்குரங்கு தன் காதலை வெளிப்படுத்தும் தறுவாய் அது.

தான் பறித்த சுவையுள்ள புளியம்பழத்தைக் கொடுத்து காதலை வெளிப்படுத்தலாம் என்று அது எண்ணியிருந்தது.

அந்தவேளையில் திடீரென்று டமால்! என்று சத்தம்.

கையிலிருந்த புளியம்பழம் பயத்தால் கை நழுவிக் கீழே விழுந்து அதன் புறப்பகுதி உடைந்து மண்ணானது.. பெண் குரங்கு அஞ்சிக் கிளை தாவியது.

என் கை நழுவிய புளியைப்போல அவளும் புளியமரத்தை விட்டு நழுவிச் சென்றாள்.. என்ற மன வேதனை குரங்குக்கு.

அணுகுண்டுவின் சத்தம் அந்த ஆண் குரங்குக்குச் சரியில்லாத சகுனம் போலும்..

முற்றும்

# கல்விக்கதிர்



# நீங்கள் பரீட்சைக்குத் தயாராவது எப்படி?

திரு.சு.இரகுராகவன்
யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்.

கல்வி என்பது கற்றல் மட்டுமல்ல மாற்றங்களிற்கு ஆளாக்குதல் என்கின்ற முக்கிய நோக்கத்தையும் கருத்தில் கொண்டதொரு உயர்ந்த செயற்பாடாகிறது. இத்தகைய கல்வி என்பது ஒவ்வொரு பிள்ளையினதும் தனித்துவத்திற்கும் ஏற்றவகையில் அவர்களால் உள்ளெடுக்கப் படுகிறது. இத்தகைய கல்வி மூலம் ஒருவன் சமூகத்தில் தான் வாழ்வதற்கும் ஏனையோருக்கும் பயன்படும் வகையில் தனித்துவமுடையவனாக்கிக் கொள்வதற்கும் கல்வி பயன்படுகிறது.

சமூகத்தில் உருவாக்கப்பட்ட முறை சார்ந்த நிறுவனமான பாடசாலை என்பது ஒவ்வொருவனதும் தனித் திறன்கள், ஆற்றல்களை அறிந்து அவனை சமூகத்தில் முன்னோக்கி நிறுத்துவதில் முன்னோடியாகச் செயற்படுகிறது. இச்செயற்பாடுகளில் பரீட்சை என்பது முக்கியமாகிறது. படிப்பின் வெற்றிப்படிகளைப் பரீட்சை தான் தீர்மானிக்கிறது. படிப்பை எந்தளவிற்கு வெற்றி கொண்டுள்ளீர்கள் அல்லது வளமாக மாற்றி கொண்டுள்ளீர்கள் என்பதனை அளவிடும் முறைதான் சோதனை. கல்வியின் அளவை அளவிடும் குறிகாட்டிகள் தான் பரீட்சையின் பெறுபேறுகள் இலங்கைக்கல்வி முறையினை பொறுத்த வரையில் 13 வருடங்கள் வரையில் பாடசாலைக்கல்வி நிறைவேற்றப்பட வேண்டும்.

முறைசார்ந்த பாடசாலைக்கல்வி முறைகளை பொறுத்தவரையில் மூன்று தேசிய தடை தாண்டல்கள் உள்ளன. அவையாவன

1. தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை - இப்பரீட்சையில் சித்தி அடைவதன் மூலம் நிதிவளங்கள் நிறைந்த பாடசாலையில் கல்வியைத் தொடர முடியும்.

2. கா.பொ.த. சாதாரண தரப்பரீட்சை (G.C.E O/L) - இதில் சித்தி பெறுவதன் மூலம் உயர்தரப்பரீட்சையில் தோற்ற முடியும். பரீட்சையின் பெறுபேறுகளை பொறுத்து உயர்தரப் பாடத்தெரிவுகளை மேற்கொள்ள முடியும்.

3. கா.பொ.த. உயர் தரப்பரீட்சை (G.C.E A/L) - இதில் சித்திபெறும் பெறுபேறுகளிற்கிணங்க எமது வாழ்க் கையில் மிகப்பெரிய மாறுதல்கள் ஏற்படும்.

இப்பெறுபேறுகளின் அடிப்படையில் பின்வரும் நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

1. பல்கலைக்கழக பட்டப்படிப்புக்களை அரச செலவிலேயே பெற்றுக்கொள்ள முடியும்.

2. பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வியில் நுழைந்து வைத்தியர், பொறியியலாளர், வழக்கறிஞர் போன்ற பல்வேறு மதிப்புமிக்க தொழில்களை மேற்கொள்ள முடியும்.

3. சிறந்த வேலைகளில் இணைந்து நீடித்த தொழில்களில் சிறந்து விளங்க முடியும்.

இவ்வாறான பாடசாலைக்கற்றல் தோல்வியடையும் சந்தர்ப்பத்தில் ஏமாற்றம், மனஅழுத்தம், ஊக்கமின்மை ஏற்பட்டு விடுகின்றது. இவற்றை தவிர்ப்பதற்கு சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளுதல் என்பது அவசியமாகின்றது.

எனவே நீங்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு வெற்றி இலக்கைத் தீர்மானித்தல்.

பல தடவை தீவிரமாக சிந்தித்தல்.

கடினமாக ஆர்வத்துடன் கற்றல்.

என்பன கல்விச் செயற்பாட்டில் முக்கியமாகின்றன. கற்றல் செயற்பாடுகளில் எமது செயல் ஒழுங்குகளை பின்வருமாறு தெரிவு செய்து கொள்வதனாலும் ஒழுங்கு படுத்தி கொள்வதனாலும் கல்வியின் இலக்கான பரீட்சையையும் பெறுபேறுகளையும் அடைந்து கொள்வது இலகுவாகின்றது.

∗ நீங்கள் யார்?

வெற்றிக்கு முதல் வழி இதுதான் ஏன் தெரியுமா? உன்னில் மிகவும் வலுவாக செல்வாக்கு செலுத்துவது நீதான் எனவே நீங்கள் யார் என்பதை அறிந்துகொள்ளல், உங்களுடைய பலம் பலவீனங்களை அறிதல், உங்களைப் பற்றி சகபாடிகளிடத்திலுள்ள கணிப்பு, உங்களது ஆசிரியர் உங்களிடம் கொண்டுள்ள அபிப்பிராயம், குடும்பத்தவர் உங்கள் மீது வைத்துள்ள கணிப்பு, நீங்கள் உங்கள் ஆற்றல்களையும் வளங்களையும் பயன்படுத்தும் முறை, வளர்ந்த விடயங்கள், மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியவை பற்றி இலக்குடன் தீர்மானித்தல்.

∗ வீட்டில், பாடசாலையில், மேலதிக வகுப்பில் கற்றல்.

வீட்டில் முரண்பாடற்ற நபராக ஒரு நிதானத்தையும் சமநிலையையும் ஏற்படுத்தி கொள்ளுதல் அவசியமாகிறது.

பாடசாலையில் வகுப்பறைகள், நூலகத்தைப் பயன்படுத்தி கொள்ளல், ஆசிரியரை அணுகி சந்தேகத்தை நிவர்த்தி செய்தல், மேலதிக கற்றல் சார் விடயங்களை அறிந்து கொள்ளல், பாடசாலை பௌதீக வளங்களையும் சூழலையும் பயன்படுத்திக் கொள்ளல், பயனுடையதாகும். மேலதிக வகுப்புக்களிலும் நேர அட்டவணையை பயன்படுத்திக் கொள்ளல் பயனுடையதாகின்றது.

∗ பாடம், படிப்பு, வினா - விடை பற்றித் தெளிவாகிக் கொள்ளல்.

பாடத்தை கற்றுக்கொள்ளல் என்பது மிக அடிப்படையானது. ஒழுங்கமைந்த வகையில் கற்றுக்கொள்வதும், கற்றவற்றை மீட்டிக்கொள்வதும், தேசிய பரீட்சையின்படி வினாத்தாள்களை அறிந்துகொள்வதும், படித்த விடயங்களை வினாத்தாளிற்கு ஏற்றவகையில் மாற்றி அமைத்து கொள்ள பயிற்சி பெறுவதும் முக்கிமானதாகும். மேலும் பாடத்திட்டங்களை விளங்கிக் கொள்வதோடு ஒவ்வொரு பாடத்தொகுயிலும் எத்தனை வினாக்கள் என்பதோடு செய்முறைக்குரிய பாடங்க ளையும் அறிந்து கொள்ளல் முக்கியமானதாகும்.

∗ ஒவ்வொரு பாடங்களிலும் உங்களது நிலை?

எல்லாப் பாடங்களிலும் ஒரே மாதிரியான நாட்டமும் அடைவுநிலையும் காணப்படுவதில்லை. அவை பற்றி நீங்களே மதிப்பீடு செய்து கொள்வது முக்கியமாகிறது. எப்பாடம் சுலபமானது? எவற்றை முயன்று படிக்க வேண்டும்? எவற்றில் புள்ளிகள் குறைவாக கிடைக்கிறது? அதற்கான காரணங்களை அறிந்து மேலதிக கற்றல் மூலம் சீர்படுத்திக் கொள்ளல்.

∗ உங்களது கற்கும் முறைகள்

நீங்கள் எப்படி கற்கிறீர்கள்? எத்தனை தடவை கற்கிறீர்கள் எத்தனை மணித்தியாலங்கள் கற்கிறீர்கள், திரும்பக்கற்றல், ஆசிரியர்கள், சிரேஷ்ட மாணவர்களுடன் கலந்துரையாடுதல், கடினமான பகுதிகளிற்கு அதிக நேரம் ஒதுக்குதல், ஆய்வும் ஒழுங்கமைப்பும், மீளக்கற்றல் போன்ற பல்வேறு படிநிலையான கற்றலில் திருப்தி, விருப்பம், மகிழ்ச்சி நிலைகளை ஏற்படுத்துகிறது.

∗ பரீட்சைக்கு தயாராகுதல்.

பரீட்சைக்கு தயாராவதற்கு மனரீதியாக நம்பிக்கைகளை பலமாக வளர்த்து கொள்வது அடிப்படையாகிறது. இதற்கு பின்வரும் காரணிகள் அவசியமாகின்றன.

போதுமான ஓய்வு, முரண்பாடு மற்றும் பிரச்சினைகள் இன்றி இருத்தல், நம்பிக்கை உணர்வு, எதிர்மறைச் சிந்தனைகளை தவிர்த்தல், இலேசாக அல்லது திருப்திகரமாக இருத்தல், பரீட்சைக்காலம் நேரம் பற்றி ஏலவே அறிந்து கொள்ளல், பரீட்சை எழுதும் நுட்பங்களை அறிந்து கொள்ளல் என்பன கற்றலின் இறுதி இலக்காகிய பரீட்சையில் முக்கிய படிகளாகின்றன.

பன்முகப்பட்ட அனுபவங்களினூடாக கற்றல் சார் முறையினை செம்மையாகவும் ஆராய்வுடனும் தெளிவுடனும் அணுகுகின்ற போது அதன் தொடர்ச்சியான பரீட்சையும் எமது நோக்கமும் இலக்கும் சிறப்பாக அமைந்து விடுகின்றது. இவற்றின் மூலம் வெற்றியும் மகிழ்ச்சியும் உங்களுடையதாகி விடுகின்றது.

# கட்டுரை எழுதும் முறைகள்

கட்டுரை எழுதும் முறை பற்றி சிந்திப்பது முக்கியமான கற்றல் முறையாகும். ஒரு அர்த்தம் உள்ளக்கருத்துக்களை இவற்றுள் இணைத்து எழுதுதல் என்பது, தனித்திறமையாகும். அவ்வாறு, கதையோ, கட்டுரையாகவோ வெளிப்படுத்தலாம். கட்டுரை எழுதும் அமைப்பு முறைகள் பற்றி இங்கு தெரிந்து கொள்வோம்.

ஒரு பொருளைப்பற்றி இலக்கண முறையில் கட்டுரைப்படுத்தும் கட்டுரை 'அழகு நிரம்பிய உரையைக் கட்டுரை என்கின்றோம்'. இவ்வாறு, அறிஞர்கள் விளக்கம் தருகிறார்கள். சுருக்கமாகக் கூறினால், குறிப்பிட்ட ஒரு பொருளைப் பற்றி, ஒரு கட்டுக் கோப்புடன் அனைவற்றையும் ஈர்க்கும் முறையில் உள்ளமைக்கப்படுவதைக் 'கட்டுரை' எனலாம்.

## கட்டுரை அமைப்பு

அடுத்ததாக, கட்டுரையின் அமைப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் காண்போம். எந்தப் பொருளைப் பற்றிக் கட்டுரை எழுதுவதற்கு முன்னரும் அது, முன்னுரை - பொருளுரை - முடிவுரை ஆகியவை கொண்டு விளங்க வேண்டும்.

முன்னுரையும் முடிவுரையும் ஒவ்வொருபத்திக்குள் அமையவேண்டும். முன்னுரையானது கட்டுரையின் பிரதான கருத்தை குறித்துக்காட்டுவதாக இருக்க வேண்டும். முடிவுரையானது சொல்லப்பட்ட கருத்துகளைத் தொகுத்துக் கூறுவதாகவும் கட்டுரையின் கருப்பொருளை முடிவுக்கு கொண்டு வருகின்ற தன்மையுள்ளதாகவும் அமைய வேண்டும். ஒரு கட்டுரையில் முன்னுரையையும் முடிவுரையையும் படித்தாலே கட்டுரையின் சிறப்புத் தன்மை விளங்க வேண்டும்.

எடுத்துக் கொண்ட கருத்தைப் பல வழிகளில் விளக்கிக் கூறுவதனூடாக கருப்பொருளை சிறப்புற செய்வதாகும். ஆதலினால் அதைப்பல பந்திகளாகப் பிரித்து எழுதுதல் வேண்டும். எடுத்துக்கொள்ளும் பொருளுக்கு பல உதாரணங்களை வைத்து பொருளளவை விளங்கமாக தெளிவுபடுத்தல் வேண்டும்.

கட்டுரையானது, சுருங்கச் சொல்ல, விளங்க வைத்தல், நன்மொழியாற்றல் முதலான அழகுகளைப் பெற்றிருக்க வேண்டும். சொல்பவற்றை கூறல், மாறுபட்டு கூறல், மற்றொன்று விவரித்தல் முதலானவை இல்லாமல் நேர்த்தியாக கூற வந்த விடயத்தை விவரித்தல் வேண்டும். அடுத்ததாக கட்டுரை கொண்டுள்ள சில பொது விதிகளைக் காண்போம்.

1. செய்திகளைத் திரட்டுதல்
2. முறைப்படுத்துதல்
3. தலைப்புக் கொடுத்தலும் பத்தி அமைத்தலும்
4. மேற்கோள்கள் - பழமொழிகள் திரட்டுதல்
5. நடை அழகு
6. நிறுத்தக் குறியீடுகள் பயன்படுத்தி உயர்த்துதல்
7. நல்லக் கருத்துக்களை எடுத்தாழும்திறன்
8. மீள்பார்வை செய்தல்
9. நல்லளெழுத்தில் எழுதுதல்

மாணவர்களே! கட்டுரை எழுதும் பொழுது இவ்விதிகளை நினைவிற் கொண்டு கட்டுரையை எழுதுங்கள்.

கட்டுரைவகை கட்டுரைகள்

1. கதை இயல்புக்கட்டுரை
2. விளக்கக் கட்டுரை
3. சிந்தனைக்கட்டுரை
4. வருணனைக்கட்டுரை
5. கற்பனைக்கட்டுரை
6. ஆய்வுக்கட்டுரை
7. வரலாற்றுக் கட்டுரை
8. தர்க்கக்கட்டுரை
9. அங்கதக்கட்டுரை
10. பாராட்டுக்கட்டுரை
11. பத்திரிகைக் கட்டுரை என்பனவாக பகுத்துக்காட்டுவர்.

சிறுவர்களே கட்டுரை எழுதுதல் விதிகள், கட்டுரையின் அமைப்பு கொடுத்தவைத் தெளிந்து நன்கு உணர்ந்து நீங்கள், நல்லகட்டுரை எழுதுங்கள்! உங்கள் படைப்பாற்றலையும் எழுத்தாற்றலையும் மிகையாக வெளிப்படுத்துவதற்கு இதுவே தருணம் முயற்சியங்கள். உங்கள் கட்டுரைகளை எமக்கு அனுப்புங்கள் தரம் கண்டு பிரசுரிப்போம் .

# கர்ணன் தந்த பரிசு...

அன்று எனது ஐம்பதாவது பிறந்த நாள். பொன் விழா ஆண்டை பெருமெடுப்பில் கொண்டாட மனைவியின் தடல்புடல் ஏற்பாடுகள். ஆனால் பெருந்தொற்று காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட நண்பர்களுக்கே அழைப்பு.

காலை முதல் மாலை வரை ஓயாத தொலைபேசி அழைப்புகள். வெளிநாடு உள்நாடுகளிலிருந்து வாழ்த்தொலிகள். அதற்கு மேலாக, உள்பெட்டி, வெளிப்பெட்டியென்று டிங்.. டிங் என கைத்தொலைபேசியில்வாழ்த்தொலிகள்வந்து விழுந்த வண்ணமிருந்தன..

வீட்டுக்கு வரக்கூடிய நண்பர்கள், உறவினர்கள் நேரில் வந்து ‘கேக் வெட்டி கப்பி பேத்டே கோரஸ் பாடி கைதட்டி ஆர வாரித்து விருந்துண்டு’ மெல்ல விடை பெற்றுக் கொண்டிருந்தனர்.

திடீரென எனது வீட்டு வாசலில் ஒரு பெரிய இன்ர கூலர் வாகனம் வந்து நின்றது. யாராக இருக்குமோ? இந்த ஊர் எம்.பி. யிடம் கூட இப்படி ஒரு சொகுசு வாகனமில்லையே என நான் யோசித்துக் கொண்டிருந்தவேளை, வாகனத்தின் முன்பக்கக் கதவைத் திறந்து கொண்டு வெகு ரிப்ரொப்பாக உடையணிந்து கால்களில் அணிந்திருந்த கறுப்புச் சப்பாத்துக்கள் கண்ணைப் பறிக்க, கையிலே ஒரு பெரிய பார்சலை ஏந்திய வண்ணம் எனது கல்லூரிக்கால நண்பன் கர்ணன் இறங்கி வந்தான்.

வந்தவனை வாசல்வரை சென்று வரவேற்று உள்ளே அழைத்து வந்து உட்காரவைத்தேன்.

என்னோடு ஒன்றாகப் படித்து பல்கலைக்கழகம் சென்று, வர்த்தக முகாமைத்துவப் பட்டதாரியான அவன் அதற்கு மேலாக மேற்படிப்புப் படித்து ஒரு ‘எக்கவுண்டன்’ ஆகியிருந்தான். நான் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராகி அதற்குள்ளேயே அமிழ்ந்து விட்டது வேறு கதை.

எக்கவுண்டனான அவனை பெரிய நிதி நிறுவனமொன்று தேடிப்பிடித்து, சந்தைப்படுத்தல் வர்த்தக, விளம்பர அதிகாரியாக நியமித்ததோடு, ஆறு இலக்க சம்பளத்துடன், ஒரு சொகுசு வாகனம், பெரிய பங்களா என வழங்கி அசத்தியிருந்தது.

இதையெல்லாம் அவனை அழைத்து வந்து உட்கார வைத்துவிட்டு, சமையலறைக்குள் உள்நுழைந்த நான் எனது சகதர்மினிக்கு காதோடு காது வைத்தாற் போல இரகசியமாய் எடுத்துச் சொன்னவுடன் மனைவி உசாரடைந்து, இரட்டிப்பான மரியாதை செய்து தடல் புடலான உபசரிப்புக்களால் நண்பன் கர்ணனை திக்குமுக்காட வைத்தாள்.

எமது விருந்துகளை மிகவும் ரசித்து உண்ட அவன், குளிர் பானத்தையும் உள்ளுறுஞ்சி அனுபவித்துவிட்டு,

‘ஐயாம் வெறி சொறி பாலா, அவசரமாய் ஒரு புறோக்கிறாமுக்கு போகவேண்டியிருக்கு’ என சொல்லியபடி இருக்கையை விட்டெழுந்தவன், தான் கையிலே எடுத்துவந்த பெரிய பார்சலை எனக்கு அன்பளிப்புச் செய்ய, அதனை எனது மகன் தனது சிமாட் போனில் ‘கிளிக்’ செய்துகொண்டான்.

வந்தவன் தான் வந்த வாகனத்திலேறி விடை பெற்றும் சென்றுவிட்டான்.

கர்ணன் என்னுடன் சிறு வயது முதலே ஒரே பாடசாலையில் படித்தவன். நானும் அவனும் பல்கலைக்கழகத்துக்கு வெவ்வேறு பிரிவுகளுக்கு சென்றுவிட்டதால் பிரிந்து செல்லும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. கல்லூரிக் காலத்தில் அவனொரு கொடாக்கண்டன். எச்சில் கையாலும் காக்கா விரட்டாத ஒரு எக்ஸ்ரா ஓடினறி. எதையும் யாரிடமிருந்தும் வாங்குவானேயன்றி கொடுத்து அறியாதவன். அதனால் ‘கஞ்சப்பிரபு கர்ணன்’ என்ற பட்டம் அவனோடு இறுக ஒட்டிக் கொண்டது.



அப்படிப்பட்ட அவன் எனது வீடுதேடி வந்து எனது பொன்விழாவைச் சிறப்பித்ததோடு பெரிய ஒரு பரிசுப் பொருளையும்எனதுகைகளில் திணித்து திக்குமுக்காட வைத்தது எனக்கு இனியில்லையென்ற மகிழ்ச்சியையும் ஆச்சரியத்தையும் தந்தது. சில வேளைகளில் கால ஓட்டத்தில் கஞ்சத்தனத்திலிருந்து அவன் மீண்டு கொடையாளியாகவும் மாறியிருக்கலாம் என்ற நினைப்பில், அவன் எனக்கு கையளித்தஅந்தப் பெரிய பார்சலை கையிலெடுத்தேன். அதற்கிடையில் எனது மனைவி அதனைப் பறித்தெடுத்து மூடிக்கட்டியிருந்த வண்ணத்தாளை நாலாக ஐஞ்சாக கிழித்தெடுத்து அதனைத் திறந்தாள்.

உள்ளே....... அவனது நிதி நிறுவன அனுசரணையுடன் வெளியிடப்பட்ட அழகிய பெரிய மனேஜ்மன்ற் டயறிகள் மூன்று, மாதக் கலண்டர்கள் நான்கு எல்லாம் நிகழும் வருடத்திற்கு உரியனவாக.

கடைக்கண்ணால் மனைவியைப் பார்த்தேன். அவள் என்னைப்பார்த்த பார்வையில் நான் பிறந்த நாளுக்குப் போட்டிருந்த புது உடுப்பை உரிவதுபோல இருந்தது.

எனது பிறந்த தினம் ஓகஸ்ட் 02.

(பி.கு: டயறியும் கலண்டரும் காலாவதியாக இன்னும் ஐந்து மாதங்கள் இருக்கின்றன என அவனது வியாபாரப் புத்தி அவனுக்கு அறிவுறுத்தியிருக்கலாம்.)

**ஷெல்லிதாஸன்**

# இலக்கிய நயம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் பிற்காலத்தில் தோன்றிய இன்சுவை நூல்களில் ஒன்று விவேக சிந்தாமணியாகும். இன்சுவைப் பாக்களைத் தன்னகத்தே நூலானது கொண்டிட்ட போதும் அன்றுதொட்டு இன்றுவரை இந்நூலாசிரியர் யார் என்பது இதுகாலும் யாராலும் குறித்துரைக்கப்படவில்லை. பல பாடல்கள் நீதிநூல்களின்பால் உள்ள வாழ்வின் உண்மைகளைச் சுவை ததும்ப அழகுற எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளன. கற்றோரன்றி பாமரரும் படித்து அறிந்து இன்புறும் வண்ணம் ஆக்கப்பட்டிருப்பது இந்நூலின் சிறப்பம்சங்களில் ஒன்றாகும்.

அழகிய பனிமலர்ச் சோலை அதில் அதிசயங்கள் கோடி இயற்கை எழில் கொஞ்சும் வனப்புக்கள் நிறைவே அங்கே நிறைந்திருந்தன. பஞ்சிலும் மெல்லிய தன் பிஞ்சுப் பாதங்கள் நோக அழகே சொரூபமான மங்கை நல்லாள் ஒருத்தி அந்த மலர்வனம் வருகின்றாள். செந்தாமரை ஒத்த மேனியாள் மீனைப் பழிக்கும் நயனத்தாள் சொற்சுவைதனில் அமுதமும் அவளிடம் தோற்றுவிடும். நடையோ அன்னநடை. கார்மேகக் கூந்தலோடுசிற்றிடையாள். காண்போர் மனம்கொள்ளை கொள்ளும் பேரரசி அவள். அத்தகைய வனப்பு மிக்க அந்த மங்கை நல்லாள் மலர் வனனத்தின் கண்டதோ ஓர் வியப்பன காட்சி.அது யாதெனில் தன் கருவிழி ஒத்த நாவல் கனியொன்று மலரதிலே தூங்குவதுபோல கிடந்ததைக் கண்ணுற்றாள். நாவில் நீரூற அதை எடுத்து தான் உண்ணுவோமா என நினைத்து அதை எடுத்தாள். எடுத்த மாத்திரத்தில் அது கனியன்று அது ஓர் கருவண்டு என்பதை அவள் உணர்ந்து கொண்டாள்.



வண்டோ இவளைக் கண்ணுற்றவேளை அவள் வதனத்தை மதிவதனமோ என்று நினைத்துக் கொண்டது. ‘அந்தோ என் கண்முன் உள்ளது கவின் நிலவன்றோ. ஐயோ மதுவுண்ட மயக்கத்தில் நான் தாமரையில் தூங்கிவிட்டேன். நிலவது வரவு கண்டால் தாமரை குவிந்துவிடும். நான் சிறைப்பட்டுவிடுவேனே’ எனக் கூறிக் கொண்டு திடீரென எழுந்து பறந்தது வண்டு. வண்டின் மாற்றங்கண்ட தலைவி துணுக்குற்றாள். போனது வண்டோ. அல்லது பழம்தான் எழுந்து பறந்ததோ என்றாள். கைக்கு எட்டியது வாய்க்கெட்டா நிலையோ என ஏங்கினாள். இதனை இப்பாடல் தேனிலும் இனிய சுவைகொண்ட வரிகள் கொண்ட விளக்குகிறார். இப்படி

**‘தேனுகர் வண்டு மதுதனை உண்டு**
**தியங்கியே இடந்ததைக் கண்டு**
**தடங்கையில் எடுத்து முன் பார்த்தாள்**
**வானுறு மதியம் வந்ததென்றெண்ணி**
**மலர்க்கரம் குவியுமென்ற ஞ்சி**
**போனது வண்டோ? பறந்தது பழந்தான்**
**புதுமையோ இதுவெனப் புகன்றான்’**

என்று சுவை ததும்பத் ததும்பத் தருகின்றார்.

இவ்விதம் ஓர் சம்பவம் உமறுப்புலவரின் சீறாப்புராணத்திலும் வருகிறது. அதனை இன்னொரு நாள் நயக்கலாம்.

**குந்தவி நாச்சியார்.**

# முடியாது அல்லது வேண்டாம் என்று சொல்லாதீர்கள்

முடியாது அல்லது வேண்டாம் என்று சொல்லாதீர்கள். அப்படி சொல்வதினால் ஏற்படும் சங்கடத்தை மனதில் இருந்து விலக்கி தள்ளுங்கள் பல பேர் உங்களிடம் சொல்வார்கள் பலவகைப்பட்ட தொழில் களைப்பற்றி, இந்த தொழில் செய்தால் நல்லாயிருக்கும், அந்த வேலைக்கு போனால் நிறைய காசு சம்பாரிக்கலாம் என்று ஆனால், உங்களுக்கு அதில் விருப் பமோ? சந்தோசமோ? இல்லையென்றால் அவர்கள் சொல்வதில் ஒரு அர்த்தமும் இல்லை உங்களுக்குப் பிடித்தவற்றை நீங்கள் தொடர்வது தான் உங்களுக்கு மிகுந்த சந்தோசத்தை கொடுக்கும்.

வாழ்க்கையில் எதற்காகவும் பயப்படாதீர்கள், மரணத்திற்கு கூட,உங்களுடன் அமர்ந்து உரையாடும் 50 வயது, 60 வயது, அல்லது 70 வயது மனிதர்களின் வார்த்தைகளின் மத்தியில் நீங்கள் அடிக்கடி இதை கேட்க கூடும் நான் ஒரு விசயத்தை அப்ப செய்ய ஆசைப்பட்டேன், ஆனா அது முடியாம போய் விட்டது. என்று ஆதங்கப்படுவார்கள். அது போன்ற வார்த்தைகளை உங்கள் வாழ்க்கையில் பயன்படுத்தாமல் இருக்க வேண்டுமென்றால் உங்களுக்கு பிடித்ததை துணிந்து செய்யுங்கள் .

உங்கள் கோட்பாடுகளுக்கும் மற் றும் வாழ்க்கை முறைக்கும் சேர்ந்து வராத நபர்களிடம் பழக நேர்ந்தாலும் அவர்களுடைய உறவை வெட்டிக்கொள்ள வேண்டாம். ஏனெனில் அவர்களும் நமக்கு ஒருநாள் வேண்டும் தான் இந்த உலகம் வேடிக்கையானது மட்டுமல்ல சிறியதும் கூட .

மற்றவருடன் பேசும்போது அதிக மாய் கூர்ந்து கவனிப்பதன் அரு மையை உங்கள் வாழ்க்கையின் ஏதாவது ஒரு தருணத்தில் ஆச்சரிய மாய் உணர்வீர்கள். அது உங்கள் பொது வாழ்க்கையில் மட்டுமல்ல தனிப்பட்ட வாழ்க்கையிலும் கூடதான்

இந்த நாளுக்கான வாழ்க்கையை வாழுங்கள், உங்கள் கவலைகள் மாறிக்கொண்டேதான் இருக்கும் நேற்றைய கவலை இன்று இருக்காது இன்றைய கவலை அடுத்த வாரம் இருக்காது . உங்கள் பெற்றோரிடம் மரியாதையோடும் பணிவோடும் நடந்து கொள்ளுங்கள்.அவர்கள் இல்லாத போது ஏற்படும் வலி உங்களுக்கு அவர்களின் அருமையை புரிய வைக்கும்.

உங்களால் முடிந்த வரை நல்ல உணவுகளை எடுத்துக் கொள்ளுங்கள் ஏனெனில் வாய் மற்றும் நாக்கும் எதை வேண்டுமானாலும் நல்ல உணவென்று சொல்லலாம் ஆனால் வயிற்றுக்கு ஒன்றும் தெரியாது பாவம் எதற்காக சேமிக்க வேண்டும் ? தேவையேயில்லை ஆனாலும், சேமியுங்கள்.

நிச்சயமாக உங்களுக்கு தேவைப்படும் எப்பொழுதும் விழிப்போடு உங்கள் வாய்ப்புக்காக காத்திருங்கள் .கூச்சப்பட்டுக்கொண்டு தொலைத்து விடாதீர்கள்

மற்றவர்களின் மீது பழி சொல் லாமல் வாழ பழகிக்கொள்ளுங்கள் . வாழ்க்கை என்பது முழுவதுமாக நீங்கள் அதை எந்த கோணத்தில் பார்க்கிறீர்கள் என்பதை பொறுத்து உள்ளதே நடப்பதற்கெல்லாம் மற்றவர்கள் மட்டும் பொறுப்பாக மாட்டார்கள் உங்கள் பங்கும் அதில் உள்ளது என்பதனை உணருங்கள்.

மற்றவர்கள் செய்கிறார்களே என்று நீங்கள் ஒரு காரியத்திற்காக மிகவும் மெனக்கெடாதீர்கள். உங்களால் முடியாவிட்டாலும் பரவாயில்லை. ஒவ்வொருவருக்கும் ஒரு திறமை உண்டென்பதை மறக்காதீர்கள்

நீங்கள் கற்றுக்கொண்டவற்றை மற்றவருக்கு கற்றுக்கொடுங்கள். மக் கள் கற்றுக்கொள்வதை அதிகமாய் விரும்புவார்கள். அது உங்களுக்கு இன்னும் அதிகமான மற்றும் ஆழ மான அறிவை கொடுக்கும்

வாழ்க்கையின் எந்த ஒரு உயரிய நிலைக்குச் சென்றாலும் எங்கிருந்து நீங்கள் புறப்பட்டீர்கள் என்பதை ம றக்காதீர்கள் தினமும் காலை எழுந்தவுடன்நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன் , நான் ஒரு அற்புதமா னவன்,நான் நன்றியுணர்வுடன் இருக்கிறேன் என்று நீங்கள் உங்களுக்கே கூறி உங்கள் மனதை பழக்குங்கள்.



ப்ரியமதா பயஸ்

## வாழ்க்கையை வழமையாக்கும் முறை

சில நேரங்களில் நாம் அதிகம் நம்பும் நபர்களே நம் நம்பிக்கையை அதிகம் உடைக்கிறார்கள்.

பெரும்பாலான மக்கள் தேவை பொறுத்தே பிறரிடம் பழகுகிறார்கள்.

நமக்கு தாக்கத்தை ஏற்படுத்திய எந்த நிகழ்வுகளும் எப்போதும் மனதில் இருந்து மறைவதில்லை.

எதன்மீது அதிகம் பயம் கொள்கிறோமோ அது நம்மை ஒரு முறையாவது நெருங்கும்.

நடந்தவைகளை எண்ணி கலங்கியோ நடக்கப்போபவைகளை நினைத்து கவலையுற்றோ காலத்தை வீணாக்காமல் நிகழ்பவற்றை சிறப்பாக எடுத்துச் செல்ல வேண்டும். அதுவே வாழ்க்கையை வழமை யாக்கும்.





## வாழ்வை மாற்றும் நல்ல பழக்கங்கள்

சாப்பிடும்பொழுது கீழே சிந்தாமல் சாப்பிடுங் கள், அப்படியும் மீறி சிந்திவிட்டால் சாப்பிட்டு முடித்ததும் அதை சுத்தம் செய்துவிடுங்கள்.

வீட்டிலிருந்து வெளியில் செல்லும்போது, வீட்டில் உள்ள பெரியவர்களுக்கு ஏதேனும் வேண்டுமா? என ஒவ்வொருமுறையும் மறக்காமல் கேளுங்கள்.

நிறைய உபயோகமான மனதிற்கு பிடித்த புத்தகங்களை படியுங்கள்.

உணவு விடுதிகளுக்கு சாப்பிட செல்லும்போது சாப்பாடு கொண்டு வந்து வைப்பவர், பரிமாறுபவர் என அனைவருக்கும் மரியாதை கொடுங்கள்.

வயதில் பெரியவர்களாக இருப்பவர்கள் பரி மாறும்வரை காத்திருக்காமல், நீங்களே எடுத்து போட்டு சாப்பிடுங்கள்.

காசு கொடுக்கிறோம் என்பதற்காக எல் லாவற்றையும் அவர்கள் செய்யவேண்டியதில்லை.

கடையில் நொறுக்குத் தீனி சாப்பிடும்போதோ அல்லது உணவருந்தச் செல்லும்போதோ யாரேனும் பசிக்கிறது என்று சொன்னால் கண்டிப்பாக சாப்பிட ஏதாவது வாங்கிக் கொடுங்கள்.

பேருந்து நிலையங்களில், வெளியில் எங்கேனும் இருக்கும்போது சுற்றி என்ன நடக்கிறது என பாருங்கள்.

நிறைய பேர் அவசரத்தில் மோட்டார் சைக்கிள் ஸ்டாண்ட் எடுக்காமலே வந்துவிடுவார்கள் . அவர்களைப் பார்த்தால் உடனே அவர்களிடம் தெரியப்படுத்துங்கள்.

வீட்டிலும், பொது இடங்களிலும் கழிப்பறை வசதிகளை பயன்படுத்தும்போது அது எப்படி இருக்க வேண்டும் என நீங்கள் நினைக்கிறீர்களோ, அதை அடுத்து வருபவரும் எதிர்பார்ப்பார் என் பதை நினைவில் கொள்ளுங்கள்.

பஸ் நிறுத்தத்திலிருந்து பஸ் கிளம்பப்போகும் நேரத்தில் அதில் ஏறுவதற்காக யாரேனும் ஒருவர் ஓடி வருவதைப் பார்த்தால், அவர் பஸ்ஸில் ஏறிவிட வேண்டும் என்று மனதில் திரும்ப திரும்ப சொல்லுங்கள். அவர் நிச்சயம் ஏறிவிடுவார், சிறிய மன நிம்மதி கிடைக்கும்.

புகைப்பிடிக்கும் பழக்கம் இருந்தால், சிறுவர்கள் இருக்குமிடத்தில் கண்டிப்பாக அதை தவிருங்கள்.

வயதில் பெரியவர்கள் யாராக இருந்தாலும் மரியாதையாக பேசுங்கள்.

உபயோகப்படுத்த தேவையில்லாத வார்த்தைகளை சும்மா ஒரு ஸ்டைலுக்காக பயன்படுத்தாதீர்கள்.

காலைக்கதிர் Kalaikkathir




# போனது தும்மல் கிழவி; வந்தது இருமல் கிழவி!

## வடக்கு நிர்வாகத் தலைமை இந்த நிலையில்தான்!

ந.லோகதயாளன்

வடக்கு மாகாணத்திலே மத்திய அரசு நிர்வாகம் என்றாலும் மாகாண அரசநிர்வாகம் என்றாலும் பிரச்சினைகளிற்கும் குளறுபடிகளிற்கும் பஞ்சம் இல்லை என்பது மறுக்க முடியாத உண்மை. புதிதாக வரும் ஆளுநர் அவற்றுக்குத் தீர்வு தருவார் என்ற எதிர்பார்ப்பில் காத்திருந்த சமயம் புதிய ஆளுநர் புதிய பிரச்சினைகளையே உருவாக்குகின்றார் என அதிகாரிகள் பட்டியலை நீட்டுகின்றனர்.

இதன் காரணமாக வடக்கு மாகாணத்தில் முரணிலை நிர்வாகமே தோற்றுவிக்கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் எந்தத் திணைக்களத்திலும் எந்தப் பணியும் அடுத்த கட்டத்திற்கு நகர்த்தப்பட மாட்டாது என்ற நிலைமையே உருவாகி வருகின்றது.

மாகாண சபைக்கு உட்பட்ட மூத்த அதிகாரிகளில் பலர் வினைத் திறன் குறைந்தவர்கள் அல்லது பணி வேகம் போதாது என்ற பெயர் உள்ளமையைப் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டாலும், நிர்வாக நடைமுறையோ அல்லது சட்ட திட்டங்களோ தெரியாதவர்கள் கிடையாது.

வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் விடயத்தில் ஆயிரம் பிய்ச்சல் பிடுங்கல்களின் பின்னர் தற்போது உடனடியாக 389 பேருக்கும் நியமனம் வழங்குமாறு புதிய ஆளுநர் மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

இன்றைய சூழலில் ஜனாதிபதி செயலாளரின் இறுதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் எந்த நியமனத்திலும் என்னால் ஒப்பமிட முடியாது, அவ்வாறு ஒப்பமிட்டால் நான் சேவையிலிருந்து தூக்கி எறியப்படுவது மட்டுமல்ல, அப்படி நியமிக்கப்படுவோரின் ஒரு மாதச் சம்பளத்திற்கே ஒரு கோடி முப்பது லட்சம் ரூபா தேவையாகவுள்ள நிலையில், இதனை எனது சொந்தப் பணத்தில் செலுத்தும் நிலைமையும் ஏற்படும். அதனால் நீங்கள் திறைசேரி, ஜனாதிபதி செயலகங்களின் அனுமதியை எடுத்துத் தாருங்கள், நியமனத்தை உடன் வழங்குகின்றேன் என அவர் பதிலளித்துள்ளார் என அறிய வருகிறது.

இந்தப் பதில் திருப்தி தராதமையால் உங்களிற்கு வேலை செய்யத் தெரியாட்டால் விட்டு விட்டுப் போங்கள் என எச்சரிக்கப்பட்டதாம். அச்சமயம் சுகாதார அமைச்சின் செயலாளரின் பதில் அதனைவிடப் பாரதூரமாக இருந்துள்ளது. அதாவது "அதனையாவது எழுத்தில் தந்தீர்களானால் நாளைக்கே போகிறேன்" என்று பதில் வத்துள்ளது.

சுகாதார அமைச்சு விவகாரம் இவ்வாறு என்றால், கல்வி அமைச்சின் செயலாளரின் விடயமோ இதனை விட அதிகம். அதனால் அவரையும் நீர் எங்காவது போய் பணியாற்றலாம் எனக் கூறப்பட்டதனால், கல்வி அமைச்சின் செயலாளரோ ஒருபடி மேலேபோய் தனது பதிலை எழுத்திலேயே வழங்கி விட்டார். அதிலே நான் ஐந்து ஆளுநரை பார்த்தவன், இலங்கையின் எப்பாகத்திலும் பணியாற்றத் தயாராகவும் துணிந்தும் இருப்பவன் என அவர் பதிலளித்துள்ளார்.

இதற்கு அடுத்த படியாக உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரிடம் புதிதாக கட்டப்பட்ட வெளிமாவட்ட பேருந்து நிலையத்திற்கு ஒரு மாத காலத்திற்குள் பேருந்துகள் போக வேண்டும். அதேபோன்று இ.போ.சபையின் தரிப்பிட எல்லைக்குள் உள்ள வர்த்தக நிலையங்கள் உடனடியாக இடிக்கப்பட வேண்டும். அல்லது நீங்கள் பணியாற்ற முடியாது என்ற பாய்ச்சல் இடம்பெற்றதாம். நான் மாகாண அரசிற்கு உட்பட்ட உத்தியோகத்தர், மாகாணத்திற்கு உட்பட்ட போக்குவரத்துச் சேவையினர் அங்கு போக மாட்டோம் என்று மறுக்கவில்லையே. மத்திய அரசின் கீழ் உள்ள இ.போ.சபை நிர்வாகத்திற்கு நான் எப்படி உத்தரவு பிறப்பிப்பது? – என்கின்றார் அவர்.

அதற்கு அப்பால் மத்திய போக்குவரத்து அமைச்சரே பேருந்து நிலையத்திற்கு நேரில் வந்து கடைகளை உடன் எழுப்புமாறு இ.போ.சபைக்கு கூறியும் இடம் பெறாத ஒரு பணியை என்னால் எவ்வாறு நிறைவேற்ற முடியும் என்ற காரணத்தை அவர் அடுக்குகின்றார்.

இதற்கு அடுத்தபடியாக மாகாண விவசாய அமைச்சின் செயலாளரின் நிலையோ அந்தோ பரிதாபம். அவரை அழைத்து, என்ன செய்வீர்களோ, ஏது செய்வீர்களோ எனக்குத் தெரியாது, மாகாணத்தில் பொழியும் மழை நீர் வீணாகக் கடலிற்கு போகக் கூடாது என்று கூறியபோது, இதற்காகப் பல திட்டங்களைச் சமர்ப்பித்துள்ளோம், அதனால் அதற்கான பணத்தை பெற்றுத் தாருங்கள் என உஷாராகப் பதிலளித்துள்ளார் அவர்.

அதுதான் சிக்கல், அதனை இங்கே கேட்க வேண்டாம் என்றதும் செயலாளர் ஏங்கி விட்டார். உரிய நிதி ஒதுக்கீடு இல்லாமல் இவ்வளவு பாரிய திட்டத்தை எவ்வாறு முன்னெடுப்பது எனக் கையைப் பிசைந்து முணுமுணுத்தார் அவர். மறுநாள் குடாநாட்டில் நல்ல மழை. பல இடத்தில் வெள்ள நீர் தேங்கி நின்றபோது மற்றுமோர் அதிகாரி விவசாய அமைச்சின் செயலாளருக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்து "இன்றைய வெள்ளத்தைப் படமெடுத்து ஆளுநருக்கு அனுப்பி உங்கள் கூற்றுப்படி வெள்ளத்தை மறித்து வைத்துள்ளேன்" – எனக் கூறுங்கள் என்றாராம்.

இவ்வாறெல்லாம் பல முரண்பாடுகள். வெறுங்கையால் முழம் போடலாம் என்ற கருத்தில் போலும் அதிகாரிகள் மீது ஏச்சு ஏவுகணைகள்.

பார்த்தார்கள் மாகாண உயர் அதிகாரிகள். பிரதம செயலாளரிடம் சென்று முறையிட்டனராம். மௌனமாக செவிசாய்த்த பிரதம செயலாளரின் பதில் அனைவரின் நெஞ்சில் இடி வீழ்ந்ததாகிவிட்டது.

அதாவது, 'பக்தருக்கு சோதனை என்றால் சாமியிடம் முறையிடலாம். ஆனால் இங்கே சாமியே கலங்கி நிக்கிறன்' என்ற மாதிரிப் பதில் தந்தாராம். நிலைமை அப்படி உள்ளது.

"மாமா.... காஞ்சிப்போன பூமி எல்லாம் வத்தாத நதியை பாத்து ஆறுதல் அடையும். அந்த நதியே காஞ்சி போய்ட்டா?? துன்பப்படுறவங்க எல்லாம் அந்தக் கவலையை தெய்வத்துகிட்ட முறையிடுவாங்க.. ஆனா தெய்வமே கலங்கி நின்னா?? அந்த தெய்வத்துக்கு யாரால ஆறுதல் சொல்ல முடியும்?" – என்றதனால் அதிகாரிகள் மௌனமாக வெளியேறினர்.

மாகாணத்தில் இப்படி என்றால் மத்தி அரச நிர்வாகமும் குறைவில்லை.

அண்மையில் ஆளுநர் அலுவலகத்திலே மாவட்டத்தின் முப்படை அதிகாரிகள் சகிதம் மாவட்டச் செயலாளர் அழைக்கப்பட்டு ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போது யாழ். மாவட்ட நிலைவரம் ஆராயப்பட்டது. ஆரம்பத்திலேயே அங்கு பேசப்படும் விடயங்கள் ஊடகங்களுக்குப் போகக் கூடாது என்ற கண்டிப்பு பிறப்பிக்கப்பட்டதும் மாவட்ட அரச அதிபர் உஷாராகி விட்டார். அங்கே சென்ற மாவட்ட அரச அதிபரோ காணி விடயம் என்பதனால் மேலதிக அரச அதிபரையும் தம்முடன் அழைத்துச் சென்றிருந்தார்.

அங்கு, இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வையுங்கள் என சில விடயங்கள் முன்வைக்கப்பட்டன. அவை மக்களின் காணி சம்பந்தமான விடயங்களாக இருக்கும் என எதிர்பார்த்த அரச அதிபருக்கோ தலையில் இடி விழாத குறை. அதாவது, முப்படையினரும் குடாநாட்டில் மக்களி டமிருந்து தமக்கு சுவீகரித்து வழங்குமாறு கோரும் – மக்களிற்குச் சொந்தமான நிலங்கள் பற்றிய விவரங் களே அவை.

மாவட்ட அரச அதிபர் மெதுவாக மேலதிக அரச அதிபரை பார்க்க, மேலதிக அரச அதிபர் வாயை திறக்க, மேலதிக அரச அதிபர் வாங்கிக் கட்டினார். இருப்பினும் அவரும் விடவில்லை.

இவர்கள் கோரும் நிலத்தை எடுப்பதனால் சுவீகரிக்காமல் ஏதும் செய்ய முடியாது என்று அவர் தெளிவுபடுத்தினார்.

அவ்வாறானால் சுவீகரியுங்கள் என்றதும், அதற்கு நில அளவீட்டுப் படம் தேவை எனப் பதிலளிக்க, நிலத்தை அளவுங்கள் என்றார் ஆளுநர். இதிலேதான் சிக்கல் உள்ளது என்றார் மேலதிக அரச அதிபர். என்னையா பிரச்சினை என்றார் ஆளுநர்.

மக்களுக்குத் தமது நிலத்தை வழங்க விருப்பம் இல்லை. அதனாலேயே அவர்கள் எதிர்க்கின்றனர். அத்தோடு அந்த நில உரிமையாளர்கள் வழக்குத் தாக்கல் செய்கின்றனர், அதனைவிடத் தாம் இருப்பிடம் இன்றி உள்ளமையால் தங்கள் நிலத்தை மீளப்பெற அவர்கள் உறுதியோடு அலைகின்றனர் என விளக்கமளிக்கப்பட்டது. இந்த நிலைமையில் நாம் எவ்வாறு இதனை மேற்கொள்வது என்று மாவட்ட அதிகாரிகள் கையைப் பிசைந்தனர். மூடு மந்திரத்தின் பெயரில் கோவைகள் தற்போது மாவட்டச் செயலகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இது ஒருபுறமிருக்க வலி வடக்கிலே இரு காணிகளிற்கான அறுதி உறுதிகளை பிரதேச செயலாளரிடம் வழங்கி, இந்த நிலங்களை அடையாளம் கண்டு, அவற்றி உரிமையாளர்களிடம் மீள வழங்க நடவடிக்கை எடுக்குமாறும், உரிமையாளர்களை நேரில் காணிக்குக் கூட்டிச் செல்லுமாறும் பணிக்கப்பட்டது.

இதிலே ஒருவர் திலீபன் தியாகராஜா – கீரிமலையில் 25 பரப்புக் காணி. கொள்ளுப்பிட்டியில் வசிப்பவர். (பெயரும் ஊரும் மிகுதி விவரம் கூறும்)

இரண்டாவது உறுதியாளரோ மேனகா சண்முகலிங்கம். பலாலி மேற்கில் 60 பரப்புக் காணி தற்போதும் படையினர் வசம் உள்ள நிலத்தின் உரிமையாளர் இவர். மனித உரிமை நிலையத்தில் பணியாற்றியவர். (தற்போதைய ஆளுநரே இந்த இல்லத்தின் பணிப்பாளராக இருந்தவர்.)

இவர்கள் இருவருக்குமே தங்களது காணிகள் எங்கு இருக்கின்றன என்பதே தெரியாது. இருப்பினும் உறுதிப்படி கீரிமலை உறுதியை அதிகாரிகள் தேடி அலைந்து கண்டுபிடித்தனர். அதில் பாதி உள்ளே, பாதி வெளியே என்ற நிலைமையே உள்ளது. அந்த ஒருவரின் நிலம் இராணுவ எல்லைக்குள் அதாவது உயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறும் பிரதேசத்திற்குள் இருப்பதனால் தன்னால் உள்ளே செல்ல முடியாது எனக் கூறிய பிரதேச செயலாளர் அதற்காக வேண்டி கட்டினார். எவ்வாறேனும் கூட்டிச் சென்று காட்டும்படி உத்தரவு. இதனால் பிரதேச செயலாளர் தற்போது இராணுவ அதிகாரிக்கு கடிதம் எழுதியுள்ளார் என்று கேள்வி.

தனக்கு தனக்கு என்றால் சுளகு படக்கு படக்கு என்று அடிக்குமாம் என சும்மாவா கூறினார்கள்?

இந்த நிலைமையில் உள்ளது வடக்கு மாகாண நிர்வாகம். அது மீளுமா என ஏங்கி நிற்கும் 14 லட்சம் மக்களில் ஒருவனாக நாமும் காத்திருக்கின்றோம்.

அச்சுவேலி சிறுவர் சீர்திருத்தப்பள்ளியில் உள்ளவர்களை நீதிமன்றம் அழைத்துச் செல்லாது சூம் வழியாக வழக்கை நடாத்துங்கள் என்பது ஆளுநர் வாய்மூல உத்தரவு. நீதிமன்ற விடயத்தை ஆளுநர் பணிப்பில் கையாண்டு நீதிமன்றத்திடம் வாங்கிக் கட்டுவதா என்ற இக்கட்டில் அதிகாரிகள்.

அரச நிர்வாகத்தில் ஏ.ஆர். அண்டு எவ்.ஆர்' என்று விதிமுறைகள் இருக்க, அவற்றைத் தெரியாமல் – அல்லது அவற்றைக் கணக்கில் எடுக்காமல் – ஆளுநர் விடுக்கும் பணிப்புகளால் செயலாளர்கள் தமக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் பிரதம செயலாளரிடம் முறையிட பிரதம செயலாளரோ தாம் என்ன செய்வது என்று முனகுகிறார்.


எப்படி என்றாலும் கடைசியில் விவகாரம் விவரமாக கொழும்பின் கவனத்துக்குப் போவது தவிர்க்க முடியாதது என்கின்றன சம்பந்தப்பட்ட வட்டாரங்கள். ஆனால், அது எப்போது, யாரால் என்பதுதான் கேள்வி.

எது, எப்படியோ வடக்கு நிர்வாக விடயத்தில் 'போனது இருமல் கிழவி என்றால் வந்தது தும்மல் கிழவி' என்ற நிலைமைதான்...!

## 2023இல் வத்திக்கானில் நடைபெறும் 16ஆவது உலக ஆயர்கள் சாதாரண மாமன்றம்

# இணைந்து பயணிக்கும் திருச்சபையாக ஒன்றித்து பங்கெடுத்து நற்செய்தி அறிவிக்க இந்த அழைப்பு

- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம், ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர்- யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)



"2023 ஆண்டு வத்திக்கானில் நடைபெறவிக்கும் 16ஆவது உலக ஆயர்கள் சாதாரண மாமன்றத்தின் தனிச் சிறப்பும் விசேட அம்சங்களும் என்ற தலைப்பில் இந்தியாவின் தமிழ்நாட்டைச் சோந்த தந்தை தஞ்சை டோமி அவர்கள் தயாரித்த மாமன்றத் தயாரிப்புக் கையேட்டுச் சுருக்கம் என்ற ஆக்கத்தைத் ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட - கடந்த வார ஆக்கத்தின் - தொடர்ச்சி இதுவாகும்."

### ஒன்றிப்பு - பங்கேற்பு - நற்செய்தி அறிவிப்பு

இந்த உலக ஆயர்கள் 16 ஆவது மாமன்றத்தின் மையக் கருத்தாக உள்ள மூன்று வார்த்தைகள் ஒன்றிப்பு - பங்கேற்பு - நற்செய்தி அறிவிப்பு - என்ற மூன்று வார்த்தைகளாகும்.

### (01) ஒன்றிப்பு

ஒன்றிப்பு என்பது மூவொரு இறைவனின் அன்பிலும் ஒன்றிப்பிலும் பங்கெடுப்பதாகும். மூவொரு கடவுள் எவ்வாறு ஒன்றாய், நன்றாய், ஒருங்கிணைந்து சிந்தையிலும் செயலிலும் இணைந்துள்ளனரோ அவ்வாறு திருச்சபையில் நாம் ஒன்றித்திருப்பதாகும்.

### (02) பங்கேற்பு

எதுவித வேறுபாடுகளுமின்றி மக்கள் அனைவரும் ஒன்று சேர்தல் என்பது இங்கு குறிப்பிடப்படுகிறது. இணைந்து பங்கேற்றல் என்பது விளிம்பு நிலை மக்கள், சாதாரண மக்கள், ஏழை மக்கள், துன்புறும் மக்கள், மாற்றுத்திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவர்கள், அகதிகள் இவர்களின் பங்கேற்பிற்கும் முக்கியத்துவமளித்தல் என்பது இங்கு கருதப்படும்.

### (03) நற்செய்தி அறிவிப்பு

நற்செய்தி அறிவிப்பு என்கிறபோது இது மனித வாழ்வின் - சமூக வாழ்வின் - அத்தனை அத்தியாவசியங்களையும் உள்ளடக்கியது. ஆன்மீக சமூக, பொருளாதார, அரசியல், புவியியல் மற்றும் விளிம்பு நிலையிலுள்ள அனைவருக்கும், வாழ்வை வளர்ச்சியை வழங்கக்கூடிய செய்தியே நற்செய்தி என்று புரிந்து கொள்ளப்படவேண்டும்.

### உலக ஆயர்கள் மாமன்றத்தின் அணுகுமுறை

இந்த 16ஆவது உலக ஆயர்கள் மாமன்றத்தை தொடங்கி வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் இம்மாமன்றத்தின் அணுகுமுறை பற்றி விளக்கினார்.

திருத்தந்தை எல்லோரும் சந்தித்தல் - கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுதல் - செவி மடுத்தல் இறுதியாக தேர்ந்து தெளிதல் என்றார். இது ஓர் உலகளாவிய இணைந்த பயணம். இது உலகம் முழுவதும் உள்ள கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மட்டுமல்லர், பிற மத மக்கள், பிற சபை மக்களோடு சேர்ந்து தொடங்குகின்ற ஒரு பயணம். இது ஒரு மாற்றத்துக்கான பயணம். வளர்ச்சிக்கான பயணம். ஒது தோழமைப் பயணம் என்றார்.

### 16ஆவது உலக ஆயர்கள் மாமன்றத்திற்கான சின்னம்

இந்த 16ஆவது உலக ஆயர்கள் மாமன்றத்திற்கான சின்னம் மாமன்றத்தில் யாரெல்லாம் பங்கெடுப்பார்கள் என்பது அடையாளப்படுத்தப்பட்டுக் காண்பிக்கப்பட்டுள்ளது. பொதுவாக ஆயர்கள் மாமன்றங்களில் ஆயர்களே பங்கெடுப்பார்கள். ஆனால் இம்மாமன்றத்தில் குழந்தைகள், இளைஞர்கள், நடுத்தர வயதினர், முதியவர்கள், ஆண்கள், பெண்கள், பெற்றோர்கள், தம்பதியர்கள், பொது நிலையினர், துறவிகள், மாற்றுத்திறனாளிகள், ஏன் பிற சமய மற்றும் பிற சபையினர் என அனைவரும் இணைந்து பங்கெடுப்பர்.

### 16ஆவது உலக ஆயர்கள் மாமன்றம் மூன்று பகுதிகளாக நடைபெறும்

16ஆவது உலக ஆயர்கள் மாமன்றம் மூன்று பகுதிகளாக நடைபெறவுள்ளது.

முதல் பகுதி - தலத்திருச்சபையை கவனத்தில் கொண்டு மறைமாவட்ட அளவிலும் ஆயர்கள் பேரவைகள் அளவிலும் நடைபெறும்.

இரண்டாம் பகுதி - கண்டங்கள் அல்லது பிரதேசங்கள் அளவில் நடைபெறும்.

மூன்றாவது பகுதி - வத்திக்கானில் உலக அளவில் நடைபெறும்.

ஒவ்வொரு பகுதியும் முடியும் போது ஒரு வரைவு மேற்கொள்ளப்படும். இந்த வரைவானது மீண்டும் கலந்தாய்வு செய்யப்படும். அதன் பின் மூன்றாவது நிலை அல்லது பகுதியில் உலக ஆயர்கள் விவாதிக்க அனுப்பப்படும். இம்மாமன்றத்தின் நிறைவு வரைவு ஒரு சுற்றுமடலாகவோ அப்போஸ்தலிக்க திருத்தூது மடலாகவோ வெளிவரும் .

### 16 ஆவது உலக ஆயர்கள் மாமன்றத்தின் ஏழு நோக்கங்கள்

1. தூய ஆவியாரின் வழிகாட்டுதலில் இறையன்பின் சாட்சியாக இன்றைய உலகில் வாழ தரப்படும் அழைப்பை உணரும் தருணமாக இம்மாமன்றம் இருக்கும்.

2. அனைவரையும் உள்ளடக்கிய அனைவரும் பங்கேற்கும் திருச்சபையாக உருவாவதும் வளர்வதும் எப்படி என விவாதிக்கப்படும்.

3. இறைச் சமூகமாக கிறிஸ்தவர்களின் நலனுக்காகவும் மானுடன சமூகத்தின் நலனுக்காகவும் உழைப்பதற்கு கடவுள் தந்துள்ள கொடைகளை அடையாளம் காணும் தருணமாக இம்மாமன்றம் அமையும்.

4. எல்லோரும் நலமாக வாழக்கூடிய ஒரு உலகைக் கட்டியெழுப்பும் பணியில் எல்லோரும் பங்கெடுப்பது எப்படி என்கின்ற வழிமுறைகளைக் கண்டுபிடிக்கும் தருணமாக மாமன்றம் இருக்கும்.

5. திருச்சபை என்னும் இறைமக்கள் சமூக அமைப்பினுள் அதிகாரம், பொறுப்புணர்வு, நிர்வாக அமைப்புக்கள் குறித்த செயல்பாடுகள் பற்றி ஆழமாக ஆராய்ந்து, நற்செய்தியின் ஒளியில் வேரூன்ற, அதிகாரத்தையும் நிர்வாக அமைப்புக்களையும் மாற்றி அமைக்க என்ன செய்வது என்பது பற்றி கலந்தாய்வு செய்வதற்கான தருணமாக இம்மாமன்றம் அமையும்.

6. சமூக உரையாடல் - சகோதரத்துவத்தை ஊக்குவித்தல் - மக்களாட்சியைப் கட்டியெழுப்புதல் - ஒப்புரவை ஏற்படுத்துதல் - உரையாடல் போன்றவற்றில் கிறிஸ்தவ சமூகத்தின் பங்கேற்பை அதிகரித்தல்

7. கிறிஸ்தவக் குழுக்கள் - சபைகள் - பிற சமயங்கள் - மக்கள் இயக்கங்கள் - இவைகளுக்கிடையிலான உறவுகளைப் புதுப்பித்தல்.




இந்த ஏழு நோக்கங்கள் நோக்கிய இம்மாமன்றத்தின் மூன்று பகுதிகளில் தயாரிப்புக்கள் அமைவதற்கு உதவியாக இரண்டு வழிகாட்டி ஏடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த தயாரிப்புக் கையேட்டில் காணப்படும் பத்து கருப்பொருள்கள்:-

1. தோழர்களாக உடன் பயணித்தல்.
2. திறந்த மனதோடு செவிமடுத்தல்.
3. சுதந்திரமாகவும் அன்பாகவும் உரையாடுதல்.
4. இறையனுபவத்கைத் கொண்டாடுதல்.
5. மறைபணியில் பொறுப்புடன் பங்கேற்றல்.
6. திருச்சபையோடும் சமூகத்தோடும் உரையாடுதல்.
7. பிற கிறிஸ்தவச் சபைகளுடன் உரையாடுதல்.
8. அதிகாரப் பரவலாக்கம் மற்றும் பங்கேற்றல்.
9. தேர்ந்து தெளிதல் - முடிவெடுத்தல்.
10. இணைந்து பயணித்தல்.

### கலந்தாய்வுக்கு விடப்படுகிறது

இந்த பத்து கருப்பொருள்களும் மறை மாவட்ட அளவிலான ஆயர்கள் பேரவைகள் அளவிலான தயாரிப்புக் கூட்டங்களில் கலந்தாய்வு செய்வதற்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்த 16ஆவது உலக ஆயர்கள் மாமன்றத்திற்கான



காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்

தயாரிப்புப் பயணத்தில் மூன்று தடைகளைச் சுட்டிக் காட்டுகின்றார் திருத்தந்தை.

1. மேலோட்டமான பார்வை மற்றும் அணுகுமுறை. இது எதையும் ஆழமாகச் சென்று விவாதிக்காமல் மேலோட்டமாக சிந்திப்பதும் கருத்தைப் பகிர்வதும் ஆகும். மேலோட்டமாக முடிவுகளையும் மேற்கொள்வது முதல் தடையாகும்

2. வெறும் அறிவுசார் பார்வை மற்றும் அணுகுமுறைகளை மட்டும் பின்பற்றுதல்.

மனிதர் உணர்வு, உணர்ச்சி, அனுபவம் ஆகியவற்றிற்குச் சொந்தக்காரன், இவற்றை இணைத்து சிந்திக்கும் ஒரு முழுமையான பார்வையும் அணுகுமுறையும் தேவை.

3. மக்களை பங்கேற்பாளர்களை உணர்வுபூர்வமான ஈடுபாட்டிற்கு இட்டுச் செல்லாத மேதாவித்தனம் மூன்றாவது தடை ஆகும். அனைவரும் உணர்வுபூர்வமாக மிகுந்த ஈடுபாட்டுடன் பங்கேற்க வேண்டும்.

இந்த மாமன்றத்திற்கான இணைந்த பயணத்தில் அனைவரும் பங்கேற்போம். செவிமடுப்போம். கருத்துக்களையும் அனுபவங்களையும் சிந்தனைகளையும் பகிர்வோம்.

அருந்ததியின்

# வரன் தேடுவோம் வாருங்கள்

## திருமண தேடலை இலகுவாக்கும் ஒரு முயற்சி

ஆயிரக்ககணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு அரச தனியார் தொழில்புரியும் மணமக்க-ளிலிருந்து உங்களுக்கு பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்க வாருங்கள். இந்நிகழ்விற்கு எமது ஜோதிடர் வரவுள்ளதால் உங்களுக்கு பொருத்தமான சாதகங்களை பெற்று உடன-டியாகவே பொ ருத்தம் பார்த்துக்கொள்ள முடியும்.

### வெள்ளவத்தை

**21/11/2021**
9.00 a.m -12.00 a.m
Green Palace
No 30 W.A. Silva Mawatha,
Colombo 06

### யாழ்ப்பாணம்

**28/11/2021**
9.00 a.m -12.00 a.m
Thivya Mahal
1001, K.K.S Road,
Vannarpannai, Jaffna

## இந்நிகழ்வில் சிறப்பு பட்டிமன்றமும் நடைபெறவுள்ளது

600 மணமக்கள் விபரங்களுடன்
அருந்ததி திருமண இதழ் 25 னை
இந்நிகழ்வில் பெற்றுக்கொள்ளலாம்




**அருந்ததி பிரைவட் லிமிடட்**

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

www.arunthathee.com | +94 777 164 524

# எதிரணியினரின் ஆர்ப்பாட்டங்களால் அரசை ஒருபோதும் கவிழ்க்க முடியாது!

## ஜனாதிபதி கோட்டாபய திட்டவட்டம்

எதிர்க்கட்சியினரின் ஆர்ப்பாட்டங்க ளால் பலமிக்க எமது அரசை ஒரு போதும் வீழ்த்தவே முடியாது. எம்மை ஆட்சியில் அமர்த்திய மக்கள் இப்போதும் எமது பக்கமே நிற்கின்றார்கள்.

- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் நேற்று (19) ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தி னர். இதன் போதே ஜனாதிபதி மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசுக்கு எதிராக நாடெங்கும் மக்கள் கிளர்ந்தெழுந்துவிட்டார்கள் என்று சில ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. ஆனால், உண்மையில் அரசுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழவில்லை. எதிர்க் கட்சியினர் தான் அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந் துள்ளனர் அவர்கள்தான் ஆர்ப்பாட்டங் களை நடத்துகின்றனர். அவர்களின் ஆதரவாளர்கள்தான் அரசுக்கு எதிராகக் கூச்சலிடுகின்றனர்.

இந்த எதிர்க்கட்சியினரின் ஆர்ப்பாட் டங்களால் மூன்றிலிரண்டு பெரும் பான்மை பலமுள்ள எமது அரசை ஒரு போதும் வீழ்த்தவோ - கவிழ்க்கவோ முடியாது. எம்மை ஆட்சியில் அமர்த்திய மக்கள் இப்போதும் எமது பக்கமே நிற்கின்றார்கள்.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலின்போது நாட்டு மக்களுக்கு நாம் வழங்கிய வாக்குறுதிகள் அனைத் தையும் நிறைவேற்ற வில்லை என்பது உண்மைதான். அந்த வாக்குறுதிகளை படிப்படியாக நிறை வேற்றி வருகின்றோம். கொரோனாப் பெருந்தொற்றே இதற்குக் காரணம்.

இந்தத் தொற்றுக் காலத்தைப் பயன்படுத்தி எமது ஆட்சியைக் கவிழ்க் கலாம் என்று எதிர்க் கட்சியினர் முட்டாள் தனமாகச் சிந்திக்கின்றனர். ஆட்சியைத் தீர்மானிப்பது எதிர்க்கட்சியினர் அல்லர் மக்கள்தான் முடிவெடுப்பார்கள் - என்றார்.



# ஐந்து மாவட்டங்களில் புதிய கொத்தணிகள்!



### மக்களே அவதானம் என்கின்றார் சுகாதார சேவைகள் பணிப்பாளர்

புதிய கொரோனா கொத் தணிகள் நாட்டின் 5 மாவட் டங்களில் இனங்காணப்பட்டுள் ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்த்தன தெரி வித்தார்.

அநுராதபுரம், அம்பாறை, அம்பாந் தோட்டை, மாத்தறை மற்றும் காலி ஆகிய மாவட் டங்களி லேயே இவ்வாறான கொத்தணிகள் கண்டறியப்பட் டுள்ளன என்றும் அவர் குறிப் பிட்டார்.

சுகாதார நெறிமுறைகளை மீறி இப் பகுதிகளில் நடைபெறும் திருமணங்கள், மத நடவடிக்கைகள் மற்றும் பிற நிகழ்ச்சிகளால் இந்தக் கொத்தணிகள் உருவாகியுள்ளன என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

நாட்டில் தற்போது தின சரி 700 இற்கும் மேற் பட்ட கொரோனாத் தொற்றாளர்கள் பதி வாகின்றனர். இறப்பு எண்ணிக்கையும் 20 ஆகக் காணப்படுகிறது. இது சுகாதார அதிகாரிகளி டையே கவலையை ஏற்படுத்தி யுள்ளது என்றும் அவர் கூறினார். எனவே, நாடு இயல்பு நிலைக்கு வரும் வரை மக்கள் அதிகளவில் ஒன்று கூடும் நிகழ் வுகளைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

## நாம் வாழுமிடங்க...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி..)

பாரம்பரிய மாண்புகளையும் அரசு அழித்தொழிக்கிறது.

இலங்கையில் கடந்த 70 ஆண் டுகளுக்கு மேலான வர லாற்றுக்காலத்தில் மக்களும் தமிழ் நிலமும் இனக்கலவரங்க ளாலும், இனவிடுதலைக்கான போர்களத்திலும் இலட்சக்கணக் கான உயிர்கள் பலிகொடுக் கப்பட்டு ஆறாத ரணகளத்தில் மூழ்கிக்கிடக்கும் மனிதகுல வர லாற்றில் கறைபடிந்து கிடக்கும் நிலைமையை அனுபவித்து வருகிறோம்.

இறந்தவர்கள் ஆத்ம சாந் திக்காக அந்த ஆத்மாக்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும், கண்ணீர்விட்டு கலந்து ஆறுத லடையும் நாள்களில் தெரிந்து அஞ்சலிப்பதும் உலக மனிதகுல நாகரிகம். இதனால் அந்த ஆத் மாக்களின் உறவுகளும், மனித நேயம்கொண்டவர்களும் நினைவு கூர்வதனால் ஆறுதல் பெறுகி றோம்.

இதனை நாகரீக உலகம் ஏற் றுக் கொண்டு கடைப்பிடிக்கிறது. அரசுகள் அங்கீகாரம் வழங்கி வருகின்றன. தெய்வ நம்பிக்கை கொண்டவர்கள், மதங்கள் குறிப் பாக இந்து மக்கள் ஆத்ம ஈடேற் றத்துக்காக வீடுகளில், நீர் நிலை களில், புண்ணிய தீர்த்தங்களில், கோவில்களில் நினைவுகூர்ந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளில் ஈடுபடுகின்ற மனித உரிமையை போற்றி வருகின்றார்கள்.

இலங்கையில் சென்ற காலத் தில் அந்தநாகரிகம் பேணப்பட் டது. இப்பொழுது அந்தநிலைமை மாற்றப்படுகிறது. 1971களில் 80களில் அரச ஆட்சியை கைப் பற்றுவதற்காக ஆயுதபுரட்சியில் ஈடுபட்டவர்கள் ஜே.வி.பியினர் கார்த்திகைத் திங்களில் இறந்த வர்களை நினைவு கூருகிறார் கள்.

அரசு இறந்த இராணு வீரர் களுக்கு மரியாதை செய்கிறது. நாடாளுமன்ற வளாகத்தில் இந்நினைவு மண்டபம் உண்டு. ஒரு நாளைப்பிரகடனம் செய்து ஒன்றுகூடி அணிவகுத்துப் போற்றுகிறது. ஆனால் இலங் கையில் தமிழ் மக்களுக்கு, தமிழ்பேசும் மக்களுக்கு இறந் தவர்களைநினைவுகூர்ந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனை செய்வதற் குள்ள மனிதஉரிமை மறுக் கப்படுவது நாகரிகமற்ற, ஜன நாயகமற்ற, மனிதகுல விரோத செயலாகவே மக்கள் மனங்க ளில் கொந்தளிப்பை ஏற்படுத்தி வருகிறது.

காவல்துறை வலிந்து நீதி மன்றங்களில் வழக்குகளைத் தொடுத்து ஆத்மசாந்தி பிராத்த னைக்காக நினைவு கூருவதற் காக தடைகளை விதிக்க முயற் சிக்கிறது. நீதிமன்றங்கள் மக்கள் தங்கள் ஆத்மசாந்திப் பிரார்த் தனை நினைவுகூருதல் கடமை களை, ஈமைக்கடனை நிறை வேற்ற அனுமதி வழங்கி வரு கின்றன. சில இடங்களில் நீதி மன்றங்கள் அனுமதி மறுத் துள்ளன. கடந்த காலங்களில் நீதிமன்ற வழக்குகளில் வழக்காடி ஞர்கள் வாதாடி கைது செய்யப் பட்டவர்கள் விடுதலை பெற்றுள் ளனர்.

நினைவுகூர, ஆத்மசாந்தி, ஈமைக்கடன் நிகழ்த்த அனும தித்து நீதிவழங்கி உள்ளன. ஆனால் தமிழ் மக்களின் கார்த்தி கைத் தினங்களில் தீபமேற்றி விழா எடுக்கும் நிகழ்ச்சிகளைக் கூட அரச காவல்துறையினர் தடை செய்கின்றனர். ஆனபடி யால் அரசினதும் காவல்துறையி னதும் இத்தகைய மனிதகுலத் திற் கெதிரான இறந்தவர்களின் ஆத்மாக்களை நினைவுகூர்ந்து ஈமைக் கடன் செய்யும் மக்களை கூட மறுக்கின்ற அரசின் ஜன நாயக விரோத நடவடிக்கைக ளையும் மக்களாகிய நாம் ஜன நாயக வழியில் எதிர்த்து நிற்க வேண்டும்.

கொறொனாதொற்றுநோயைப் பரவவிடாமல் செயற்பட வேண் டிய பொறுப்பையும் நாம் சுமந்து நிக்கின்றோம் என்பதை மனதில் நிறுத்தவேண்டியுள்ளோம். எவ் வாறெனினும் இறந்த எம்மை விட்டுப் பிரிந்த ஆத்மாக்களுக் குப் பிரார்த்திக்கும் - நினைவு கூரும் - முகமாக ஆத்மகடனை அமைதியாக எம், வாழுமிடங் களில், நம் இதயங்களில் நினைவுகூர்ந்து விளக்கேற்றி ஆத்மகடன் நிறைவேற்றுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இதுமக்கள்அடிப்படைஉரிமை. அதனை நிலைநாட்டுவோம். அத்துடன் தமிழ்த்தேசிய இனங் களுக்கிடையே உள்ள மதங்க ளுக்கிடையில் முரண்பாடு ஏற் படாமல் நல்லிணக்கத்துடன் இந் நினைவேந்தல் நிகழ்ச்சியை முன்னெடுக்க வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுக்கின்றோம். - என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருட்டுக்களுடன் தொடர்புடைய நால்வர் வசமாக சிக்கினார்கள்!

(வவுனியா நிருபர்)

வவுனியா மற்றும் கிளி நொச்சி பகுதிகளில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய நால்வர் வாள் களுடன் கைதுசெய்யப்பட்டுள்ள னர் என்று வவுனியா பொலி ஸார் தெரிவித்தனர்.

வவுனியாவில் கடந்த செப் டெம்பர், ஒக்ரோபர் மாதங்களி லும், இம்மாதமும் பல்வேறு திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றன என்று வவுனியா குற் றத்தடுப்பு பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந் தது. இதற்கமைவாக விசார ணை களை முன்னெடுத்த பொலிஸார் குறித்த சம்பவங்கள் தொடர்பில் வாள்களுடன் நான்கு இளை ஞர்களை கைது செய்துள்ளனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப் பட்ட விசாரணைகளில், வவு னியா, சிதம்பரபுரம் பகுதியில் கடந்த செப்ரெம்பர் மாதம் 18 பவுண் நகை திருடப்பட்டமை, அதனைத் தொடர்ந்து ஒக்ரோபர் மாதம் ஆச்சிபுரம் பகுதியில் 10 பவுண் நகை மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் திருடப்பட் டமை, சிதம்பரபுரம் பகுதியில் பல்சர் ரக மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டமை, தெற்கி லுப்பைக்குளம் பகுதியில் மோட் டார் சைக்கிள் ஒன்று திருடப் பட்டமை, இம்மாதம் உக்குளாங் குளம் பகுதியில் ஆலயத்துக்குச் சென்ற பெண் ஒருவரிடம் 3 பவுண் சங்கிலி அறுத்துச் செல் லப்பட்டமை மற்றும் கிளிநொச்சி உதயநகர் பகுதியில் சங்கிலி அறுக் கப்பட்டமை மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டமை ஆகிய சம்பவங்களுடன் குறித்த நால்வருக்கும் தொடர்பு இருந் தமை விசாரணைகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், அவர்களிடம் இருந்து 2 மோட்டார் சைக்கிள், 4 வாள் கள், தாக்குதலுக்கு பயன்படுத்தப் படும் பொல்லுகள், 15 பவுண் நகை, முகத்தை மறைக்கும் கறுப் புத் துணி என்பன மீட்கப்பட்டுள் ளன. அவர்களிடம் மேலதிக விசா ரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், நீதிமன்றில் முற் படுத்த நடவடிக்கை எடுத்துள்ள தாகவும் கூறினர்.

## விடுவிக்கப்பட்ட...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி..)

தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலை யில் கடந்த 15 ஆம் திகதி 23 மீனவர்களுக்கும் 10 வருடங்க ளுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை பருத்தித்துறை நீதி வான் நீதிமன்றத்தால் விதிக் கப்பட்டதன் பெயரில் தாயகம் திரும்பத் தயாராகினர்.

இந்நிலையில், இந்த மீன வர்கள் அனைவரையும் மீரிக மவுக்கு அழைத்துச் செல்லும் நோக்கில் மேற்கொண்ட பரி சோதனையில் மூவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதால் கொரோ னாத் தொற்று இனங்காணப் பட்டவர்கள் கிளிநொச்சியில் உள்ள வைத்தியசாலைக்கு மாற்றப்படுகின்றனர்.

இதன் காரணமாக விடுவிக் கப்பட்ட மீனவர்கள் தாயகம் திரும்புவதில் மேலும் காலதாம தம் ஏற்படக் கூடும் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.


## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல் களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள 076 443 8619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

# மாத்தறை போதனா வைத்தியசாலையில் சிசுக்களின் சடலங்கள் குவிந்துள்ளன

மாத்தறை வைத்தியசாலையில் பெரும் எண்ணிக்கையிலான சிசுக்களின் சடலங்கள் இருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இறுதிக் கிரியைகளை மேற்கொள்வதற்காக எடுத்துச் செல்லப்படாத சிசுக்களின் சடலங்கள் மற்றும் உடல் பாகங்களே இவ்வாறு குவிந்து கிடக்கின்றன என வைத்தியசாலை வட்டாரத் தகவல்களை மேற்கோள்காட்டி சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கருக்கலைப்பு செய்த சந்தர்ப்பங்கள், இறந்தே பிறந்த சிசுக்கள், சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்ட உடல் பாகங்கள் உள்ளிட்டவை இவ்வாறு பிணவறையில் பேணப்பட்டு வருகின்றன எனக் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வாறு நீண்ட நாள்களாக சிசுக்களின் சடலங்கள் மற்றும் உடல் பாகங்கள் குளிரூட்டியில் வைக்கப்பட்டுள்ளமையால் ஏனைய சடலங்களை வைக்க முடியாத நிலைமை உருவாகியுள்ளது. பிணவறையின் குளிரூட்டிகள் உரிய முறையில் செயற்படாத காரணத்தால் கடுமையான துர்நாற்றம் வீசத் தொடங்கியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சடலங்கள் இவ்வாறு குவிந்து கிடக்கும் பிணவறைக்கு அருகில் கர்ப்பிணித் தாய்மார் சிகிச்சை பெறும் விடுதி காணப்படுவதாகவும், இது தாய்மாருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறெனினும், சடலங்கள் குவிந்து கிடப்பது பற்றி தமக்கு இதுவரையில் அறிவிக்கப்படவில்லை என வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் மல் காந்தி மெதிவக்க தெரிவித்துள்ளார்.

# சீன உர நிறுவனத்துக்குக் கொடுப்பனவு செலுத்த விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை மேலும் நீடிப்பு

நாணய கடித அடிப்படையில் சீன உர நிறுவனத்துக்கு கொடுப்பனவு செலுத்த, விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த தடையை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நீடிக்க கொழும்பு வணிக மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தீங்கு விளைவிக்கும் பக்றீரியா கொண்ட உரத்தை இறக்குமதி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள, சீன நிறுவனத்திற்கும் அதன் உள்ளூர் பிரதிநிதிக்கும், இலங்கையின் அரச வங்கியால் கடன் கடிதத்தின் கீழ் பணம் செலுத்துவதற்கு எதிரான தடையுத்தரவே இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளது.
















*Jaffna College Institute of Technology*
*Calls for the following courses*

Computer Certificate Courses *( 3 – 4 months Part time)*

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

**Commencement in November 2021**
**At Our Jaffna Centre along**
**(Jaffna College Undergraduate dept. Building)**
**464 Hospital Road**
**Jaffna.**
**For further details contact**
**Tel no: 0212250975/0212223382**
**Email: ejcit@sltnet.lk.**

## மகளிர் புனர்வாழ்வுக்கு மத்திய நிலையங்கள்

போதைப்பொருளுக்கு அடிமையாகிவரும் பெண்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்காக புதிய மத்திய நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் போதைக்கு அடிமையாகி சிறைச்சாலையில் இருப்பவர்களைப் புனர்வாழ்வு மத்திய நிலையங்களுக்கு அனுப்பும் எண்ணிக்கையை அதிகரிக்க இருக்கின்றோம் என நீதி அமைச்சர் அலிசப்றி தெரிவித்தார்.

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் காரியாலயத்தில் தற்போது இடம்பெற்றுவரும் நடவடிக்கை மற்றும் எதிர்கால வேலைத்திட்டம் தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலின்போது கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்-

போதைப்பொருளுக்கு அடிமையாகி இருப்பவர்களால் சமூகம் பாரிய அழுத்தங்களுக்கு ஆளாகி இருக்கின்றது. அதனால் அவ்வாறானவர்களை புனர்வாழ்வளிப்பதற்கு தேசிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

போதைக்கு அடிமையாகி இருப்பவர்களை சிறைப்படுத்தி வைப்பதற்குப் பதிலாக அவர்களை முறையாக புனர்வாழ்வளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எதிர்காலசந்ததியினரை போதைப்பொருள் பாவனையில் இருந்து பாதுகாத்துக் கொள்வதாக இருந்தால் இதுதொடர்பில் சமூகத்தை பரந்தளவில் அறிவுறுத்த வேண்டும்.

அத்துடன் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் காரியாலயத்தால் போதைப்பொருளுக்கு அடிமையாகி இருக்கும் நபர்களை புனர்வாழ்வளித்து, அவர்களை சமூகத்துக்கு பயன் தரும் வகையில் உருவாக்கி சமூத்துடன் இணைக்கும் செயல் வரவேற்கத்தக்கது.

அவர்கள் புனவர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டதன் பின்னர் அவர்கள் தொடர்பில் தேடிப்பார்க்கும் நடவடிக்கையை சரியாக மேற்கொள்ளவேண்டும்.

மேலும் போதைக்கு அடிமையாகியவர்களை சிறைப்படுத்துவதன் மூலம் அவர்களை இந்த நிலைமையில் இருந்து மீட்பது கடினமான செயல். அதனால் எதிர்காலத்தில் இவ்வாறானவர்களை புனர்வாழ்வளிக்க அனுப்பும் எண்ணிக்கையை அதிகரிக்க இருக்கின்றோம்.

புதிய புனர்வாழ்வு மத்திய நிலையங்களை அமைப்பதன் மூலம் அடுத்துவரும் வருடங்களுக்குள் புனர்வாழ்வளிக்க அனுப்புபவர்களின் எண்ணிக்கையை முறையே 8,000வரை அதிகரிக்க இருக்கின்றோம்.

அத்துடன் போதைக்கு அடிமையாகி இருக்கும் பெண்களை புனர்வாழ்வளிப்பதற்காக கவனம் செலுத்தி இருக்கின்றோம். எதிர்வரும் காலத்தில் புதிய மத்திய நிலையங்களை அமைக்கும்போது இதற்காகவும் சந்தர்ப்பம் வழங்கப்படும். என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.11.2021 இல் வெளியிடப்பெற்றது.



பாகம் 05

# குயில் கூடு

**மதிவதனி இராஜசேகரன்**

இரவு 9 மணியாகியதை இலங்கை வானொலி செய்தி வாசிப்புத் தெளிவு படுத்திக் கொண்டிருந்தது. வானொலியில் வரவு - செலவுத் திட்டம் பற்றியும் இடைநடுவில் ஏற்படுத்தப்பட்ட கட்டாய எரிபொருள் தட்டுப்பாடு பற்றியும் பொறிபறக்கும் விவாதம் வானொலி செய்தியில் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அலெக்ஸ் கட்டிலில் படுத்துக் கொண்டு வானொலிச் செய்தியைச் செவிமடுத்துக் கொண்டிருந்தான். தனது வேலைகள் யாவையும் முடித்து மெதுவாக மேல்கழுவி சுத்தமான இரவுடையை அணிந்துகொண்டு அறைக்குள்நுழைந்தாள் நிர்மலா. அலெக்ஸ்னது சிந்தனையாவும் நாட்டின் பொருளாதாரம்பற்றிய சிந்தனையாகவே காணப்பட்டிருக்க நிர்மலாகட்டிலைநெருங்கிஅவன் அருகேபடுத்துக்கொண்டு ஒருக்கழித்துத் திரும்பி அவன் மேல் தனது கரங்களைப் போட்டு அவனது சிந்தனையைத் தன் பக்கம் திருப்பினாள்.. ஓ வந்துட்டியோ... கவனிக்கவில்லையடி. சரி... சரி... சொல்லு... என மனைவியின் எதிர்பார்ப்பு தொனித்த முகத்தைக் கண்டவன் அவளது கருத்தை அறிய தானும் திரும்பி அவளைக் கட்டிப்பிடித்துக் கொண்டான். அவளது முகவாயைத் தனது பக்கம் திருப்பியவன் புருவங்களை உயர்த்தி வாய் மொழியின்றி என்ன...? எனக் கேள்வியைப் பார்வையாலே உணர்த்தி நின்றான். நிமிர்த்திய மனைவியின் முகம் சிந்தனை வயப்பட்டிருப்பதைக் கண்ட அலெக்ஸ் அடி செல்லம் என்னடி...? சொல்லன் என்றான். நிர்மலா அவனது விரல்களைப் பற்றியபடியே கூறத் தொடங்கினாள். இல்லையப்பா... நீங்க அந்த உங்கட சினேகிதர் டொக்டரிட்ட கதைச்சனிங்களல்லோ. என்ன செய்யப் போறீங்க... என்ன கேட்கப் போறீங்க? எப்ப போகப் போறம் அவரிட்ட? அட்வைஸ் மட்டுமா...? இல்லை நீங்க, நான் செக்கப்பும் செய்யப் போறமா...? எனக் கேள்விகளை அடுக்கிக் கொண்டு போனாள்... ஓய்... ஓய்... முதலிலே நீ கேள்விகளை அடுக்குறதை நிற்பாட்டுடி... ஒவ்வொன்றாகக் கேள் சொல்லுறன் என்றான். தனது வாய்க்குள் சிரித்தபடியே சரி நான் கேட்டதுக்கு நீங்க ஒவ்வொன்றாக மறுமொழி சொல்லுங்கோ என்றாள் நிர்மலா. சரி சரி சொல்லுறன். இஞ்சவா அவளை இறுக்கி அணைத்தவனாக நிம்மிக்குட்டி இஞ்சபார் நாம் இந்த புதன்கிழமை டொக்டரைச் சந்திக்குறம்.

நாமரெண்டுபேரும் Check up செய்யப் போறம். டொக்டர் சிறிதரனையும் பிறகு பார்ப்போம். இப்ப இவரிட்டையும் போவம். அட்வைசும் கேட்போம் என்று கூறியவன் நீ பயப்படாதபடி தங்கம் நமக்கொரு தங்கக் குட்டி நிச்சயம் பிறக்கும் என்றான். அது சரியப்பா. நீங்க சொல்லுறது சரிதான். ஆனால் டொக்டர் ஏதாவது மாறிக் கீறி சொல்லிப்படாது. அதுதான் என்ர குழப்பம் என்றாள். எதுவும் மாறிக் கீறிச் சொல்ல மாட்டினம். நாம முதலில போவம். பிறகு அவர் சொல்லுறதைக் கேட்பம். சரிதானே என்றவள் சரிவா. இனி நாம் நித்திரை கொள்ளுவம் என்று கண்சிமிட்டிச் சிரித்தபடி அவள் முன்னம் தலைக் கற்றை முடியைக் கோதி விளையாட ஆரம்பித்தான். இரவின் இனிமைக்கு இதம் சேர்ப்பது போல காற்றலை வழியே 'தனிமையிலே இனிமை காண முடியுமா. நள் இரவினிலே சூரியனும் தெரியுமா' எனும் பாடல் காது வழி புகுந்து நின்றது. இந்தக் கேள்விக் கணைகளோடு சில நாள்கள் பொழுது கரைந்து போனது. நிர்மலாவின் சினேகிதி யூலியற்றும் வீடு சென்றுவிட்டாள். அவளோடு செலவு செய்த நாள்கள் சந்தோசமாகக் கழிந்துவிட நிர்மலா இப்போதுதான் மிகுந்த சிந்தனை வயப்பட்டவளானாள். அன்று புதன்கிழமை. காலை 5 மணிக்கே கடிகாரம் அலாரம் அடித்து ஓய்ந்தது. நிர்மலா எழும்பி வானொலியின் ஸ்விச்சைத் தட்டிவிட்டாள். தென்றல் வானொலியின் தேனான பாடல்கள் ஒலிக்க ஆரம்பித்தன. விடிகாலைப் பொழுதில் மனதின் உற்சாகத்தினை உசுப்பிவிட இலங்கை வானொலிக்கு நிகர் வேறெதுவும் அடித்துவிடாது என நினைத்தவள் எழுந்து கொண்டாள். சோம்பல் முறித்தவள் மனதுக்கும் கண்ணுக்கும் பிடித்தமான தனது கணவனின் ஆசைக்கரங்களைத் தன்னிடமிருந்து விலக்கிக் கொண்டவள் அவளது முன்னெற்றியில் முத்தமிட்டு எழுந்து கொண்டாள். இன்றுதான் அவள் கணவன் அலெக்ஸ் அந்த நண்பன் டொக்டரிடம் அப்பாயின்ட்மென்ட் எடுத்தநாள். மனம் துடித்த எதிர்பார்ப்பு அத்துடன் மனம் சொல்லும் பயப்பிராந்தி என்கிற இருவேறுபட்ட உணர்வுகளில் சிக்கித் தவித்தவளாக தனது வேலைகளில் மும்முரமானாள் . நிம்மி. டே நிம்மி Bed Tea தாவனடி... என்ற கணவனின் குரல் காதில் விழ தோசைக்கல்லைச் சூடாக்கி தோசை வார்த்துக் கொண்டிருந்தவள் இதென்னப்பா... பழக்கம் முதலில எழும்பி வாய் கொப்பளிக்காமல் புதுப் பழக்கம் பழகுறீங்க. Bed Tea வேணுமோ உங்களுக்கு... என்றாள். அடியே பயங்கரமாகக் குளிருதுடி. நல்லா சூடாக் கொண்டு வாவன். பிறகு வாய் கொப்பளிக்குறன்.. என்றான். ஓ ஐயாவுக்கு சூடா வேணுமோ. தட்டகப்பை நல்ல சூடாகத் தான் கிடக்கு. கொண்டு வந்து தீத்தி விடவே... என்றாள்.பாதகத்தி நீ செய்தாலும் செய்வாயடி... என்றவன் நிம்மி நிம்மி என்று குசினிக்குள் நுழைந்தவன் அவளை நெருங்கி நின்று கொண்டு தனது ஒற்றைக் கையால் அவளை இழுத்து அணைத்தபடி கூறினான்..

**விடிகாலைப் பொழுதில் மனதின் உற்சாகத்தினை உசுப்பிவிட இலங்கை வானொலிக்கு நிகர் வேறெதுவும் அடித்துவிடாது என நினைத்தவள் எழுந்து கொண்டாள்.**

நிம்மிக்குட்டி இஞ்சபாரன் நாம இரவு செய்த வேலைக்கெல்லாம்... காலைல பல் தீட்டாமல் .. குடிச்சாத்தான் பலன் உண்டாகு மாமடி... என்ர சினேகிதன் அவன் டொக்டர் சொன்னவன் போனில... என்று கூறிக்கொண்டு அவளைத்திருப்பி கண்ணடித்தான். ..அவனது கண்களின் சிரிப்பும் கைகளின் செயலும் அவளுக்கு வெட்கத்தைக் கூட்டி காதுமடல்களைச் சூடாக்கியது... சரி... இஞ்ச என்ன விடுங்கோ பாப்பம்... எப்ப பாரு நிம்மி... நிம்மி... என்று கட்டிப்பிடிச்சுக் கொண்டு என்று கணவனின் கரங்களை விலக்குவது போல பாசாங்கு செய்தாள். கட்டிய கணவனுக்குத் தெரியாதா மனைவியின் செய்கை. பட்டென கரங்களை விடுவித்தவன்... இப்ப சரி போடி... தோசைக் கரண்டியால் சுட்டுவைக்காமல் என்றவன் அவளை விடுவித்து வாய் கொப்பளிக்கவென குளியலறைக்குள் நடந்தான்.

நிர்மலாவின் வாசல் கதவு திறக்கும் சத்தத்துடன் 'நிர்மலா... டேய் நிர்மலா என்கிற குரலோடு உள் நுழைந்தாள் குளோறியா... நீ இண்டைக்கு ஆஸ்பத்திரிக்கு எங்கையோ போறதெண்டல்லோ சொன்னனி. வெளிக்கிடவில்லையோடி... அலெக்ஸ் எங்கே? என்றபடி உள் நுழைந்தாள். அக்கா பாத்றூம்ல நிற்கிறார். இரன்... தேத் தண்ணி குடிச்சிட்டியோ என்றாள். ஓம் குடிச்சிட்டன். ரீ குடிக்கேக்க தான் ஞாபகம் வந்தது. தேயிலை முடிஞ்சு போகுது. அதுதான் நீங்க போயிட்டு வரேக்க அந்த பார்மசியில தேயிலை வாங்கச் சொல்லுவமெண்டு தான் வந்தனான் என்றவள். சரி இந்தா நான் கொஞ்சம் கடலை தாழிச்சனான் என்று கூறிக் கொண்டு ஒரு கோப்பை நிறையச் சுண்டலை அவளிடம் நீட்டினாள். சரி நான் வாறன். நீ வெளிக்கிடு என்று நடக்க ஆரம்பித்தவளை அக்கா நில்லு. இந்த தோசைகளைக் கொண்டு போய்ப் பிள்ளைகளுக்கு குடு என ஒரு பீங்கானில் சில தோசைகளை அடுக்கி அவளிடம் நீட்டினாள். அப்படியே சகலத்தையும் சரி செய்தபடி தானும் வெளிக்கிட ஆயத்தமானாள்.

நிர்மலா உள்ளூர ஓர் பயம், எதிர்பார்ப்பு, குழப்பம் ஆகிய சகல விதமான உணர்வுகளின குழப்பத்தினோடு இன்றைய அந்த முக்கிய நிகழ்வுக்கு ஆயத்தமானாள். கணவன் அலெக்ஸ் கேலியும் கிண்டலுமாக காதல் மனைவியைச் சீண்டி அவளைக் குழப்ப நிலையிலிருந்து இயல்புநிலைக்குக் கொண்டுவர முயற்சி செய்தவனாக அங்குமிங்குமாக அவளுக்கு உதவி செய்தவனாக அலைந்துகொண்டிருந்தான். அவர்களது கார் அந்தத் தனியார் வைத்தியசாலை வளாகத்தை அடைந்துவிட்டிருந்தது. கையில் வைத்திருந்த அந்தப் பெரிய தூக்குப் பையை கையிலெடுத்துக் கொண்டாள். அலெக்ஸ் நிம்மி பார்த்து இறங்கு என்ன? மழை வந்து நிலமெல்லாம் ஒரே சேறாகிக் கிடக்கு. சீலையும் கீழவுள்ள தண்ணியில் விழாமல் தூக்குப் பிடிச்சுக்கோ என்ன? என்றவன் ஓர் எட்டு நடந்து கடந்து அவளிடம் கை நீட்டி அவளை எதிர்ப் பக்கம் வர உதவி செய்தான். இருவருமாக இணைந்து நடந்து வரவேற்பாளர் பகுதியை அண்மித்தபோது வைத்தியசாலைச் சீருடை தாங்கிய ஒருத்தி அவர்களை எதிர்ப்பட்டாள். சேர் நீங்க யாருக்கு அப்போயின்ட்மென்ட். யாரைப் பார்க்க வேணும். நீங்க என்றாள். ஓம் மிஸ். நான் இன்றுகாலை 11 மணிக்கு டொக்டர் ரகுராமோட அப்போயின்ட்மென்ட். அதாவது கைனோகோலொஜிஸ்ட் Dr. ரகுராமைப் பார்க்க வந்திருக்கிறோம் என்றான். ஓ... சரி சரி. கவுண்டர்ல காசு பேய் பண்ணிடுங்கோ. அவையல் கொப்பி ஒன்று தருவினம். வைச்சுக் கொண்டு மேலே போய் 3ம் நம்பர் றூமுக்கு முன்னாலே இருங்கோ. இந்த அம்மாவுக்குத் தானே ட்ரீட்மென்ட் என்றவள் பதிலுக்கு காத்திராமல் நடக்கத் தொடங்கினாள். நிர்மலாவும் அலெக்ஸ்சும் வைத்தியரைச் சந்திக்கும் ஆவலில் மாடிப் படி ஏற ஆரம்பித்தனர்.

தொடரும்....



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் - 198

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**503. அந்த சவாலென்ன?**

அந்த முத்திரை வெளியீட்டினால், நன்றாக அறிந்தும் பல பெயர்வாய்ந்த சட்டத்தரணிகள் தமிழரசுக் கட்சியிலிருந்தும் நாட்டின் இறைமைக்கு சவால் விட்டார்கள். அவர்கள் கேட்ட தமிழரசு, சமஷ்டி என்பவையெல்லாம் 1961 ஆம் ஆண்டு ஒரு நாட்டுக்குள் அமைந்ததே. அந்த சமயம் அதிகாரம் கொண்ட அரசாக இலங்கை அரசாங்கம்தான் நாடளாவிய ரீதியில் அதிகாரம் செய்தது. தபால் முத்திரை அச்சிட்டு அதனை விநியோகிக்கும் அதிகாரம் அவர்களின் கையில்தான் இருந்தது. கச்சேரி மறியல்களைக்



றொய்ஸ் டி மெல்

கைவிட, பின்னணியில் பேச்சுக்கள் நடத்திகொண்டும், அதேசமயம் அதனை பலவீனப்படுத்த முயன்று கொண்டிருந்த அரசுக்கு தமிழரசு முத்திரை விவகாரம் வசதியாக வந்தது. நாட்டின் இறைமைக்குப் பங்கம் விளைவிக்கும் காரியங்களை செய்கிறார்கள் என அதனை அடக்க அவசரகால சட்டத்தை அறிவித்து, இராணுவத்துக்கு அதனை அடக்குவதற்கு அதிகாரங்கள் தரப்பட்டன. இவற்றை அமுல்படுத்தும் ஏற்பாடுகளுக்கு முன் அவைபற்றி இராணுவத்தளபதிக்கும் மந்திரி சபைக்கும் இடையில் ஆலோசனைகள் நடந்தன. பின்னர் மந்திரி சபையின் மிக முக்கிய சிலரோடும் (பாதுகாப்புக்குழு) ஆலோசனை நடந்தது. அதில் இராணுவத்தின் சார்பில் றொய்ஸ் டி மெல், கடற்படைத் தளபதி ராஜன் கதிர்காமர், பொலிஸ் பிரதி அதிகாரி ஒஸ் மண்ட்.டி.சில்வாவும் பங்குபற்றினர்.

அந்தச் சந்திப்புக்களில் பேசப்பட்ட விடயங்கள் பற்றி பின்னால் வழக்கில் றொய்ஸ் டி மெல்லும் மற்றோரும் அளித்த சாட்சியங்கள் சிங்களத் தலைவர்களின் மனோபாவம் தொடர்பில் முக்கியமானவை. தடியடிப் பிரயோகம் செய்து, கண்ணீர்ப் புகை வீசி, தேவையானால் துப்பாக்கிப் பிரயோகமும் செய்து, சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுள்ள மக்களையும் அதன் தலைவர்களையும் கலைக்கவும் கைது செய்யவும் அதிகாரங்கள் தரப்பட்டன.

அங்கு பெருவாரியான மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் தடியடி நடத்தப்பட்டாலும், எதிர்த்து அசையாமல் நின்றால், கண்ணீர்ப் புகை வீசினாலும் திரும்பி வந்தாலோ அல்லது புதியவர்கள் அவ்விடத்துக்கு வந்தாலோ என்ன செய்வது என றொய்ஸ் டி மெல் கேட்டதற்கு அளிக்கப்பட்ட விடைதான் இராணுவப் பாதுகாப்பு அதிகாரிகளான தங்களுக்கே தூக்கிவாரிப்போட்டது என அவர் சாட்சியங்களில் விளக்கப்படுத்தினார். அப்படியான அரசு, மக்களைப் பாதுகாக்க ஏற்றதல்ல என்ற எண்ணத்தை அது தங்களுக்கு ஏற்படுத்தியதென்றும் கூறினார். இப்படியான அரசியல் போக்குகளால் நாட்டில் சட்டம், நிர்வாகம், உறவுகள் கெட்டு விடும் எனத் தாங்கள் நம்பினர் எனவும் சாட்சியமளித்தனர்.

**504. அந்தப் பதில்கள் என்ன?**

சத்தியாக்கிரகத்தின் தலைவர்கள், சூத்திரதாரிகள் யாவரும் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாண பொலிஸ் காவலிலோ அல்லது சிறையிலோ வைக்கப்படாமல், பனாகொட இராணுவ முகாமில் வைக்கப்பட வேண்டும். அங்கு அவர்களை சந்திக்க வருபவர்கள், விடுதலை செய்வதின் கட்டுப்பாடுகளை மந்திரி சபை தீர்மானிக்கும்.


சத்தியாக்கிரகிகள் தொடர்ந்தும் போராட்டத்தில் இருந்து வெளியேற மறுத்தால் அவர்களை இழுத்து வாகனங்களில் ஏற்றி, யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு கொண்டு வந்து, அங்கு நாம் ஒரு விசேட புகையிரதம் ஏற்படுத்துவோம், அதில் அவர்களை ஏற்றி பொதுவான பாதுகாப்போடு அனுப்பி விடுங்கள். அந்தப் புகையிரதம் நேராக அனுராதபுரம் வரை வரும்.

அங்கு என்ன செய்வது என கேட்க, பாதுகாப்புக்கு புகையிரதத்தில் வந்தவர்கள் விலகிக்கொள்ளலாம். அங்கு நாங்கள் எங்களது மக்களை (சிங்கள பௌத்தர்களை) ஏற்படுத்துகிறோம். அவர்கள் அவர்களை (ரயிலில் வருவோரை) பார்த்துக் கொள்வார்கள் என என்.கியூ.டயஸ் சொல்ல, பீலிஸ் டயஸ் பண்டாரநாயக்காவை றொய்ஸ் டி மெல் ஏறிட்டு பார்க்க, அவரும் நாங்கள் அப்படித்தான் சிந்தித்திருக்கிறோம். இவர்கள் எல்லோரையும் கைது செய்து வழக்கு போட்டு அவற்றை இழுத்தடித்து, காலத்தைப் போக்குவதில் பிரியோசனமில்லை, ஆனால் அதற்கு இடம்



தமிழரசு முத்திரை

கொடுக்கமாட்டார்கள் என நம்புகிறோம் என்றாராம். அதேசமயம் அவர்களும் இப்படியாக இறைமைக்கு சவால் விடும்



என்.கியூ. டயஸ்

போராட்டங்களை சிந்திக்கமாட்டார்கள் என்பது பேரினவாதி என்.கியூ.டயஸின் சிந்தனை. ஆக அன்றிலிருந்தே அவர்கள் சட்டத்தையோ நீதியையோ சிந்திக்க வில்லை. அரசியலில் எது நீதி? அது சரியானது என நம்பினார்கள்.

**505. சத்தியாக்கிரகிகள் கலைக்கப்பட்ட பின் என்ன நடந்தது?**

தடியடிகளினால் கச்சேரி முன்றிலிருந்து சத்தியாக்கிரகிகள் கலைக்கப்பட்டனர். "தமிழரசு" முத்திரையின் விநியோகத்தை முடக்கி, தமிழரசுத் தலைவர்கள் பனாகொடை இராணுவ முகாமுக்கு மாற்றப்பட்டனர். புகையிரதம் ஒழுங்கு செய்யப்பட்டதா என்பது பற்றி தகவல்கள் வெளிவரவில்லை. ஆனால் சத்தியாக்கிரகிகள் கலைந்து விட்டதால் அதற்கான தேவையும் ஏற்படவில்லை.

இந்த சதி வழக்கில் 24 இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் குற்றம் சாட்டப்பட்டனர். அவர்கள் எல்லோருமே கிறிஸ்தவர்கள். அவர்களில் 12 சிங்களவர், 6 தமிழர்கள், 6 பறங்கியர். இவர்களில் றொய்ஸ் டி மெல்லுக்கு ஜீ.ஜீ. பொன்னம்பலம், தனது தம்பியார் கடற்படைத்தளபதி ராஜன் கதிர்காமருக்காக சாம் கதிர்காமர், தளபதி கேணல் டி சேரத்திற்காக சட்டத்தரணிகள் கே.என்.சொக்ஸி மற்றும் ஜே.ஆரின் சகோதரர் எச்.டபிள்யூ. ஜெயவர்தனா போன்ற பல பிரபல சட்டத்தரணிகள் ஆஜராகினார்கள்.

இந்த வழக்கு ஒரு விதத்தில் கிளர்ந்து எழுந்து வரும் சிங்கள, பௌத்த தேசியத்துக்கு எதிராக அதனை முறியடித்து, காலனித்துவ முதலாளி வர்க்கத்தை தொடர்ந்து பதவியில் வைத்து, அதிகாரத்தை பெரும்பான்மையினர் அல்லாது மற்றோர் கையகப்படுத்தவே சதிப்புரட்சிக்கு முயற்சி செய்யப்பட்டது எனப் படம் போடப்பட்டது. தொடர்ந்து கொண்டிருந்த கத்தோலிக்க ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டமும், தமிழரது சத்தியாக்கிரகமும் முறிக்கப்பட்ட காலப்பகுதியில் பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு அது நியாயமாகவே பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் தாங்கள் நாட்டை எல்லா மக்களின் நன்மைக்காகவும், பாதுகாப்புக்காகவும், ஒழுக்கமற்று, சுயநலம் கொண்டு தங்களை வளர்த்தெடுத்துக் கொள்ள விரும்பிய அரசியல் தற்குறிகளிடமிருந்து மீட்டெடுக்கவே அதனை முயற்சித்தனர் என வாதாடினர்.

இதில் சுவாரசியமானது என்னவெனில் றொய்ஸ் டி மெல்லுக்கு எதிராக எத்தனையோ பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டும், நாடு முழுவதும் எவ்வளவோ சல்லடை போட்டுத் தேடியும், அவரைப் பிடிக்க முடியவில்லை. வழக்கு தொடங்கும் நேரத்தில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் நீதிமன்றில் அவரை ஆஜராக்கினார். பின்னர் அவர் வல்வெட்டித்துறையில் பதுங்கி வாழ்ந்தார் எனவும், அங்கு நடைமுறையிலிருந்த வாழ்க்கை முறையில் இப்படியான பிடியாணைகள் அங்கு செல்லுபடியாவதில்லை எனவும், அது இலங்கைக்குக் கட்டுப்படாத இன்னொரு பிரதேசமாக இயங்குகிறது எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

எல்லா மக்களும் ஏற்று மதித்து நடக்கும் சட்டங்கள் அமையவேண்டுமானால் அவர்களையும் இணைத்து உள்வாங்கினால்தான் முடியும் என்பதை தான் பதுங்கி வாழ்ந்து அந்த நாள்களில் பழகிய மக்கள் மூலம் அறிந்தமையையும், ஆகவே தனது மனச்சாட்சிப் படி புரட்சியை ஒப்பேற்றத்தான் கொடுத்த ஆதரவையிட்டு மனக்கிலேசம் கொள்ளவில்லை என்று சாட்சியம் கொடுத்தார். பொதுவில் எதிர்வாதிகளின் வாதம், இந்த அரசின் பிரதிநிதிகள் தங்களது சொந்த அரசியல் இலாபங்களுக்காக எல்லா இனமக்களையும் பாதுகாக்க கட்டமைக்கப்பட்ட பொலிஸ், இராணுவப் பகுதிகளை சிங்கள, பௌத்தமயமாக்கி, பாதுகாப்பு அவர்களுக்கு முதன்மையானது, சிறுபான்மை இனங்களால் அவர்களுக்கு எழக்கூடிய பாதிப்புக்களைத் தடுத்து நிறுத்துவதன் தான் அவர்களது முதற்கடமை என்ற சித்தாந்தம் நாட்டின் ஒற்றுமையை அழிக்கும், மற்றவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாது என்பதாக அமைந்தது. வழக்கின் தகவல்கள் இவற்றின் ஆதாரங்களைத் தந்தாலும் பொலிஸூம் முப்ப



பீலிக்ஸ்

டைகளும் சிங்கள, பௌத்த மயமாக்கப்பட்டு அவை முள்ளிவாய்க்காலில் முடிந்தன.

(வளரும்...)

# மத்திய வங்கி முன் போராட்டம் நடத்த தன்னால் முடியாது என்கிறார் கம்மன்பில

வெளிநாட்டுக் கையிருப்பு வரையறுக்கப்பட்டதாகக் காணப்படுவதால் மசகு எண்ணெய் இறக்குமதிக்கு நெருக்கடி ஏற்பட்டது.

அதன் காரணமாகவே சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை 50 நாள்களுக்கு மூடியுள்ளோம்.

இதனால் எரிபொருள் விநியோக கட்டமைப்பிற்கும், மின் விநியோகத்துக்கும் எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்கத்தினர்கள் தற்போது போராட்டத்தில் ஈடுபடுகின்றமையால் டொலர் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது.

வலுசக்தி அமைச்சர் என்ற ரீதியில் என்னால் டொலர் பிரச்சினைக்குத் தீர்வு காணவும், டொலர் கோரி மத்திய வங்கி முன்பாக போராட்டத்தில் ஈடுபடவும் முடியாது எனவும் குறிப்பிட்டார்.

வலு சக்தி அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மீளத் திறக்குமாறு வலியுறுத்தி தொழிற்சங்கத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமையை அறிய முடிகிறது.

கையிருப்பில் உள்ள வரையறுக்கப்பட்ட வெளிநாட்டு நிதியை அத்தியாவசிய தேவைகளுக்காகப் பயன்படுத்த வேண்டும் என்பதற்காக சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மூடும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபடுவதால் டொலர் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு மசகு எண்ணெயை கொள்வனவு செய்ய முடியும் என்றால் நாங்களும் போராட்டத்தில் இணைந்துகொள்ளத் தயார்.

போராட்டத்தில் ஈடுபடுவதால் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என்பதை தொழிற்சங்கத்தினர் விளங்கிக்கொள்ள வேண்டும்.

வலு சக்தி அமைச்சர் என்ற ரீதியில் என்னால் டொலர் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது.

மசகு எண்ணெய் இறக்குமதிக்கான மத்திய திறைசேரி அமைச்சு நிதி வழங்க வேண்டும்.

அவ்வாறாயின் நானும் மத்திய வங்கியின் முன்பாக 'டொலர் தா' என போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என்பது சாத்தியமற்றது.

நிறுவனத்தைப் பாதுகாப்பதற்காக தூரநோக்கு சிந்தனையுடன் தீர்மானங்கள் எடுக்கும் போது அதற்கு தொழிற்சங்கத்தினர் ஆதவு வழங்க வேண்டும்.

தீர்மானம் தவறாயின் அதற்கு மாற்று தீர்மானங்களை எவரும் முன்வைக்க முடியும் அவ்வாறு செயற்படுவதை விடுத்து தொழிற்சங்கத்தினர் போராட்டத்தில் ஈடுபடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

உலகில் பலம் வாய்ந்த நாடுகள் வலுசக்தி துறையில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள நிலையில் கனிய எண்ணெய் உற்பத்தி செய்யாமல், டொலர் பிரச்சினையையும், எண்ணெய் களஞ்சியப்படுத்தல் உள்ளிட்ட பல பிரச்சினைகளையும் எதிர்கொண்டு தடையில்லாமல் எரிபொருள் விநியோகிப்பதையிட்டு மக்கள் மகிழ்ச்சியடைய வேண்டும்.

மசகு எண்ணெய் இறக்குமதிக்கு இல்லாத டொலர் சுத்திகரிக்கபட்ட எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கு உள்ளதா என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வினவியுள்ளார் .



சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திரிகரிப்பு நிலையம் பழைமையானது. ஆகையால் ஒரு பீப்பாய் ஒன்றில் 14 சதவீத பெற்றோலும், 29 சதவீதம் டீசலும் பெற்றுக் கொள்ள முடியும்.

கடந்த மாதம் மசகு எண்ணெய் ஒரு பீப்பாயின் விலை 85 டொலர்களாகக் காணப்பட்டது. ஆனால் தற்போது ஒரு பீப்பாய் டீசலின் விலை 93 டொலர்களாகவும், பெற்றோல் பீப்பாயின் விலை 95 டொலர்களாகவும் உயர்வடைந்துள்ளன.

ஆகவே மசகு எண்ணெய் பெறுவதை காட்டிலும், சுத்திகரிப்பட்ட எரிபொருளை பெற்றுக்கொள்வது இலாபமானது.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மூடியதால் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் ஏகபோக உரிமை இல்லாமல் போகும் எனக் குறிப்பிடப்படுவது முற்றிலும் பொய்யானது.

அதிகமழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்றுள்ள காரணத்தால் மின்சாரத்துறை எம்மிடம் எரிபொருளை பெற்றுக் கொள்வதில்லை.

வரையறுக்கப்பட்ட வெளிநாட்டு கையிருப்பு ஊடாக கொண்டு வரப்பட்ட மசகு எண்ணெய் ஊடாக சுத்திகரிக்கப்பட்ட 13 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எரிபொருள் பாவிக்கப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

ஆகவே மசகு எண்ணெய் இறக்குமதி தடை செய்யப்பட்டதால் மின்துண்டிப்பு இடம்பெறும் என குறிப்பிடுவது பிறிதொரு பொய்யாகும். ஆகவே, சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மூடியதால் நாட்டில் எரிபொருள் விநியோக கட்டமைப்பிற்கும், மின் விநியோகத்துக்கும் எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது.

**கேள்வி:** எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டதைத் தொடர்ந்து அங்கு உற்பத்தி செய்யப்பட்ட எரிபொருள்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**பதில்:** சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் 37சதவீதம் நெப்தா, பெற்றோல் வகையிலான எரிபொருள் உற்பத்தி செய்யப்படுகின்றன. நீர்மின் உற்பத்தி காரணமாக அந்த உற்பத்திகளை மின்சாரத்துறை அமைச்சு பெற்றுக் கொள்ளவில்லை. உற்பத்தி செய்யப்பட்ட எரிபொருள்கள் சேமிக்கப்பட்டுள்ளன.

சீமெந்து, பால் மா, அத்தியாவசிய திரவ பொருள்களை இறக்குமதி செய்வதில் டொலர் பிரச்சினை காணப்படுகிறது அவ்வாறான நிலையில் மசகு எண்ணெய் இறக்குமதிக்காக டொலர் செலவு செய்வது சரியானதா?

**கேள்வி:** மசகு எண்ணெய் இறக்குமதியைக் காட்டிலும், சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் இறக்குமதி இலாபமானது எனக் குறிப்பிடுகின்றீர்களா?

**பதில்:** நாட்டில் தற்போது டொலர் பிரச்சினை காணப்படுகிறது. இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது விதிக்கப்பட்டுள்ள வரி சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள்களுக்கு குறைவாக உள்ளதால் 15 ரூபா இலாபம் காணப்படுகிறது.

இலாபம் ரூபாவில் காணப்படுகிறது ஆனால் ஒரு பீப்பாய் பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதிக்கு 93.65 டொலர் தேவைப்படுகிறது. ஆகவே, சூழ்நிலையை கருத்திற்கொண்டு சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளை இறக்குமதி செய்யத் தீர்மானித்தோம். என்றார்.

## தாதியர் பதவியுயர்வுக்கு நடவடிக்கை எடுக்குக!

### வடக்கு ஆளுநர் பணிப்பு

வட மாகாணத்தில் சிரேஷ்ட தர தாதியர்களின் முறையான பதவி உயர்வுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு மாகாணப் பொதுச்சேவை ஆணைக் குழுவுக்கு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா பணிப்புரை விடுத்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்–

வடக்கு மாகாண சபையால் உரிய காலப் பகுதியில் தாதியர்களின் தர அடிப் படையில் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். அவ்வாறு அவர்களின் பதவி உயர்வு வழங்காத சந்தர்ப்பங்களில் திறமையற்ற நிர்வாகம் வடக்கில் இடம்பெறுகின்ற மாதிரியை ஏற்படுத்தி விடும்.

பொதுச்சேவை ஆணைக் குழ வாரத்தில் ஒரு முறை கூடி தமக்கு வழங்கப்பட்ட பொறுப்பு களைச் சரிவர நிறைவேற்ற வேண்டும்.

பொதுச்சேவை ஆணைக் குழு வழங்கப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் நான்கு வாரங்களுக்குள் சம்பந்தப்பட்டவர்களுக்குப் பதிலளிக்க வேண்டும். அது மட்டுமல்லாது மாதத்தில் ஒருமுறை ஒவ்வொரு மாவட்டத்துக்கும் சென்று மதிப்பீடுகளையும், பிரச்சினைக்கான தீர்வுகளையும் முன்வைக்க வேண்டும்.

மேலும் தாதியர்கள் பதவி உயர்வு தொடர்பில் விரைவாகச் செயற்பாட்டு நடைமுறைகளை மேற்கொள்ளுமாறு வடமாகாண ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார்.

## நாடாளுமன்றத்தில் யொஹானிக்கு 23 ஆம் திகதி விசேட கௌரவிப்பு!

'மெனிகே மகே ஹித்தே' புகழ் பிரபல பாடகி யொஹானி டி சில்வாவிற்கு எதிர்வரும் 23 ஆம் திகதி நாடாளுமன் றில் விசேட கௌரவிப்பு நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.




பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தன மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த கௌரவிப்பு நிகழ்வில் பங்கேற்க உள்ளனர். நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் பெண் நாடாளுமன்ற உறுப்பினர் ஒன்றியத்தால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யொஹானி சபாநாயகர் கலரிக்கு அழைத்து வரப்படுவார் எனவும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவருக்கு வாழ்த்துரைப்பார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்ற விழா மண்டபத்தில் யொஹானிக்கு விசேட கௌரவிப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என நாடாளுமன்ற பிரதி செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

யொஹானியின் மெனிகே மகே ஹித்தே பாடல் உலகம் முழுவதிலும் பெரும் வரவேற்பை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## தென்னிந்தியத் திருச்சபைக்கு புதிய பேராயரை தெரிவு செய்ய சென்னை சினட் சபை ஆராய்வு

வட்டு. தென்னிந்திய திருச்சபை பேராலயத்திற்கு புதிய பேராயரை நியமிக்க சென்னையிலுள்ள சினட் சபை துரித நடவடிக்கைளை மேற்கொண்டுள்ளது.

தற்போதுள்ள தென்னிந்திய திருச்சபை பேராயரின் காலம் அடுத்த ஆண்டு 2022 நவம்பர் 9 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது.

இதனையடுத்து புதிய பேராயரை நியமிப்பதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையுடன் இதன் விவரங்களை வட்டுக்கோட்டையிலுள்ள தென்னிந்திய திருச்சபை பேராலய செயலாளருக்கு சென்னையிலுள்ள சினட் சபை கடிதம் மூலம் அறிவித்துள்ளது.